

# அண்ணா காவியம்

# அண்ணா காவியம்

## கவிஞர் கருணானந்தம்

வெளியீடு :

பூவழகி பதிப்பகம்

29/2, சீனிவாசப்பெருமாள் சன்னதி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

பதிப்புரிமை

திருத்திய இரண்டாம் அச்சு 1986

முகப்பு ஓவியம்: ஜமால்

விலை ரூ. 14-00

அச்சிட்டோர்:
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-14.

# தந்தை பெரியார்
அவர்கள் வழங்கிய

# பாராட்டுரை

நண்பர் ஆனந்தம் அவர்களால் கவி உருவாக செய்யப் பட்ட "அண்ணா காவியம்" என்னும் கவிதை நூலைப் பார்த்தேன்.

மிகுதியும் சுவைத்தேன். மகிழ்ச்சியும் அடைந்தேன்.

அக்கவிதை நூல் கவிதைகள் பெரிதும் அண்ணா அவர் களின் வாழ்க்கைத் தொகுப்பாகவும் அவரது அருங்குணங் களினது சித்தரிப்பாகவும் காணப்படுகிறது.

நண்பர் ஆனந்தம் கவிதை இயற்றுவதில் வல்லவர்.

ஆனாலும் அக்கவிதை புனைப்பில் மிக்க சுவையும் அருங் கருத்துக்களும் மலிந்திருப்பது மிகுதியும் பாராட்டற் குரியதாகும்.

நண்பர் ஆனந்தம் அவர்கள் எனக்கு அவரது மாணவப் பருவ காலம் தொட்டே நண்பராகவும் நம் இயக்கக் கருத்துக்களைத் தனது வலிவு மிக்க கொள்கையாகவும் கொண்டவராவார்.

அவர்கள் 30, 35 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடி அரசு காரியாலயத்தில் ஓய்வு நேரப் பணியாற்றி மிக்க உதவி புரிந்து வந்திருக்கிறார்.

ஆனந்தம் அவர்கள் கவி இயற்றுவதில் மாத்திரமல்லா மல் அரும் கருத்துக்கள் கொண்ட வியாசங்கள் எழுதுவதி லும் திறமை கொண்டவர்.

அவர் இப்போது "அண்ணா காவியம்" என்ற அரிய நூலைத் தொகுத்து இருப்பது மாத்திரமல்லாமல் இதற்கு முன்பும் "பூக்காடு" என்ற ஒரு சுவை பொருந்திய கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டிருப்பதோடு "கனி அமுது" என்கின்ற கவிதைத் தொகுப்பு நூலையும் வெளியிட்டிருக் கிறார்.

இவையாவும் அரிய கருத்துக்களுடன் சுவைமிக்க அழகு படத் தொகுத்திருப்பதுடன் மிக்க எளிய நடையில் வசனம் போல் படித்து உணரும் தன்மையில் தொகுத்திருப்பது மிகுதியும் பாராட்டத் தக்கதாகும்.

**ஈ. வெ. ராமசாமி**
**15-12-72**

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்

# சிந்து பாடும் சிற்றாறு

என்னருமை நண்பர் கவிஞர் ஆனந்தம், அண்ணா காவியம் தீட்டியுள்ளார்.

இதற்குப் பெரியாரின் முன்னுரையும் கிடைத்துள்ளது. பெரியார் முன்னுரையாகத் திகழ்ந்துதானே அறிஞர் அண்ணா புத்தகமாக நமக்குக் கிடைத்தார். அந்தப் பெரு நூலின் சில பக்கங்களாக நாம் இருக்கின்றோம்.

அழகான கவிதை வரிகளில், நாடகக் காட்சி போலவும், உரைநடை ஓவியம் போலவும், கதை சொல்லும் திறன் படைத்த கவிஞர் ஆனந்தம், அண்ணாவின் வரலாற்றுக் காவியத்தை, எளிய எழிலார்ந்த நடையில் உருவாக்கியிருக்கிறார்.

பெரியாருடனும், அண்ணாவுடனும், இயக்கத் தலைவர்களுடனும் நெருங்கிப் பழகி, தடம் தவறாப் பாதையில், நீண்ட நெடுநாட்களாக இலட்சியப் பயணம் புரியும் நண்பர் ஆனந்தம் அவர்கட்கு, இந்தக் காவியம் புனைவது எளிதேயாகும்.

அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம், வெள்ளி விழா ஆண்டில் நடைபோடும் நேரத்தில் இந்த ஏடு வெளிவருவது மிகப் பொருத்தமாகும்.

**''பெரியாரின் பேரெதிர்ப்பைச் சமாளித் துத்தான்**
**பெருமையுடன் பதினைவர் உள்ளே சென்றார்,**
**பெரியார்மேல் சுடுசொற்கள் வீசி விட்டுப்**
**பெரியவராம் நேருபிரான் சென்னை வந்தார்,**
**பெரியாரைத் தானேயென் றில்லை அண்ணா**
**''பிடிகருப்புக் கொடி'' எனவே ஆணை யிட்டார்,**
**பெரியமன அரசினரோ அனைவ ரையும்**
**பிடித்தடைத்தார் சிறைக்குள்ளே! ஆயின் என்ன? '**

என்ற வரிகளைப் படிக்கும்போது கவிதை ஆற்றலை மட்டுமல்ல; அண்ணாவின் அரசியல் பெருந்தன்மையையும் எண்ணி எண்ணிப் பெருமை கொள்கிறோம்.

''சிந்து பாடும் சிற்றாறு'' இந்தக் கவிதை ஏடு எனச் சுருக்கமாகக் கூறிவிடலாம்.

அன்புள்ள,

**மு. கருணாநிதி**

28-8-74

# தொகுப்புத் தோரணங்கள்

## கவிஞர் அ. மறைமலையான்

'காவியம்' என்னும் இலக்கிய மாளிகையைக் கலை யழகோடு எழுப்பும் கைதேர்ந்த சிற்பியாகத் திகழ்பவர் இன்று கவிஞர் கருணானந்தம் அவர்கள். இதற்கு ஓர் எடுத்துக்காட்டான எழுத்து வைரமே 'அண்ணா காவியம்.'

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பாட்டுடைத் தலைவன் ஆக்கி, முதன் முதலில் ஒரு காவிய மாளிகை எழுப்பி அதிலே அவரை அமர்த்திச் சிறப்பித்த தனிப் பெருமை கவிஞர் கருணானந்தம் அவர்களையே சாரும்.

'வெண்பாவிற்குப் புகழேந்தி; விருத்தத்திற்கு வில்லி புத்தூரார்'—என்று சொல்லுவார்கள். அந்த வில்லிபுத் தூராரையே வெல்லக் கூடிய விருத்தங்களை இந்நூலில் வெல்லத் தமிழில் விரித்திருக்கிறார் கவிஞர்.

இவரது கற்பனை கொஞ்சும் கவிதை நெஞ்சத்தி லிருந்து எண்சீர் விருத்தங்கள் மட்டுமே பழச்சாறாய்ப் பாய்ந்து வரவில்லை; அகவற்பாக்களும் சந்தப்பாக்களும் கூடப் பால்சோறாய் வழிந்தோடி வந்துள்ளன.

பொதுவாக ஒரு நூலுக்கு வெளியீட்டு விழா நடத்து வதுதான் தமிழ்நாட்டில் வாடிக்கை.

எந்த ஒரு நூலும் வெளிவந்த சில மாதங்களுக் குள்ளேயே திறனாய்வுக் கருத்தரங்குகளையோ—அவற்றை விடப் பட்டிமன்றத்தையோ—சந்தித்ததாக வரலாறு இல்லை.

அந்தப் புரட்சி வரலாற்றையும் படைத்த முதல் நூலாக நிமிர்ந்து நிற்கிறது கவிஞர் கருணானந்தம் அவர்களது கைவண்ணத்தில் மலர்ந்துள்ள 'அண்ணா காவியம்.'

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில்தான் 'அண்ணா காவியம்' முதன் முதல் வெளியிடப் பெற்றது. எவ்வளவு பொருத்தமான அரங்கேற்றம் அது!

சென்னை திருவள்ளுவர் மன்றம் அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நூலை வெளியிட்டார்.

முதற்படியை ஆற்காடு வீராசாமி அவர்கள் நூறு ரூபாய் கொடுத்துப் பெற்றுக் கொண்டார். இரண்டாவது

படியை நூறு ரூபாய் தந்து ஆர். டி. சீதாபதி அவர்கள் வாங்கிக் கொண்டார்.

திருவள்ளுவர் மன்றச் செயலாளர் டி. ஆர். பாலு அவர்கள் முன்னின்று நடத்திய அந்த விழாவுக்குத் திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தலைவர்களும், தொண்டர்களும் பொதுமக்களும் திரளாக வந்து சிறப்பித்தனர்.

அதே கலைவாணர் அரங்கத்தில்தான் 'அண்ணா காவியம்' நூலுக்கு அடுத்த திங்களே நடைபெற்றது இன்னொரு பாராட்டு விழா!

கவிஞர் பொன்னடியான் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தினர் அப்பாராட்டு விழாவை முன்னின்று நடத்தினர்.

அப்போது தமிழக அமைச்சராக இருந்த மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கள், மாண்புமிகு மன்னை நாராயணசாமி அவர்கள், மாண்புமிகு அன்பில் தருமலிங்கம் அவர்கள், மாண்புமிகு இராசாங்கம் அவர்கள், சட்ட மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், சட்டமன்றத் துணைத் தலைவர் நா. கணபதி அவர்கள் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரைகள் ஆற்றினர். தமிழறிஞர்கள் மகாவித்துவான் வேணுகோபாலப் பிள்ளை, பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் அவ்வை நடராசன் ஆகியோரும் அவ்விழாவில் பாராட்டுரை வழங்கினார்கள்.

அதன் பின்னர் 'அண்ணா காவியம்' பற்றிய திறனாய்வுக் கருத்தரங்கு ஒன்று சென்னையில் உள்ள 'கீதா ஓட்டல்' வளாகத்தில் மிகச் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது.

தமிழக அரசில் அதிகாரியாக இருந்து ஆட்சி மொழிச் சொற்கள் பற்றிய நூல் ஒன்றைத் தீட்டியவரும் தஞ்சாவூர்—மானாங்கோரையைச் சார்ந்தவருமான தமிழறிஞர் கோ. முத்துப்பிள்ளை அவர்கள் அந்தக் கருத்தரங்குக்குத் தலைமை ஏற்றார்கள்.

உவமைக் கவிஞர் சுரதா, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, பேராசிரியர் டாக்டர் மா. நன்னன், சிலம்பொலி செல்லப்பன், டாக்டர் அவ்வை நடராசன், டாக்டர் இரா. குமாரவேலன் ஆகியோர் 'அண்ணா காவியம்' பற்றிய தங்கள் கருத்துக் கனிகளைப் பல்சுவை விருந்தாகப் பரிமாறினார்கள்.

மறுபடியும் 'அண்ணா காவியம்' பற்றிய திறனாய்வுக் கருத்தரங்கு ஒன்று சென்னை—"கோகுல் ஓட்டல்" வளாகத்தில் பொலிவோடு நிகழ்ந்தேறியது.

தி. மு. கழக முன்னணித் தலைவர்களுள் ஒருவரான நீலநாராயணன் அவர்களும், 'பசும் பொன் ஃபைன் ஆர்ட்ஸ்' கலை நிறுவனத்தின் சார்பில் பி. கே. முத்து ராமலிங்கம் (சீரணி) அவர்களும் அந்தக் கருத்தரங்கை முன்னின்று நடத்தினர்.

உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் அதற்குத் தலைமையேற்றார். பேராசிரியர் மா. கி. தசரதன், டாக்டர் மெ. சுந்தரம், சிலம்பொலி செல்லப்பன், டி. ஜி. நாராயணசாமி, எஸ். நல்லரசு, வர்கீஸ், கரந்தை கணேசன், சண்முக வடிவேலு, நா. முத்துக்குமாரசாமி ஆகியோர் தங்கள் சிந்தனை முத்துக்களைச் சீரிய முறையில் எடுத்து வைத்தனர்.

தஞ்சையில் இராமநாதன் மன்றத்தில் தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தினர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கு விழா எடுத்தபோது—இந்த 'அண்ணா காவியம்' பட்டி மன்ற விழாவையும் 17-5-75 அன்று நடத்தினர்.

திரு. துறவி இளங்கோவன் (சட்டமன்ற உறுப்பினர்) அவர்களும் ஏனைய பாசமிகு தோழர்களான எஸ். பெத்தண்ணன் (தஞ்சை நகராட்சித் தலைவர்), எஸ். நடராசன் (சட்டமன்ற உறுப்பினர்) பி. எஸ். தங்கமுத்து, ஏ. வி. பதி, டி. கே. கோவிந்தன், சுல்தான், வீரப்பிள்ளை ஆகியோரும் ஆர்வத்துடன் விழா ஏற்பாடுகளை மேற் கொண்டனர்.

அந்தப் பட்டிமன்ற விழாவுக்கு அப்போது அமைச்ச ராக இருந்த மன்னை நாராயணசாமி அவர்கள் முன்னிலை ஏற்றிருந்தார். தமிழ்நாடு சட்ட மேலவைத் துணைத் தலைவராக இருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கினார்.

பட்டிமன்றத் தலைப்பு : "அண்ணா காவியத்தில் விஞ்சி நிற்பது அண்ணாவின் சமுதாய உணர்வா? அரசியல் உணர்வா?" என்பதாகும்.

'அரசியல் உணர்வே' என்னும் அணியின் தலைவர்: புலவர் சி. முருகையன் (சட்டமன்ற உறுப்பினர்) அவர்கள். கவிஞர் தொல்காப்பியன், கவிஞர் முத்துராமலிங்கம் இருவரும் அவரை ஆதரித்து வாதிட்டார்கள்.

'சமுதாய உணர்வே' என்னும் அணியின் தலைவர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள். பேராசிரியர் கு. சிவஞானம், புலவர் இளஞ்செழியன் இருவரும் அவரைச் சார்ந்து வாதங்களை எடுத்து வைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி முதன் முதல் எழுதப் பெற்ற ஒரு தமிழ்க் காவியத்துக்கு—அமைச்சர் முன்னிலையில் சட்டமேலவைத் துணைத் தலைவர் தலைமையில் அந்தக் காவியத்தின் படைப்பாளரே கண்ணாரக் கண்டுகளிக்கும் வகையில் ஒரு பட்டிமன்ற விழா தமிழகத்தில் நடைபெற்றது இதுவே முதல் தடவை!

அடுத்தநாள் மாலை 'அண்ணா காவியம்' நூலுக்குப் பேராவூரணியில் பொதுமன்றில் பாராட்டு விழா நடந்தது.

கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் முன்னின்று நடத்திய அந்த இலக்கிய விழாவுக்குத் தவத்திரு குன்றக் குடி அடிகளார் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் முன்னிலை ஏற்றார்கள். திராவிட இயக்கச் செம்மல்களான பேராவூரணி கு. அடைக்கலம், அறந் தாங்கி ஆ. துரையரசன், பேராவூரணி வி. எஸ். குழந்தை, அவ்வை நடராசன், முத்துப்பேட்டை ந. தருமலிங்கம், கொல்லுமாங்குடி வரதகோபால கிருட்டிணன், சுப்பிர மணியபுரம் இரா. இராசன், பூ. கொல்லை கிருட்டின மூர்த்தி, நாடியம் இராமையன் முதலானோர் 'அண்ணா காவியம்' நூலைப் பாராட்டித் தங்கள் சொல்மாலை களைச் சூட்டினார்கள்.

1976 பிப்ரவரி 3-ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களது நினைவு நாள். அண்ணா சதுக்கத்துக்கு எதிரே யுள்ள சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் தமிழ்த் துறையின் சார்பாக 'அண்ணா காவியம்' நூலுக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்தப் பெற்றது. டாக்டர் கிருஷ்ணா சீனிவாஸ் தலைமை ஏற்றிருந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் காவியத்தைத் திறனாய்வு செய்து உரையாற்றினார்.

ஒருமணி நேரத்திற்கு மேல் மிக அழகான உத்தி களுடன் தமிழில்—இல்லை—ஆங்கிலத்திலேயே அவர் அப்படிக் கருத்து விருந்து படைத்தார்.

# சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

அவர்களின் "செங்கோல்" 20-10-74

தமிழகத்தின் சமுதாய வாழ்விலே பகுத்தறிவுச் சுடர் கொளுத்தித், தமிழ் மொழியின் வரலாற்றிலே புது ஏட்டைப் படைத்து, அரசியலிலே சனநாயகத்திற்குப் புத்துயிர் தந்து, ஏழைகளின் துயர் துடைக்கத் தம்பியருடன் அரியணையேறி, அங்கு அவர்களைத் தங்க வைத்துத் தாம் அமரராகி விட்டார் அண்ணா.

அவரது வாழ்க்கை வரலாறு உண்மையிலேயே ஒரு காப்பியத்துக்குரியது. அண்ணாவின் தம்பியருள் ஒருவரான கவிஞர் எஸ். கருணானந்தம் அவர்கள் 'அண்ணா காவியம்' என்னும் இந்தக் கவிதை நூலைப் படைத்துள்ளார்.

காப்பியத்துக்குப் பாயிரம் தேவை. அந்த நூல் மரபைக் கடைப்பிடித்து இந்தக்காப்பியத்தின் தலைவரான அண்ணா மீதே கவிஞர் பாடியுள்ள பாயிரம் சுவையானது.

அண்ணா பிறந்தது முதல் அவர் அமரரானது வரை வாழ்க்கை வரலாறு முழுவதும் இந்நூலில் விரித்துரைக்கப் படுகிறது. வேற்றுச் சொல் இல்லாமல், வெட்டி வருணனையும் இல்லாமல், பகுத்தறிவாளர் ஏற்கும் வகையில் காப்பியம் படைத்த கவிஞரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கவிஞர், தாம் அண்ணாவிடம் வைத்துள்ள பற்றுதலை —ஏன் பக்தியைக்—கவிதைதோறும் காண்கிறோம்.

கவிஞர் ஆனந்தம் பிறர் பார்வையில் படாமல் மறைந்து வாழும் இயல்புடையவர். அண்ணாவிடம் கொண்ட பக்தி காரணமாகத்தான் இந்நூலின் மூலம் வெளிப்பட்டுள்ளார்.

காப்பிய நாயகனின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்து, அவருடைய அடக்கம், அன்பு, பண்பு ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

அண்ணா புற்றுநோய்க்கு ஆளான பின்னர் வரும் கவிதைகளிலே, கவிஞர் ஆனந்தம் தமது எழுதுகோலைத் துயரத்திலே தோய்த்து எழுதுகிறார். அண்ணாவின் முடிவைக் கூறும் கவிதையும் அவ்வாறே.

மொத்தத்தில் 'அண்ணா காவியம்' தமிழ்க் களஞ்சியத்தில் நிலைத்திருக்கக் கூடிய இலக்கியச் செல்வம்.

# திரு தி. வ. மெய்கண்டார்

'கனியமுது', 'பூக்காடு' ஆகிய கவிதை நூல்களைத் தமிழுக்கு அளித்துக் கால் நூற்றாண்டுக்கும் மேலாகக் கவிபாடும் கவிஞர் ஆனந்தம் அவர்கள், காவிய நாயகனான அண்ணாவின் புகழிலும் அன்பிலும் ஆழ்ந்து போன உள்ளத்தோடு, தம் நூலின் பாயிரத்தைப் புதுச் சுவையோடு தொடங்கித் தம் கவிதா சக்தியை வெளிப்படுத்துகிறார்.

கவிஞர் ஆனந்தம் அவர்கள் அண்ணாவுடனும்—அவர் சார்ந்த இயக்கத்துடனும் இணைந்து சேர்ந்து வளர்ந்தவராவார்; இது, அண்ணாவின் வரலாற்றை எழுதிய மற்றவர்களுக்கு அமையாத நல்லதோர் வாய்ப்பாகும். தாம் பெற்ற அனுபவங்களையும் உணர்வுகளையும் நல்ல வண்ணம் பயன்படுத்தி அரியதோர் காவியமாக ஆக்கி விட்டார்!

'முப்பத்திரண்டு ஆண்டு'களாக இயக்கத்தின் எல்லா நிகழ்ச்சிகளோடும் தொடர்பு கொண்ட கவிஞர் இயற்றிய இக்காவியத்தில், பெரும்பாலும் எந்த ஒரு நிகழ்ச்சியும் யாருடைய பெயரும் விடுபடவில்லை!

அண்ணா பிறந்தது முதல் மறைந்தது வரை உள்ள அனைத்து நிகழ்ச்சிகளும் இந்நூலில் வருணிக்கப் பெற்றுள்ளன.

அண்ணாவின் இயல்புகளையெல்லாம் ஊன்றிக் கவனித்திருந்த கவிஞர், காவியமெங்கிலும் அவற்றைச் சொல்லிக் கொண்டே வருகிறார்.

அண்ணாவின் பெருந்தன்மையைச் சித்தரிக்கும் அபூர்வ நிகழ்ச்சிகளையும் கவிஞர் குறிப்பிடுகிறார்.

அண்ணாவின் இறுதி நாட்களைப் பற்றிக் கவிஞர் சொல்வது நம்மைச் சோகக் கடலில் ஆழ்த்துகிறது! கவிஞர் உள்ளம் கசிந்துருகிக் கண்ணீர் வரப் பாடுகிறார்.

புலவர் குழந்தை அவர்களின் 'இராவண காவிய'த்திற்குப் பிறகு கவிஞர் ஆனந்தம் அவர்கள் எழுதிய 'அண்ணா காவியம்' வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெறுகிறது!

தமிழ் உள்ள அளவும் அண்ணாவின் புகழ் வாழும்; அண்ணாவின் புகழ் உள்ள அளவும்—கவிஞர் ஆனந்தம் அவர்களின் 'அண்ணா காவியம்' வாழும்!

(''கழகக் குரல்'' 17-11-1974)

# உவமைக் கவிஞர் சுரதா

சடையப்ப வள்ளலுக்குப் பக்கத்திலே இருந்த கம்பனும் பாடியிருக்கிறான். அக்பரின் பக்கத்திலே இருந்த அபுல்காச னும் பாடியிருக்கிறான். பயந்துபாடினானா? பாராட்ட வேண்டும் என்று பாடினானா? ஏதாவது பெறலாம் என்பதற்காகப் பாடியிருக்கலாம்!

ஆனால், அண்ணா காலமான பிறகு, கவிஞர் கருணானந்தம் அவர்கள் இந்தக் காவியத்தைப் பாடியிருக் கிறார்கள். எதையும் கேட்காமலே—எதிர்பார்க்காமலே—பாடியிருக்கிறார்கள். கம்பன் பாடியதை விட, அபுல்காசன் பாடியதைவிட, மிகச் சிறந்த முறையில் படம் பிடித்துக் காட்டி, இந்தக் காவியத்தைப் பாடியிருக்கிறார் கவிஞர் கருணானந்தம்.

ஓர் அரசியல் தலைவரைப் பற்றி, நான் அறிந்தவரை யில், மற்ற யாரும் இப்படிப் பாடியதாகத் தெரியவில்லை!

யாராவது வள்ளலைப் பற்றிப் பாடினார் என்றால் அதில் ஆசை அடங்கியிருக்கிறது என்று பொருள்; ஏதாவது கிடைப்பதற்கும் வழி உண்டு!

அண்ணாவோ சிந்தனையில் வள்ளலாக இருந்தாரே தவிரச் செல்வத்தில் வள்ளலாக வாழ்ந்தவர் இல்லை! அவர் ஒரு சாதாரண ஏழைக் குடிமகன். அவர் இப்போது உயிரோடும் இல்லை. எனவே அவரைப் பற்றிக் கவிஞர் பாடியிருப்பதில் எந்த ஆசையும் அடங்கியிருக்கவில்லை!

நான் கழித்துக் கூட்டிப் பெருக்கிச் சரியாகவே சொல் கிறேன்:-

இந்தத் தலைமுறையிலே மிகச் சிறந்த கவிஞனாக—மிகச் சிறந்த காப்பியத்தைச் செய்திருக்கிறார் என்பத னாலே—தனித்த முறையிலே இவரைப் பாராட்டுகிறேன்!

என் மாவட்டத்தைச் சேர்ந்த (தஞ்சை) ஒரு கவிஞன்—என் வயதை உடைய ஒரு கவிஞன்—என் கண்ணுக்கு எதிரிலே மிகச் சிறந்த ஒரு காவியம் செய்திருக்கிறார் என்பதாலே நான் மிகமிக மகிழ்ச்சி அடைகிறேன். மிகமிகப் பாராட்டுகிறேன்.

கவிஞர் கருணானந்தம் அவர்கள் மிக நீண்ட காலம் வாழ வேண்டும்; மிகப் பல நூல்களைப் படைக்க வேண்டும்.

# தமிழினத் தளபதி கி. வீரமணி

இது அண்ணா அவர்களின் காவியம் மாத்திரம் அல்ல. இது தமிழகத்தின் காவியம்.

நீதிக்கட்சி இல்லாவிட்டால் தமிழனுக்கு வாழ்வு என்பதே கிடையாது.

அண்ணா அவர்கள் அய்யாவின் ஒலிபெருக்கி!

அண்ணா எதையும் விட்டுக் கொடுத்து எதையும் செய்யவில்லை.

அந்த உண்மையை மிகத் தெளிவாக—மிக விளக்கமாக இந்த நூலில் கவிஞர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்.

தமிழகத்தினுடைய வரலாற்றுப் பின்னணி—தமிழகத் தின் சமுதாய எழுச்சி—சமுதாய ஏற்றம்—சமுதாயப் புரட்சி—என்பவற்றையெல்லாம் தெளிவாகக் காட்டியிருக் கிறார் கவிஞர்.

அண்ணாவின் எழுத்துக்கு அடிப்படை என்னென்ன? மூன்று அடிப்படைகள் அவை:

அவரது எழுத்திலே—தமிழ் உணர்வு இருக்கும்; இன உணர்வு இருக்கும்; பகுத்தறிவு உணர்வு இருக்கும்.

இந்த மூன்று அடிப்படை உணர்வுகளும் சேர்ந்தது தான்—முத்தமிழ் போல இணைந்ததுதான்—அண்ணாவின் எழுத்து என்பதை மிக ஆழமாக இந்த நூலிலே சொல்லி யிருக்கிறார் கவிஞர் அவர்கள்.

'அண்ணா காவியம்' என்னும் இந்த நூலில் அன்பு உணர்வு இருக்கிறது; அமைதி உணர்வு இருக்கிறது; நன்றி உணர்வு இருக்கிறது; ஏன், எல்லா உணர்வுகளுமே இருக் கின்றன!

அண்ணா அவர்களுடன் நெருங்கிப் பழகாதவர்கள் அவரைப் பற்றிக் காவியம் எழுதினால், அதிலே சுவை யிருக்க முடியாது. அண்ணாவுடன் நெருங்கிப் பழகிய போதிலும், காவியம் எழுத முடியாதவர்கள் எழுதினாலும் அதிலேயும் சுவை இருக்க முடியாது.

இவர்களோ (கவிஞர்) இரண்டு தகுதிகளும் பெற்ற வர்கள்.

எனவே, இவர்கள் செய்திருக்கிற இந்தக் காவியத்தைப் போற்றிப்—பாராட்டி—நன்றி காட்டிப்—பரப்ப வேண்டிய முயற்சியை மேற்கொள்வதும் நம் ஒவ்வொருவருடைய கடமை ஆகும்,

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

நண்பர் கருணானந்தம் அவர்கள் ஒரு நல்ல கவிஞர் இயல்பிலேயே மலர்ந்த கவிஞர்.

சிலபேர் கவிஞர்களாகப் பிறந்திருக்கிறார்கள். சிலபேர் கவிதைத் தன்மையை முயன்று பெறுகிறார்கள். சில பேரிடத்தில் கவிதைத் தன்மை திணிக்கப்படுகிறது. கவிஞர் கருணானந்தம் அவர்கள் பிறவிக் கவிஞர் என்று நான் சொன்னால் எல்லோரும் உடன்படுவீர்களோ இல்லையோ தெரியாது. ஆனால் அவருடைய கவிதை வளத்தைப் பார்க்கிறபோது அந்த வழிவழி மரபு வளர்ந்திருக்கிறது.

நல்ல இசையமைத்துப் பாடும் சந்தமும், ஆற்றொழுக் கான கவிதை வளமும் அமைய, இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் 20-ஆம் நூற்றாண்டில் கொச்சை மொழிகள், விரசங்கள் விரவாத ஓர் அருமையான அண்ணா காவியத்தை அவர் செய்திருக்கிறார்.

பெரும்பாலோருக்கு, உவமைகள் என்று சொன்னால் விரசமான அல்லது கொச்சைத் தனமான உவமைகள்தான் கிடைக்கின்றன. ஆனால் கவிஞரவர்கள் படைத்திருக்கிற அண்ணா காவியத்தில்—நெஞ்சிருக்கிற மனிதன் ஒருவன் இருப்பானானால், அவன் அந்தக் கவிதையை உணர்ந்து படிப்பானானால் ஓரிரண்டு தடவைகளாவது அவன் படிக்கிற வேகம் தடைப்பட்டிருக்கும்; பல இடங்களில் திருப்பித் திருப்பிப் படிப்பான். அவன் எவ்வளவு கல் நெஞ்சம் உடையவனாக இருந்தாலும், ஒரு தடவை இரண்டு தடவை அவன் அழாமல் இருக்க முடியாது.

இது ஒரு சிறந்த காவிய நூல்: இதுபோன்ற நடை சிலப்பதிகாரத்தில்தான் இருக்கிறது. அறநெறி போதிக் கின்ற நூலாகவும் இது இருக்கிறது. கட்சிக் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் எல்லாரும் படிக்கவேண்டிய ஒரு விழுமிய நூல். இந்நூலிலே சில இடங்களில் நகைச்சுவையும் கலந்திருக் கிறது.

அண்ணா அவர்களோடு கவிஞர் சாப்பிட உட்காரும் போது கவிஞரின் வயிறு முந்தி வருமாம். அதைப் பார்த்து இன்னும் சாப்பிடு என்று கூறி அண்ணா மகிழ்வாராம். இவ்வளவு நட்பாக தோழமையாக உறவாக இருந்தவ ரிடத்திலே இவ்வளவு பெரிய மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறாரே கவிஞர்! அது ரொம்ப அபூர்வமாகத் தான் சிலருக்குக் கிடைக்கும்.

# என்னுரை

இக்குறுங்காப்பியத்தின் முதற்பதிப்பை அண்ணா அவர்களின் அறுபத்து அய்ந்தாவது பிறந்த நாளில் (15-9-74) வெளியிட்டேன். ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகளின் இடைவெளிக்குப் பின்னர் இரண்டாம் பதிப்பினை அண்ணனின் பதினேழாவது நினைவுநாளில் வெளியிடுகின்றேன்.

சேர்த்தல் நீக்கல் திருத்தல் ஆகிய மூவகை மாற்றங்கள் சிலவற்றை இப் பதிப்பில் செய்துள்ளேன்; அளவில் பெருகிடாவண்ணம்.

கையெழுத்துப் பிரதியைப் படித்துத் தந்தை பெரியார் அவர்களும், முதற்பதிப்புக்கு டாக்டர் கலைஞர் அவர்களும் வழங்கிய அணிந்துரைகளை இப்போதும் பயன்படுத்தியிருக்கிறேன். பெருமக்கள் பலர் ஆங்காங்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டங்களில் நிகழ்த்திய உரைகளினின்று தொகுத்தவற்றை ஓரளவு இடம்பெறச் செய்துள்ளேன்.

முதற்பதிப்புப் பிரதிகள் எப்போதோ தீர்ந்துவிட்டன. எனினும் இரண்டாம் அச்சுக்குப் போகும் முனைப்பின்றி வாளாவிருந்தேன். இந்த இடைக்காலத்தில் அண்ணா அவர்களைப்பற்றி ஏராளமாக நூல்கள் வெளியாகும் என்று எண்ணி ஏமாந்தேன்.

என் கையிலிருந்த ஒரே பிரதியை அண்மையில் படித்துப் பார்த்த மூவேந்தர் முத்து, உடனே தாம் இதனை வெளியிட விழைந்தார். அந்த நட்பின் செல்வரது ஆவலை நிறைவேற்றிட நானும் இசைவளித்தேன்.

அப்போது செய்த ஓவிய ஒப்பனைகள் இப் பதிப்பிலும் இடம்பெறச் செய்ய இயலவில்லை. இப்போது உள்ள வாய்ப்பும் வசதியும் இவ்வளவுதான். இத் திருத்திய ''அண்ணா காவியம்'' எல்லார்க்கும் நிறைவளிக்கும் என்பது திண்ணம். இன்று உருவாகி வளர்ந்து வரும் புதிய இளந் தலைமுறையினர்க்கு அன்புடன் இதனைப் படைக்கின்றேன்.

வணக்கம். நன்றி.

சென்னை-90
14-12-1986

S. கருணானந்தம்

# பதிப்புரை

தாழ்ந்து கிடந்த மக்களைத் தம் பேச்சாலும், எழுத்தாலும், தியாகத்தாலும் தட்டி எழுப்பிய ஒரு பெரு மகனைப் பற்றிய—ஆம், நமது நெஞ்சமெல்லாம் பூரித்துப் பரவியிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிய முதற்காவியமே இக் கவிதை நூல்.

அவர் ஒரு முழு மனிதராக வாழ்ந்து மறைந்தவர். சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, சாமானியராக வாழ்ந்து, ஒவ்வொருவரும் எப்படி வாழவேண்டும் என்று ஒரு வாழ்வியலை அளித்து, மொழியாலும், இனத்தாலும் எப்படி உணர்வோடு வாழ வேண்டும் என்பதையும் உணர்த்தி, எப்படி அரசோச்ச வேண்டும் என்பதையும் இத் தரணிக்குணர்த்திய தன்னேரில்லாத ஒரு தலைவன் அல்லவா நமது அறிஞர் அண்ணா!

அந்த மாமனிதரைப்பற்றி, அவருடனே நெருங்கிப் பழகிய அண்ணன் கவிஞர் கருணானந்தம் அவர்கள், 'அண்ணா காவியம்' என்னும் தலைப்பில் காவியமாக்கி னார். முதற்பதிப்பு நல்ல வரவேற்பைப் பெற்றது. இப்போது, திருத்திய இரண்டாம் பதிப்பு — பூவழகி வெளியீடாக வருகிறது.

படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளு தமிழ்க் காவியம் இது. அண்ணா என்னும் தாரக மந்திரத்தை உச்சரிக்கும் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்க வேண்டிய ஒப்பற்ற காவியக் கருவூலம்.

இந்த அருமையான காவியத்தை—எங்கள் பதிப்பகத் தில் வெளியிடப் பேருவகையுடன் அனுமதி அளித்து உதவிய அண்ணன் கவிஞர் அவர்களுக்கு எங்கள் அன்புகலந்த நன்றி.

என்றும் எங்கள் மனத்தில் நீங்காத இடம் பெற்றிருக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்கி, ஆதரவு தரும் தமிழ் மக்களையும் வணங்கி, நன்றி தெரிவிக்கிறேன்.

அண்ணா அவர்கள் அடையாறு மருத்துவமனையில் இருந்தபோது, சாலையில் தவங்கிடந்த இலட்சக்கணக்கான மக்களில் நானும் ஒருவன் என்பதை நினைவுகூர்ந்து, இந் நூலை வெளியிடுவதில் மனநிறைவு கொள்ளுகிறேன்.

**மூவேந்தர் முத்து**
**(பூவழகி பதிப்பகம்)**



# அண்ணா காவியம்

## காஞ்சிக் காண்டம்

1. பாயிரம்

2. வணக்கம்

3. வாழ்த்து

4. நகரம்

5. தோற்றம்

6. வளர்ச்சிப் படலம்

# பாயிரம்

'ஆண்டவனே!' என, நின்னை அறிந்த பின்னர்
அடியேனின் நெஞ்சத்தில் பக்தி கொண்டு

வேண்டியது கிடையாது! தாங்க வொண்ணா
வேதனையில் மூழ்கிநின்று துடித்த போதும்

மூண்டெழுந்த பேரன்பால் 'அண்ணா!' என்றே
முணுமுணுப்பேன்! கனத்திருக்கும் எனதுள் ளத்தை

ஆண்டவனே! என்றென்றும் ஆளும் கோனே!
அருள்புரிக; பொருள்தருக; நினையே பாட!

மக்களர சென்னுமொரு சொல்லுக் கேற்ற
மாண்புடனே தமிழரசைக் காண்ப தற்குத்

தக்கபல அடித்தளங்கள் அமைத்துத் தந்த
தன்னலமில் லாதஒரே தமிழ்த்த லைவன்

எக்கணமும் எம்மனத்தில் நீங்கா துள்ள
இறையான பேரறிஞன் நின்னைப் பற்றி,

நெக்குருகி நெகிழச்செய் காவி யத்தை
நெடிதாகப் படைத்திடவே நண்பர் கேட்டார்!

கரும்புத்தின்னக் கசந்திடுமோ? கால்நூற் றாண்டாய்க்
கவிபாட முனைந்ததெலாம் நின்னால் அன்றோ?

விரும்புகின்றாய் என்றறிந்தே இயற்றி வந்தேன்.
விளையாட்டுத் தனமாகக் கிறுக்கி னாலும்,

அரும்பிநின்ற என்னார்வம் மலரும் வண்ணம்
அடிக்கடிநீ ஊக்கியதை மறந்தா போவேன்!

பெரும்பேறு நீசுவைக்க எழுது கோலைப்
பிடித்ததுதான்; தடுத்தாண்ட இறையே, வாழ்த்து!

கொவ்வைச்செவ் வாயிலுறு குறுஞ்சி ரிப்பால்,
குதப்புகின்ற வெற்றிலையை ஒதுக்கிக் கொண்டே

இவ்வுலகத் தமிழ்மக்கள் இதயம் வென்ற
இணையற்ற தனித்தலைவா! எனைம தித்தே,

எவ்வளவோ நீதந்த தலைப்பின் கீழே
எழுதியுள்ளேன்! நீயேவோர் தலைப்பாய் ஆனால்

செவ்விளநீர் பருகுவது போல அன்றோ?
செம்மையுறத் துவங்குதற்கு முயல்கின் றேன்நான்.

# வணக்கம்

அண்ணனை; அறிவின் உச்சி
அமைந்தநல் அன்பின் ஊற்றைக்;

கண்ணியம் கட்டுப் பாடு
கடமையால் தந்த கோவைத்;

திண்ணிய தமிழர் நெஞ்சில்
திராவிட உணர்வை ஊன்றி—

எண்ணமும் செயலும் ஒன்ற—
இணையில் நாகரிகம் சேர்ந்த

அரசியல் பொருளா தாரம்
அருஞ்சமு தாயம் மூன்றில்

விரசமே கலவா வண்ணம்
விளைத்திட்ட வேந்தை; வெற்றி

முரசமே முழக்கி நாளும்
முன்னேற்றப் பாதை கண்டு,

சரசமாய்ப் பழகி, நன்மை
சாதித்த சான்றோன் தன்னை

நேர்மையால், நீதிக் கொள்கை
நிறைந்திடும் நெஞ்சு கொண்ட
நீர்மையால், நிமிர்ந்த நோக்கம்
நிரம்பிய நிகரில் லானைக்

கூர்மதி, கொடுமை கொன்று
குவலயந் தழுவுங் கேண்மை,
பார்முழு தேற்கும் பண்பால்
பகையிலாப் பெருமான் தன்னை

ஈடிலாக் குடும்ப பாசம்
எழிலுடன் இசையும் மேன்மை,
கேடிலாத் தூய திட்டம்
கீழோரை உயர்த்து தற்கு,

நாடியே மக்கள் ஈண்ட
நல்கிய சொல்வல் லானைப்
பாடியே புகழை ஈட்டப்
பணிவுடன் வணங்கு கின்றேன்!

# வாழ்த்து

யானோர் தமிழன் என்பதால் விம்மி
ஏனோ நெஞ்சம் இறும்பூ தெய்தும்!
உலகில் முதன்முதல் உயிர்த்த மொழிகளுள்
சிலவே இன்றும் நிலவுந் திறத்தன.
தொன்மொழி, அவற்றில் துடிப்புடன் விளங்கும்
என்மொழி, தமிழ்தான்! எனவே மகிழ்வேன்!
நோய்நொடி ஆயிரந் தூய்மையைத் தகர்க்கினும்,
தாய்மொழி அவற்றைத் தாங்கிடுந் தகையது.
தன்னிற் பிரிந்து தனிக்குடி யாகிய
கன்னடந் தெலுங்கு துளுமலை யாளம்
தழைத்திடத், தானும் பிழைத்திடுந் தன்மையால்
கிளைத்திடும் ஆறுகள் கேண்மையாய் நிரப்பித்
தன்புகழ் குறையாத் தடநதி யாகிய
அன்புசால் காவிரி ஆற்றினைப் போன்றது!

ஆன்றவிந் தடங்கியோர் அவைதனிற் கூடிடச்
சான்றோர் பலருந் தமிழா ராய்ந்தனர்.
பெண்பாற் புலவரும், ஆண்பாற் புலவரும்,
கண்போல் தமிழைக் காத்து வளர்த்தனர்.
ஓலையில் தீட்டிய உயர்ந்த இலக்கியச்
சோலையில் புகுந்து சூழ்ச்சிப் பகைவர்
நெருப்பிலும் நீரிலும் விருப்புடன் அழித்தனர்!
இருப்பவை சிலவே; எனினும், ஒருவன்
ஆயுள் முழுவதும் அரிதிற் கற்கினும்,
ஒயுதல் அன்றி உணரவொண் ணாதே!

வீரமும் காதலும் வெற்றியும் மணமும்
ஈரமும் ஈகையும் இணைந்த வாழ்வினில்
வேந்தரும் மக்களும் விழைவுடன் திளைக்க—
ஏந்திய புகழில் நீந்திய தமிழகம்—
இடையினில் நுழைந்த வடவரின் சமய
இடர்தனில் மூழ்கி, எழும்வழி யறியாது,
நீதியும் மதமும் பேதம் நிகழ்த்திட,
சாதிச் சமூக நிம்மதி யின்றியே,
ஒற்றுமை குலைந்து, கற்றது மறந்து,
நற்றுயி ராகிக், கூனிக் குறைந்திட...
முரசிலே மூன்றும், தமிழிலே மூன்றும்

அரசிலே மூன்றும், அவர்கொடி மூன்றும்,
தோன்றிய தூய்மைச் சங்கமோர் மூன்றும்
ஊன்றிப் பல்கிய ஒண்டமிழ் நாட்டில்—
குடிதழுவி நின்ற கோனாட்சி மறைந்து,
கடிதோச்சும் மாற்றார் படைநடத்தி வந்து,
வேற்று மொழிகள், விரவுநா கரிகம்
தோற்றுவித்ததால் துவண்டது தமிழகம்!

ஐம்பெருங் காப்பியம், அகம்புறங் கூறும்
செம்பொருள் எட்டுத் தொகையும், சீரிய
பத்துப் பாட்டும் பதினெண்கீழ்க் கணக்கும்
எத்தனை இலக்கியம், இதிகாச புராணம்,
சித்தர் பாடலும், சிவன்புகழ் பேசியே
பக்தியை வளர்க்கும் பாசுரம் மல்கிய
திருவா சகமுதல் தேவா ரங்களும்,
திருவாய் மொழியுடன் திவ்யப்ர பந்தமும்,
பெரிய புராணம், திருவிளை யாடல்
அரிய திருப்புகழ், உரிய பெருமைசேர்
கம்ப ராமாயணக் காவியம், பாரதம்,
அன்பால் திருமூலர் அளித்த மந்திரமும்
அருட்பெருஞ் சோதியால் இருட்பகை ஓட்டிட
அருட்பா நல்கிய அடிகளார் வாக்கும்
சீறாப் புராணமும் தேம்பா வணியும்
பாரதி, தாசன், கவிமணி பாடலும்

மக்களின் வாழ்க்கைச் சிக்கலை அறுக்கத்
தக்க அறிவுரை மிக்க வழங்கின!
எனினும், என்றும் இனிதாய், எளிதாய்,
மனிதக் குலத்தினர் மனத்துட் கொள்ளவும்,
இல்வாழ் வார்முதல் பல்வேறு துறைகளில்
செல்வார் அனைவரும் செயல்பட் டொழுகவும்,
மன்னர், அமைச்சர், நண்பர், பகைவர்,
நன்னடைச் சிறியோர், நாடறிந்த பெரியோர்,
காதலர், காமுகர், கோதிலாத் துறவியர்,
சீதளச் செம்முக மாதரார்—யாவரும்
படித்துணர ஏற்ற இடித்துரை நிரம்பிட—
வடித்த ஈரடிப் படித்தேன் குறட்பா
அருளிய வள்ளல் திருவள் ளுவர்போல்
மருளகற் றவல்ல பெருமான் பிறரிலர்!

ரசு பிறந்து மாசிலா நெறியைக்
காசினி யோர்க்குக் கழறிடு முன்னரே
வாழ்வு முறைகளை வகுத்துத், திட்டமாய்
ஆழ்பொருள் நிறைந்திட, அனுபவ உண்மைகள்
ரா யிரமாண் டிழிந்த பின்னரும்
ரா யின்றும் சேர்ந்திடும் வண்ணமாய்த்
ந்து சிறந்த எந்தைமு தாதைச்,

செந்தமிழ்ப் பெரியோன் சீர்வள் ளுவனின்
பிறப்பும், வளர்ச்சியும், சிறப்பாய் உணர்ந்திலோம்!
அறப்பால், பொருட்பால், இன்பத் தின்பால்—
இத்துணை அருமையாய் இயற்றியோன் பற்றி
எத்துணை அறிவோம்? ஏதும் அறிகிலோம்!
நற்பே றாகப், பொற்புமிகு பாக்கள்
அற்பரால் அழியா திருந்தன! கற்பவர்

தமிழராய் மட்டும் தனித்திடா வண்ணம்,
இமிழ்கடல் உலகின் ஏராள மொழிகளில்
ஆக்கினர் நல்லோர்! அறிவு கமழ்ந்திடத்
தேக்கிய தொண்டினால் திருக்குறள் வாழ்ந்தது!
வள்ளுவன் காட்டிய வாழ்வு நெறிதனைத்
தெள்ளு தமிழில் தீங்கற உணர்ந்தோர்
மக்கட் தொகையில் மிக்க சொற்பமே!
தக்க வழிகளில் தாங்கிப் பரப்பிட
முனைப்பும், முயற்சியும், நினைப்பும், நேரடு
இனிப்பாய் எண்ணமும், ஈடேற்றச் செயலு
பாமரர் அறியப் பக்குவச் சொல்லும்,
தாமறிந் ததெலாம் தமிழர்க் குரைத்திடும்
தண்ணளி சுரக்குந் தகைசால் மனமும்
எண்ணிலா ஆண்டுகள் யார்க்கும் இல்லை

# நகரம்

கல்லினைப் பேசச் செய்து
கடற்புறம் நிறுத்தி யுள்ள
மல்லனாம்; மகேந்திரன் பெற்ற
நரசிம்ம வர்மன் மன்னன்!
எல்லையைத் தொடமு யன்ற
இணைபுலி கேசி தன்னைப்—
'பல்லவத் தலைமை மூதூர்
பாராதே!' எனத் துரத்தி

வெற்றிகள் குவித்த வீரன்
விளையாடி நின்ற பேரூர்!
பொற்றொடி மாதர் நல்லார்
புறவெழில் மின்ன நெய்து
சுற்றிடும் பட்டுச் சேலை
சுழன்றிடுந் தறிகள் ஓட்டம்
அற்றிடா ஆடை நல்லூர்;
அன்றுதொட் டின்றும் மேவும்!

பண்டைநாள், சமண பௌத்தப்
பள்ளிகள் தெருக்கள் தோறும்
உண்டென்பர்! 'நலந்தா' வாழ்ந்த
உயர்கலைக் கழகத் திற்கே
தொண்டாற்ற ஆசான் மார்கள்
தொடர்ந்ததும் இங்கி ருந்தே!
கண்டிதைப் புகழ்ந்து ரைத்தான்
காஞ்சிக்கு வந்த சீனன்!

சைவர்க்கும் வைண வர்க்கும்
சார்பான தலமாம் இங்கே—
தெய்வம்ஏ கம்ப நாதர்,
சீர் தாய் காமாட்சி யம்மை,
கைலாய நாதர் தொன்மைக்
கற்கோயில் வரத ராசர்
உய்வழி நாடிச் செல்வார்
ஓய்விலா துல்வுங் காஞ்சி!

வரலாற்றுச் சிறப்புக் கொண்ட
மாநகர் எனினும், இஃதைத்

திறல்வாய்ந்த செங்கற் பட்டின்
திருத்தலை நகராய் மாற்ற

முரணானார் முன்னாள் ஆண்டோர்!
முதல்வராய் வந்த பின்னர்

சரளமாய் அதனைச் செய்து
சரித்திரம் படைத்தார் அண்ணா!

நொந்து கிடந்தநம் சொந்தச் சகோதரர்
வெந்துயர் போக்குவர் என்றிருந்தோம்—அவர்

வந்த சுதந்திரம் தந்த சுகங்களைச்
சொந்த நலன்களாய் எண்ணிவிட்டார்—பெரும்

இந்தியக் கண்டத்தில் தென்திசை என்றநம்
முந்திய நாட்டினைத் தான்மறந்தார்—யாரும்

விந்தியத் தப்புறம் சிந்தை திருப்பியே
விந்தை வளர்ச்சிகள் தாம் புரிந்தார்.

நஞ்சனை யாரிவர் வஞ்சனையாக நாம்
தஞ்சமடைந் ததாய் எண்ணிவிட்டார்—இனி

அஞ்சி அடங்கலும் கெஞ்சிக் குழைதலும்
கொஞ்சமும் நம்மவர்க் கேற்றதில்லை—உடன்

துஞ்சுதல் விட்டினி விஞ்சி எழுந்திடின்
பஞ்சில் நெருப்பெனத் தீய்ந்திடுவார்—துளிக்

கஞ்சியில் லாதவர் நெஞ்சில் இடம்பெறும்
வஞ்சினங் கூறிவந் தாரொருவர்.

# தோற்றம்

அற்புதங்கள் நிகழவில்லை! ஆகா யத்தில்
அதிசயமாய்ப் புதியவொளி தோன்றிற் றென்று

கற்பனையாய்க் கவிஞருமே பாட வில்லை!
கதைக்கின்ற பண்டிதர்க்கு வேலையில்லை!

பொற்புடைய காஞ்சிமண் ணின் பெருமை மேலும்
பொலிவடைய, வலிவிழந்த தமிழ கத்தின்

நற்பயனாய், நடராசன்—பங்கா ரம்மாள்
நயந்தபடிப் பிறந்ததேஓர் ஆண்கு ழந்தை!

செம்புடம்புச் சிலைவடிவு பெற்ற பிள்ளை
சிறப்பாக இத்திங்கள் பிறந்த தாலே—

எப்புதுமை செய்ததெனப் பின்னால் கண்டோம்!
இருக்கின்ற பன்னிரண்டு திங்க ளுக்குள்

இப்புகழைப் பிறிதொன்றும் அடைய வில்லை!
எழில்தமிழர் விழாவெடுக்க ஏற்ற தாக

ஒப்புரைக்க இயலாத உரைவோன் தன்னை
உலகுக்கு வழங்கியதே நிலவு போலே!

பெற்றெடுத்த தாயார்தான் பங்கா ரம்மாள்!
பேணிவளர்த் துருவாக்கிக் கொணர்ந்த தெல்லாம்

சிற்றன்னை என்றபொருள் உடைய தொத்தா
சீர்ராசா மணியம்மை யார்தான் என்க!

மற்றவரை விடச்சற்றுக் குள்ள மான
மகனையுச்சி மோந்தெடுத்துத் தழுவிக் கொண்டு

கொற்றவனுக் கேற்ப, அண்ணா துரையென் னும்பேர்
குதூகலமாய்ச் சூட்டினரே, குலம்வி ளங்க!

வீசுபுகழ் அண்ணனென அழைப்ப தற்கோ
வெகுதிறமாய்ப் பெயரிட்டார் தகுதி யோடும்?

ஏசுபிரான் அவதரித்த காலத் தைத்தான்
இவ்வுலகின் பொதுக்கணக்காய் எண்ணு
கின்றோ

மாசுமில்லை; மயக்கமில்லை; வந்த ஆண்டே
மறுபடியும் வரத்தக்க குறையு மில்லை!

ஆசிரியர் வரலாற்றை வரையும் காலம்
ஆயிரத்தொள் ளாயிரத் தொன்பான் ஆண்டு!

இருபதாம் நூற் றாண்டினிலே வாழ்ந்து சென்ற
இணையற்ற தலைவர்கள் சிலபேர் உள்ளார்;

ஒருவரும்நம் அண்ணாபோல் இதிலே தோன்றி
ஓங்குபுகழ் ஒளிவீசி நின்றா ரல்லர்!

திருவதியும் இக்காலம் நாமும் வாழ்ந்தோம்;
திருமகனார் அருள்பெற்றோம்; என்னே பேறு!

பெருமதிப்பாய் அண்ணாவின் நூற்றாண் டென்று
பேசுவதில் தவறென்ன? அழைக்க லாமே!

இங்கர்சால், லிங்கனைப்போல், லெனினைப் போலே,
ஈடில்லா நெப்பொலியன், சர்ச்சில் போலச்,

சிங்கநிகர் அலெக்சாந்தர், சீச ரைப்போல்,
சீனத்தின் சன்யாட்சென், கமால்பாட் சாபோல்,

தங்கமெனத் தரணியெலாம் போற்று கின்ற
தயைமிகுந்த அடிகளாராம் காந்தி யைப்போல்

ங்கணுமே ஒப்புரைக்க இயலா வண்ணம்
இளமகவு பிறந்ததம்மா; தமிழன் மண்ணில்!

# வளர்ச்சிப் படலம்

வைதிகத்துத் தொன்முறையில் வளர்த்த தொத்தா
மைந்தரது முழுக்குடுமி வாரிப் பின்னி,
ஐதிகத்தில் வழுவாமல் நெற்றி மீதில்
அழகாகத் திருநாமம் இட்டுக், கண்ணில்
மைதீட்டிப், பூமுடித்துக், கடுக்கன் பூட்டி,
வண்டியிலே ஊர்வலமாய் அழைத்துச் சென்று
கைதொட்டு நெல்லின்மேல் எழுதச் செய்து
கல்வியினைப் பள்ளியிலே தொடங்கி வைத்தார்!

கூட்டத்தைக் கண்டாலே ஒதுங்கிச் செல்லும்
கூச்சமிகும் இயல்புகளைப் பெற்ற அண்ணா
நாட்டத்தைக் கற்பதிலே பதித்தார்! ஆசான்
நவில்வதனைக் கவனமுடன் செவிமடுத்துக்
கேட்டாலே போதும்! பின் வீட்டிற் குள்ளே
கிடுகிடுக்கப் படிப்பதெலாந் தேவை யில்லை!
மாட்டுவண்டி யைத்தாமே ஓட்டிச் சென்று
வள்ளலான பச்சையப்பர் பள்ளி சேர்வார்,

இயற்கையிலே அடக்கமிக உடையோ ராக
இடையூறில் லாமுறையில் தொடர்ச்சி யோடும்

உயர்நிலையின் வகுப்புவரை காஞ்சி மண்ணில்
ஒழுக்கமுடன் கற்றுவந்த அண்ணா என்றும்

அயர்வின்றிப் பயின்றிட்டார்; இளமை தொட்டே
அழகுதவழ் இசைகூத்துக்—கலையில் ஆர்வம்;

துயர்விலக்கும் முத்தமிழின் துறைக ளின்பால்
தொய்வில்லாப் பற்றுதலைக் கொண்டி ருந்தார்!

குடகுமலை உச்சியிலே தோன்றிக் கீழே
குதித்தோடி இழிந்துவரும் பொன்னி யாறோ

உடனடியாய் அகலமாவ தில்லை யன்றோ?
உளங்கவரும் சிற்றருவி யாகத் தானே

நடனமிட்டு நகர்ந்துவரும்! அத்தன் மைபோல்,
நம்குலத்தை விளங்கவைக்க வந்த அண்ணா

கடமையிலே கருத்தாகக் கற்றா ரேனும்
காஞ்சியிலே தனித்திறமை காட்ட வில்லை!

குடித்தனத்தைச் சிக்கனமாய் நடத்தி வந்த
குடும்பத்தைச் சார்ந்தவர்தாம் எனவே அண்ணா,

நடுத்தரத்தார் நிலைக்கேற்பச் சிரமத் தூடே
நாள்கடத்திப், பள்ளிவாழ்வை ஒருவா றாக

முடித்துவிட்டார் வெற்றியுடன்! தங்கள் பிள்ளை
முன்னேற்றம் கண்ணுற்ற தொத்தா, மேலும்

அடுத்திவரைக் கல்லூரிப் படிப்பிற் காக
அனுப்பிடலாம் சென்னைக்கே எனநி னைத்தார்!

இறுதிநிலை வகுப்புதன்னைக் கடப்ப தற்கே
இருமுறைகள் தவறிவிட்ட அண்ணா, தங்கள்

வறுமைநிலை உணர்ந்ததனால் மேற் படிப்பு
வாய்க்காதென் றஞ்சியதால் நகர மன்றில்

பொறுமையுடன் எழுத்தராகப் பணிபு ரிந்தார்!
பொறுக்காத தொத்தா, பிற் படுத்தப் பட்டோர்

பெறுமரிய சலுகைதனைக் கேட்ட றிந்து,
பெருமகிழ்வு பூண்டவராய் முன்னே சென்றார்!

கற்றவரிற் சோம்பிநிற்கும் கசடர் தம்மைக்
கைதூக்கி உணர்வூட்டிக், கல்லா தாராம்

மற்றவர்க்கும் அறிவொளியைப் பாய்ச்சி, உண்மை
மானுடராய் மேம்படுத்தும் பொறுப்பை ஏற்கும்

நற்றுணைவ ராகஎதிர் காலம் ஆளும்
நாயகர்இந் நன்முடிவை எடுக்கா விட்டால்—

வெற்றுடலாய் உயிரற்று வாழ்ந்தி ருப்போம்;
வீழ்ச்சியினின் றெமைமீட்ட அண்ணல் வாழி!

# அண்ணா காவியம்

## II சென்னைக் காண்டம்

7. பயிற்சிப் படலம்

8. மணம்புனை காதை

9. அய்யா ஆட்கொண்ட படலம்

10. இந்திப் பரணி

11. எழுதுகோல் வேந்தன்

12. மாணாக்கர் இலம்பகம்

# பயிற்சிப் படலம்

எல்லாருங் கல்விகற்குஞ் சமவாய்ப் பெய்தி
ஏழையரும் முன்னேற வேண்டு மென்றால்...

இல்லாதார் இல்லத்திற் பிறந்த மக்கள்
எளிமையினால் இயலவில்லை என்ப தன்றி,

நல்லவிதம் பள்ளிகளில் இடமும் பெற்று
நயந்தபடித் தடையின்றி அறிவு மாந்திச்

செல்வரது மக்களைப்போல் சிறப்பு மிக்க
செழுமையினை அடைவதுதான் தேவை யன்றோ?

அந்நாளில் அந்நிலையை ஓர்ந்த தாலே
அனைவர்க்குங் கட்டணமில் லாத கல்வி

முன்னிற்க வகைசெய்தார்; ஆட்சி பீடம்
முந்திவரத் தந்தவரம் இதுதான் அன்றோ?

தம்நாளில் தாமுணர்ந்த கொடுமை முற்றும்
தகர்த்திடவே முடிவெடுத்தார் அறிஞர் அண்ண

பின்னிலைமை சீர்படவே அவர்தம் சொந்த
பிற்பட்ட ஏழ்மைநிலை தூண்டிற் றன்றே!

எத்தனையோ அழகப்பர் தியாக ராயர்
இன்றளவும் சாகாமல் வாழ்கின் றார்கள்!

எத்துணையோ வள்ளல்கள் கொடைச்செ யல்கள்
இயற்றியுள்ளார்; எனினும்நம் பச்சை யப்பர்

மொத்தமாக நிறுவியுள்ள கல்விச் சாலை
மொய்ம்புபிற அறநிலையம் பெறுவ துண்டோ?

சத்துநிறை தருமந்தான் பிறிதும் ஏது?
சரியான அறிவுவழி காட்டிச் சென்றார்.

பச்சையப்பர் அறஆணைப் பணியால் அன்று
பயன்தருமோர் கல்லூரி அமையப் பெற்றே

இச்சையுடன் மேற்கல்வி பயில்வார்க் கேற்ற
எழில் அறிவுக் கூடமாக விளங்கி நிற்க,

அச்சமிக அண்ணாவும் அங்கே சேர்ந்தார்!
அணிசென்னை மையத்தின் கூச்சல், தொல்லை,

துச்சமெனக் கருதிவெகு கவன மாகத்
தொடங்கினரே இடைநிலையாம் வகுப்பு
தன்னை!

பள்ளியிலே தனித்திறமை காட்டா வண்ணம்
பயின்றுவிட்டார் காஞ்சியிலே எனினும், அண்ணா

கள்ளமிலாக் கல்லூரி நுழைவின் பின்னர்க்
கங்குகரை காணாது கற்க லானார்!

வெள்ளமிக அணையுடைத்தே விரைந்தாற் போல
வேகமுடன் அறிவாற்றல் உணர்த்தி வந்தார்!

எள்ளளவும் நேரத்தை வீணாக் காமல்
ஏடுகளை மூளையினால் விழுங்க லுற்றார்!

# மணம்புனை காதை

ஈராண்டில் இணையற்ற திறமை காட்டி
இடைநிலையில் முதல்தரமாய்த் தேர்ச்சி பெற்றார்!

சீரான கல்விமுழு நிலைபெ றும்முன்,
சிறப்பாகப் பிள்ளைக்கு மணம்மு டிக்க

ஊராரின் வழக்கம்போல் தொத்தா எண்ணி
உடனடியாய்த் தஞ்சையிலே பெண்ணும் பார்த்துப்

பேராலும் பெரும்புகழ்சேர் இராணி என்ற
பெண்குலத்தின் பொன்விளக்கைக் கொண்டு வந்தார்!

திருமணத்தை முடித்தபோது தஞ்சா வூரின்
சிறப்புமிகு மாப்பிள்ளை ஆனார் அண்ணா!

பெருமிதந்தான் எமக்கெல்லாம்; எங்கள் மண்ணைப்
பெருமையுற வைத்தனரே என்ப தாலே!

அருமையுடன் மகனுக்கு மணம்ந டாத்தி
ஆசையினை நிறைவேற்றிக் கொண்டார் அன்னை.

திருமகனார் கற்பதனை நிறுத்த வில்லை;
தீவிரத்தைக் காட்டினரே மிகவி ரைந்து!

படிப்போரே! அண்ணாவின் பாங்கு தன்னைப்
பற்றிநின்று பின்தொடர்க! அந்த நாளில்,

இடிப்பாரும், உரைப்பாரும், தூண்டு கோலாய்
இருப்பாரும் யாருமில்லா நிலையில், அன்னார்,

துடிப்போடு, கிடைத்ததெலாம் பயின்ற தோடு,
துளியேனும் அயர்வின்றி எடுத்த நூலை

முடிப்பாராம்! அவர்தொடாத பனுவல் ஏதும்
முழுமையுற்ற தில்லையெனில் உணர்ந்து கொள்க!

பெற்றோர்கள் கடன்பட்டும், உடல்வ ருந்தப்
பெருந்துன்பம் மேற்கொண்டும், பசியால் நொந்தும்,

சற்றேனும் மனத்துயரம் வெளிக்காட் டாமல்
தம்மக்கள் மேற்கல்வி அடைவ தற்கும்—

கற்றபின்னர் மூப்படைந்த தாயார் தந்தை
காப்பாற்றுங் கடமையினை ஆற்று தற்கும்—

பெற்றுவரும் பட்டத்தைப் பெரிதாய் நம்பிப்
பிள்ளைகளை அனுப்புகின்றார் கல்லூ ரிக்கு.

வந்திருக்கும் நோக்கத்தை மறந்து விட்டு,
மனம்போன போக்கெல்லாம் செல்வ தோடு,

சிந்தைமகிழ் வெய்துதற்குத் திரைய ரங்கில்—
சிற்றுண்டி விடுதிகளில் செலவு செய்து,

எந்தவிதப் பொதுத்திறனும் வளர்த்தி டாமல்
எப்படியும் தேர்வுகளை நடத்தா வண்ணம்

வெந்துயரம் மிகுவேலை நிறுத்த மென்று
வீணாக்கும் தீச்செயலை அண்ணா நாடார்!

கற்பதெலாந் தேர்வெழுதி வெற்றி பெற்றுக்
கடப்பதற்கே எனஎண்ணி மாணாக் கர்கள்

அற்பமான நோக்கோடு பயில்வ தாலே
அறிவுதனைப் பெருக்குகின்ற கருத்தே இன்றிச்

சொற்பமான புள்ளிகளை வாங்கி விட்டுத்
தொடர்வதுதான் வாடிக்கை! இவ்வா றன்றிக்

கற்பதெனில் கற்பவற்றைக் கசடு நீங்கக்
கற்றதோடு, கற்றவழி நின்றார் அண்ணா!

குடத்திட்ட விளக்காகத் தனைம றைத்துக்
கொண்டுவந்த அண்ணாவோ, பொருளா தாரம்

நடத்திட்ட சிறப்பான மேல் வகுப்பில்—
நல்லெண்ணம் நிறைந்திட்ட முதல்வர் கூறி

இடத்திற்கும் ஏற்பாடு செய்த தாலே—
இடையூறு வாராமல் படிக்க லானார்!

கெடத்தெரியா இயல்பினராய் இருந்த அண்ணா
கிஞ்சிற்றும் அஞ்சாமல் யாவும் கற்றார்.

கட்டுரைகள் எழுதுவதில் ஆசான் கூடக்
கலக்கமுறும் வண்ணமாக விளக்கந் தந்தும்,

எட்டுணையும் யாராலும் இயலா தாக
ஈடற்ற திறமையினைக் காட்டு மாறும்,

தொட்டுவந்த அண்ணாவின் கூர்மை கண்டு
சொல்லவொணா மகிழ்வுற்றார் அனைவ ருந்தான்!

விட்டுவைத்த நுழைபுலமோ ஒன்று மில்லை;
மிகுதியான பேரறிவை வெளிக்கொ ணர்ந்தார்!

பட்டிமன்றக் கூட்டங்கள் நடக்குந் தோறும்
பங்குபெற்றார் அண்ணாவும் தவறி டாமல்!

அட்டியின்றிக் கலந்து கொண்டு, வாதம் செய்தே
அடுத்தவரை மடக்குவதில் நிகரே இல்லை!

முட்டிவரும் எதிர்கட்சிப் பேச்சா ளர்க்கு
மூச்சுவிடத் திணறுமாறு சொல்ல டுக்கி,

எட்டிநின்ற யாவரையும் தம்பால் ஈர்க்கும்
இணையற்ற சொன்மாரி பொழிந்து வந்தார்.

பச்சையப்பன் கல்லூரி பெருமை யாலே
பளபளக்கச் செய்திட்டார் அண்ணா அந்நாள்!

இச்சையுடன் தாம்விரும்பும் முற்போக் கான
எழிற்கொள்கை வழங்கிடவே முனைந்து நின்றார்!

கொச்சையான ஆங்கிலமும் தமிழும் சேர்த்துக்
குழறிடுவார் மத்தியிலே, இனிமை யான

மொச்சைவிதை போன்றதமிழ்ச் சொற்கள் வீசி,
முழுமையான ஆங்கிலமும் பேசி வந்தார்!

# அய்யா ஆட்கொண்ட படலம்

பிற்படுத்தப் பட்டகுலப் பிறப்பால் அண்ணா
பின்னடைந்தோர் முன்னேற்றம் கருத்தில் கொள்ள

முற்பட்டார்! அதற்கேற்ப நீதிக் கட்சி
முகிழ்த்திருந்து கொடிகட்டி ஆண்ட நேரம்—

கற்பதுடன் பொதுநலமும் நாடும் நெஞ்சால்
காலத்தை அத்துறையில் செலவு செய்தார்.

அற்பமென இகழ்ந்திட்ட தொழிலா ளர்பால்
அகலாத பற்றுவைத்தார்; அக்கா லத்தே!

தொழிலாளர் தலைவரான வாசு தேவர்
தூயநறுந் தொண்டாற்றிச் செல்வாக் காலே

அழியாத புகழ்படைத்து நீதிக் கட்சி
அரணாகச் சென்னைநகர்த் தந்தை யாகப்—

பழியாதும் இல்லாது பதவி யேற்றார்.
படித்துவந்த அண்ணாஅப் பண்புள் ளாரை

வழிகாட்டி யாய்க்கொண்டு தொழிற்சங் கத்தில்
மனமார ஈடுபட்டார்; பணிபு ரிந்தார்.

அ.—4

நாயருடன் தியாகராயர், பனகல் மன்னர்—
நாட்டினிலே பெரும்பான்மை யான மக்கள்,
தூயதமிழ்க் குடிப்பிறந்தார்; சொந்த மண்ணில்
தொடர்பாகக் காலமெலாம் வாழ்ந்து வந்தும்.
ஆயநலம் அத்தனைக்கும் வாய்ப்பில் லாமல்—
அருங்கல்வி, அலுவல்கள், வணிகம், மற்றும்
தாயகத்தில் மேம்பாடு யாவும் இன்றித்
தரங்குறைந்து வலிவுகெட்டு நலிந் திருக்க—

யார்யாரோ மண்ணுக்குச் சொந்த மில்லார்
யாவற்றி லும்மிகவும் முன்னே நின்று
சீர்பெற்று வளமாக வாழ்தல் கண்டு,
சிந்தித்துப் பலகாலம் நொந்த நெஞ்சால்
ஊர்மக்கள் நன்மைக்கு நீதிக் கட்சி
உண்டாக்கித் தொண்டாற்ற முன்வந் தார்கள்!
பேர்பெற்ற பெரியாரும் இடையில் வந்து
பெரும்பங்கு கொள்வதற்குத் துணிய லானார்!

பெரும்பாலும் படித்தவரே இருந்த தாலும்,
பேசுவதும் ஆங்கிலமே என்ப தாலும்,
விரும்பிவந்து மக்களணி இதிலே சேர
வெகுகாலம் ஆகியும்நல் வாய்ப்பே இல்லை!
அரும்பாகி மலராமல் நின்ற நேரம்
அய்யாநம் பெரியாரும் தொடர்பு கொள்ளத்,
திரும்பினரே அண்ணாவும் இந்தப் பக்கம்;
திருப்புமுனை கண்டதந்த நீதிக் கட்சி!

ஆசிரியத் தொழிலினிலும் சிறிது காலம்
அமர்ந்திருந்து பணிபுரிந்து பார்த்தார் அண்ணா;
மாசிலாத அலுவலுமே நிறை வளிக்க
மறுத்ததனால், மனம்ஏற்ற வண்ண மாகக்
காசின்றி அரசியலில் காலை வைத்தார்!
கண்வைத்த பெருந்தனத்தார், தம்மை ஈர்க்க
வீசிவிட்ட வலையினிலும் வீழ வில்லை!
வீரமிக விருப்பம்போல் ஈடு பட்டார்.

நாதனுடன் பாலசுப்ர மண்யம் போன்ற
நல்லஎழுத் தாளரெல்லாம் அண்ணா வுக்கே
ஆதரவு மிகநல்கி, நீதிக் கட்சி
அளித்துவந்த கொள்கைகளை விளக்கிப் பேசி
வாதமுடன் ஏடுகளில் எழுதும் ஆற்றல்
வளர்த்திடவே முனைந்திட்டார்; வெற்றி கண்டார்!
சாதனைகள் எடுத்தியம்ப அண்ணா வைப்போல்
சாதனமும் பிறிதொன்று பெறுதல் ஆமோ?

செட்டிநாட்டின் இளவரசர், பன்னீர்ச் செல்வம்,
சீர்பெற்ற இரட்டையருள் இராம சாமி,
கட்டிவந்து காப்பாற்றும் அரச ரான
கண்ணியத்துப் பொப்பிலியும் கண்போல் ஏந்தி
அட்டியின்றி அண்ணாவை ஏற்றுக் கொண்டார்!
அய்யாவின் சுயமரியா தையி யக்கம்
கெட்டியாக வேர்பிடிக்கா நேரம்; அன்று
கிடுகிடெனப் பற்றிவிட்டார் அதனை அண்ணா!

நூற்றுக்கு மூன்றுபேரா யிருந்த வர்கள்
    நுடங்காமல் மேல்வாழ்வை அமைத்துக் கொண்டு,
சோற்றுக்கும் திண்டாட விட்டு விட்டார்!
    சொந்தநாட்டுப் பெரும்பான்மை மக்கள் கூட்டம்
ஏற்றுக்கொண் டின்னலிலே உழன்று வந்தார்;
    ஏமாற்றுக் காரரிங்கே பிழைத்து நின்றார்!
மாற்றிவிடத் துணிவின்றி மலைத்தி ருந்த
    மூடக்கொடுமை தனைத்தவிர்க்கப் பெரியார் வந்தார்!

முரண்பட்ட புதுக்கருத்தை வெளிப்ப டுத்தி,
    மூடமதிப் பழங்கொள்கை யாவும் தாக்கி,
அரண்செய்த சாத்திரங்கள், சம்பிர தாயம்,
    ஆண்டவனின் கட்டளைகள் எல்லாம் வீணாய்ப்
பரண்மீது தூக்கியெறிந் தகற்றி விட்டுப்,
    பைந்தமிழர் விழித்தெழவே வழிகள் கூறிச்,
சரண்அடையும் பிற்போக்குக் கொள்கை சாடிச்
    சன்மார்க்கம் தந்தைவழி உரைத்தார் அண்ணா!

ஆயிரத்தொள் ளாயிரத்து முப்பத் தைந்தில்
அருங்கொங்கு நாட்டினிலே திருப்பூ ரின்கண்
நோயுற்ற நெசவாளர் சமுதா யத்தின்
நோய்தீர்க்கக் கூடியதோர் மாநாட் டில்தான்
பாயிரத்துச் சொற்பொழிவு நிகழ்த்தி வைத்த
பட்டதாரி அண்ணாவைப் பெரியார் கண்டார்!
சேயினையே பரிந்தழைக்கும் தாயைப் போலச்
செம்மலையே ஆட்கொண்டார்; உடன ழைத்தார்!

தன்மான இயக்கத்தின் கொள்கை யாலும்,
தரமான அரசியலில் நீதிக் கட்சிப்
பொன்னான கோட்பாட்டின் தன்மை யாலும்,
பொங்கிவரும் ஆர்வத்தால் ஈடு பட்ட
அண்ணாவை; இளைஞரேனும் பெரியோ ரெல்லாம்
அன்புடனே மாநகரின் ஆட்சித் தேர்வில்
நன்மனத்தால் நிற்கவைத்தார்! ஆனால், அந்தோ,
நாடவரைப் புரிந்துகொள்ள வில்லை; தோற்றார்!

# இந்திப் பரணி

துவளாது பொதுப்பணியே தொடர்ந்தார் அண்ணா;
தூயநறுந் தாய்மொழியாம் தமிழைக் கொல்லத்

தவளைமொழி இந்தியினைச் சட்டத் தாலே
தமிழகத்தில் நுழைப்பதற்கோர் ஆட்சி மாற்றம்

பவளமொழி வாணரிடை நேர்ந்த தாலே
பாங்குடனே இராசாசி வந்து சேர்ந்தார்;

கவலையுற்ற பெரியாரும் தமிழர் மேன்மை
காப்பதற்குத் துணிந்தெழுந்தார்; குரல்கொடுத்தார்;

கொண்டிருந்த கொள்கையினால் வேறு பட்டோர்,
குறிக்கோளாய்த் தமிழ்காத்தல் ஒன்றே நாடிப்,

பண்டிருந்த மேன்மையினை நிலைநாட் டத்தாம்
பாசறைகள் காண்பதற்கும் போராட் டத்தில்

மண்டிவரும் அடக்குமுறை ஏற்ப தற்கும்,
மறைமலையார் போற்புலவர் திரண்டு விட்டார்!

பெண்டிருமே முன்வந்து, பெரும் எதிர்ப்பைப்
பேராற்றல் துலங்கிடவே காட்டி நின்றார்!

படைதிரண்ட தமிழ்மக்கள் ஆர்வத் தாலும்
பட்டாளம் போல்வந்த பான்மை யாலும்
மடைதிறந்த வெள்ளமென எதிர்ப்ப லைகள்
மளமளென வீசிவந்த வேகத் தாலும்
கடைவிரித்த இந்தியினைக் கொள்வா ரின்றிக்
கண்மூடி, வந்தவழி அனுப்பி வைத்தார்!
உடைதரியாத் தளபதியாய் ஆனார் அண்ணா;
ஒப்பில்லாச் சிறைவாசம் முதலாய் ஏற்றார்!

ஆணவத்தால் பள்ளிகளில் இந்திப் பாடம்
அமைத்திட்டார் அந்நாளின் முதல மைச்சர்;
வீணடித்தார் கல்வியினை; தமிழ ழிக்க
வீராப்புக் கொண்டிட்டார் என்ற றிந்து
காணரிய பேரெதிர்ப்புக் காட்ட லானார்
கனித்தமிழர்; அணிதிரண்டார்; படையும் கண்டார்!
ஆணரசன் அழகிரியும் அறமூ தாட்டி
அம்மைஇரா மாமிர்தம் தலைமை தாங்கப்

புறப்பட்டார் தலைநகராம் சென்னை நோக்கிப்
புலித்தமிழர் போர்க்குணத்தை நாடு காண!
அறப்படையை வழியெங்கும் வாழ்த்த லானார்!
அஞ்சாநெஞ் சன்மறவன் அழகர் சாமி
சிறப்புடனே எதிர்ப்புகளைத் துச்ச மென்று
சேனைதனைக் கால்நடையாய் நடத்தி வந்தான்!
மறப்பரிய மாவீரர் புகழைப் பாடி
மாத்தமிழர் அண்ணாவும் வரவேற் றாரே!

இந்தியினை எதிர்க்கின்ற போராட் டத்தை
ஏற்காத தேசியத்தார் முகாமை விட்டு
வந்துவிட்டார் நடராசன்! மனைவி யோடு
மறியலிலும் ஈடுபட்டார்! அண்ணா வுக்கும்
தந்தனரே ஆறுதிங்கள் சிறைவா சந்தான்!
தமிழ்க்குலத்தார் ஈராயி ரம்பேர் சென்றார்!
வெந்துயரைத் தருஞ்சிறையைச் சோலை யாக்கி,
வீரகாதை இயற்றினரே! முதலாம் போரில்

அடக்குமுறைக் காளாகிச் சிறைக்கோட் டத்துள்
அரியவுயிர் நீத்தனரே இருவீ ரர்கள்!
தடக்குன்றாம் நடராசன், தாள முத்து
தமிழ்ப்பயிர்தான் செழிப்பதற்கே எருவாய் ஆனார்!
இடக்குரைத்தார் இராசாசி முதல மைச்சர்;
எழுந்தனர்காண் இளந்தமிழர் சிங்கம் போலே!
முடக்குவாத இந்தியுமே வந்தாற் போல
மூலைக்குப் போனதன்றே; தமிழர் வென்றார்!

புத்துணர்ச்சி விதைதூவித் தமிழ கத்தில்
போராட்ட எண்ணத்தை வளர்த்து வந்த
சத்துநிறை தளபதியாய் அண்ணா ஆனார்!
தலைவரான பெரியாரும் மனம்ம கிழ்ந்து,
முத்துவிளை சிப்பியினைக் கண்டெ டுத்து
முக்காலம் உணர்ந்தவராய் நடக்க லானார்!
தத்துவமாய்த் 'தமிழ்நாடு தமிழர்க்' கென்னுந்
தகைமொழியை நாடெங்கும் பரப்பி வந்தார்!

ஆயிரத்தொள் ளாயிரத்து நாற்ப தாண்டில்
ஆரூரில் மாநாடு கூட்டி னர்காண்
தாயகத்தைத் தனியாக்கித் தழைக்கச் செய்யத்
'தமிழ்நாடு தமிழர்க்கே!' எனுமு ழக்கம்
பாயிரமாய்க் கொண்டிருந்த நீதிக் கட்சிப்
பாவலனாம் அண்ணாவின் புதுமை யான
தூய 'திரா விடநாடு திராவி டர்க்கே!'
தொடங்கியதும் இங்கேதான்; தொடர்ந்த தன்றோ!

கன்னடமும், மலையாள மும்தெ லுங்கும்
கவின்தமிழின் திரிபுகளே! அவ்வி னத்தார்
தென்னகத்தில் ஒரே குடும்பம்! மொழியால், பண்பால்,
தேயாத நாகரிகக் கலாச்சா ரத்தால்!
தொன்மைமிகும் திராவிடத்தை ஆரி யத்தின்
தொடர்ச்சியான படையெடுப்பும் சிதைக்க வில்லை!
அன்னவரே வரலாற்றால், நிலவ ளத்தால்
அழகான கூட்டரசு சமைத்தல் கூடும்!

தில்லியிலே எதற்காக நடுவண் ஆட்சி?
தில்லிக்குத் தலைமையினை அளித்தோர் யாரோ?
எல்லையிதைத் தனியாக இயற்கை யன்னை
இசைவாக அளித்திருக்க, எந்த நாளும்
தொல்லையினைத் தருகின்ற வ்டவ ரோடு
தொடர்ந்துவாழ நியாயமென்ன? இங்கே வந்தும்
நல்லவற்றைச் சுரண்டுதற்கே வருகின் றார்கள்;
நமக்கிருக்கும் உரிமையெலாம் பறிக்கின் றார்கள்!

'விடுதலை' யும் 'குடியரசு' ம் அண்ணா தீட்டும்
வீரவரிக் காவியங்கள் பாடு மாறும்,
கெடுதலெலாம் கண்டித்துத் துடைக்கு மாறும்,
கீழ்ப்பட்ட தென்னாட்டார் உணரு மாறும்,
படுதுயரை நீக்குதற்கே வழிவ கைகள்
பாங்குடனே காட்டுமாறும், பெரியார் அன்றே
விடுகணையாய் அண்ணனுக்கு வாய்ப்புத் தந்தார்;
வீரமிகும் ஈரோடு சேர்ந்தார் அண்ணா!

# எழுதுகோல் வேந்தன்

ஆரியத்தின் அடிப்படையில் அமைந்த தான
ஆதிக்கத் தைப்பழைமைக் கருத்தைச் சாடிக்,
காரியத்தில் கண்ணான புரோகி தர்கள்
கற்பனையைப், புராணத்தின் கதையை விண்டு—
சீரியநல் தமிழ்ப்பண்பை அழித்து விட்டுத்
தேவையற்ற சாதிமுறை புகுத்திப் பின்னே
கூரியநம் அறிவெல்லாங் கொன்ற செய்தி
கூறிவந்தார் அண்ணாதம் நாவி னாலே!

இதிகாச புராணங்கள் அறிவைக் கொல்லும்;
ஏமாற்றும் தன்மானம் இழக்கச் செய்யும்!
இதுகாறும் விட்டுவைத்த தீமை நீங்க
இராமாய ணம்பெரிய புராணம் போன்ற
மதிகருக்கும் நூல்களிலே தீயை இட்டு
மாய்த்திடுவோம் நச்சுநிறை இலக்கி யங்கள்!
அதிவிரைவாய்ப் பரவட்டும் செந்தீ என்ற
அண்ணாவின் முழக்கத்தை மறுத்துப் பேச

நாவலராம் பாரதியார் பசும லைவாழ்
நம்சோம சுந்தரரும் வாதம் செய்ய
ஆவலுடன் முன்வந்தார்! அண்ணா வைத்த
அறிவுத்தீ பொசுக்கியதால் ஒதுங்கிச் சென்றார்!
சேவலைப்போல் சிலிர்த்துவந்த சொல்லின் செல்வர்
சேதுப்பிள் ளையவர்கள் சிந்தை நோவக்
காவலர்எம் அண்ணாமுன் தோற்க நேர்ந்து
கடிதகன்றார்! இவையிரண்டும் வரலா றன்றோ!

செந்தமிழுக் கித்தனைதான் சிறப்பு முண்டோ?
செம்மையாகக் கருத்துகளை விளக்கு தற்கே
அந்தமிகும் அடுக்குச்சொல் தொடர்ந்து பெய்தே
அணிமோனை விரவிவர எழுதல் ஆமோ!
விந்தையுடன் வீரத்தை வாள்மு னைபோல்
வெடுக்கென்று தைத்திடவும் செருக லாமோ?
சொந்தமுடன் இந்நடையைத் தமதாய் ஆக்கிச்
சொக்க வைத்த அண்ணாவைப் புகழார் யாரே?

செய்யுளைப்போல் மனப்பாடம் செய்து வைத்துச்
சிந்தையிலே இருந்துதற்கும் எளிமை யாக
மெய்யுரைகள் தீட்டிவந்தார் அண்ணா! அன்று
மேன்மையுடன் ஏடுகளில் சமைத்துத் தந்த
நெய்யுணவு வாயெல்லாம் மணக்கச் செய்யும்!
நிமிர்ந்துநின்று தமிழ்நாட்டின் எழுத்தா ளர்கள்
அய்யய்யோ என்றலற, இடிமு ழக்கம்
அடிக்கடிதான் வெடித்துவரத் தொடுத்தார் அண்ணன்!

தென்னாட்டில் எந்நாளும் கீரணர் வண்ணம்
தீவிரமாய்ப் புத்தெழுச்சி பாய்ந்த தாலே,
பொன்னான கல்விபெறும் மாணாக் கர்கள்
புதுமையாகத் தமிழுணர்வும், இனவு ணர்வும்,
முன்னாளில் இல்லாத மூடக் கொள்கை
முறித்திடுமோர் அறிவுணர்வும் மூண்டு தோன்ற,
அன்னாரின் எழுத்தாலே ஈர்க்கப் பட்டார்;
அண்ணாவை வழிகாட்டி யாகக் கொண்டார்!

நாட்டோரும் சிந்திக்கத் தொடங்கி விட்டார்;
நாயகனாம் பெரியாரின் கொள்கை தம்மைக்
கேட்டாரைப் பிணிக்கின்ற சொல்லால் கூறிக்
கேளாரும் படிக்கின்ற முறையில் நன்கு
தீட்டிவந்தார் அண்ணாவும்! திசைபு ரிந்து
திராவிடர்நாம் என்பதெல்லாம் உணர்ந்த தாலே
போட்டியிட்டு முன்வந்தார் இளைஞர் கூட்டம்
பொங்கிவந்தார் பெருவெள்ளம் போல அன்றே!

# மாணாக்கர் இலம்பகம்

ஆங்காங்கு பெரியாரைப் பயின்ற தாலும்,
அண்ணாவின் விளக்கவுரை உணர்ந்த தாலும்
பாங்காகக் கல்விபெறும் மாணாக் கர்கள்
பகுத்தறிவுக் கொள்கையின்பால் மனம்செ லுத்தித்
தூங்காது விழிப்புற்றுக், கிளர்ந்தெ ழுந்த
துடிப்பினையே அண்ணாவும் புரிந்து கொண்டு
நீங்காமல் அவரருகே நெருங்கி வந்து
நீடித்த பயன்பெறவே திட்ட மிட்டார்!

அண்ணாம லைச்செட்டி யாரின் அன்பால்
அமைந்துள்ள பல்கலைசேர் கழகந் தன்னில்—
அண்ணாவும் சொற்பொழிவு நிகழ்த்த வந்தார்;
அதன்மூலம் வரலாறு புதிதாய்க் கண்டார்!
நண்ணாமல் ஒதுங்கிநின் றார் நாடிச் சென்றே
நயந்திட்டார்; நமதியக்க மாண வர்கள்
கண்ணான அண்ணனையே மொய்த்துக் கொண்டார்!
காலத்தைச் சரியாகக் கணித்தார் அண்ணா!

அ.—5

குடந்தையிலே திராவிடத்து மாண வர்கள்
கூடுமொரு சிறப்புமிக்க முதல்மா நாடு
நடந்ததில் அண்ணாவும் பங்கு பெற்றே,
நலமுடனே, திராவிடர்யார்? ஆரி யர்யார்?
உடந்தையாகத் தமிழருமே தமிழ ழிக்க
ஒத்துழைத்த தீங்கென்ன? என்ப தாகக்
கடந்தகால நிகழ்ச்சிகளை நிரலாய்க் கூறிக்
கண்திறக்க வழிசெய்தார் திறமை யோடு!

பெரியாரை அழையாமல் அண்ணா காட்டும்
பெரியாரின் பாதையிலே செல்வ தற்குச்
சரியான நேரத்தில் முன்வந் திட்ட
தமிழ்நாட்டு மாணவரை இட்டுச் செல்ல
உரியாராம் அண்ணாவும் அய்யா வின்பால்
உரைத்திட்டார்; பெரியாரும் ஈரோட் டில்ஓர்
அரிதான பயிற்சிமுகாம் அமைத்து விட்டார்;
அனைவர்க்கும் அன்பழைப்பும் விடுக்கச் செய்தார்!

விடுமுறையை வீணாகக் கழிக்கா வண்ணம்
விரைந்திட்டார் மாணவர்கள் ஈரோட் டுக்கே!
கடுமுயற்சி மேற்கொண்டே—உணவும், தங்கக்
கனிவாக உறையுளுமே அளித்தார் தந்தை;
இடும்உரையை ஏந்துதற்கும், அண்ணா தந்த
ஈடற்ற சொற்பொழிவைச் செவிம டுத்துக்,
கெடுமுறையைப் புரிந்துகொண்டு திராவி டர்கள்
கீழ்நிலையை மாற்றுதற்கும் துணிவு கொண்டார்!

நெடுஞ்செழியன்—பெயர்க்கேற்ற உயர்ந்த தோற்றம்;
நீண்டதொரு கருந்தாடி; நெடிய சட்டை!
கடுமையுடன் அன்பழகன் பேச்சி ருக்கும்;
காற்றடித்தால் பறக்கின்ற மெலிந்த மேனி!
கொடுமைதான்—மதியழகன் உருவம் குள்ளம்;
கோடையிடி போற்குமுறும் குரலோ ஓங்கும்!
தொடுமுன்னர் ஓட்டுகின்ற கரிய தேகம்;
துணிச்சலுள்ள இளம்வழுதி! இவர்க ளோடே

வெடிகுண்டாய் முழக்கமிடும் அருமை நண்பர்
வெகுளியான சனார்த்தனமும்; பெரியா ரின்பால்
அடிநாளில் அந்தரங்க உதவி யாளர்
அமைதியுள்ள கசேந்திரனும்; குடந்தை தன்னில்
கொடிஉயர்த்தி மாணவர்கள் கழகங் கண்ட
கூர்மைதவ மணிராசன் கருணா னந்தம்—
படிப்புவிட்டுப் பகுத்தறிவுப் பாதை சென்றார்!
பண்புடையார் சத்தியேந்திரன்! அண்ணா பின்னால்

கரம்பற்றிச் சிறுவனாகத் தொடர்ந்து சென்று,
கதைகேட்டும், தின்பண்டம் பெற்றுத் தின்றும்
உரம்பெற்ற சம்பத்தோ அய்யா வுக்கே
உடன்பிறந்த மூத்தாரின் மூத்த பிள்ளை!
வரம்பெற்ற வாலிபர்க்குப் படிப்பில் நாட்டம்
வரவில்லை! அண்ணாவின் முயற்சி யாலே
தரம்பெற்ற திருப்பத்தூர் சாமி நாயடு
தாம்பெற்ற சுலோசனாவை மணந்து கொண்டார்!

நற்பயிற்சி அண்ணாவின் முயற்சி யாலே
நடைமுறையில் பெற்றவர்கள் நாடு முற்றும்
கற்பதனால் ஆயபயன் விளங்கு மாறு
கல்லூரி விடுமுறையில் மாவட் டத்தில்
சொற்பயிற்சி மேற்கொண்டு, கொள்கை சொல்லிச்,
சுற்றிவந்தார் ஒருதிங்கள் சிற்றூர் தோறும்!
அற்பமென ஒதுக்கிடவே யாரால் ஒல்லும்?
அய்யாவும் பெருமகிழ்வு கொண்டார் அன்றே!

புதியதொரு பிரசாரப் படையைக் கண்டு
புத்துணர்ச்சி பெற்றனரே இயக்கத் தோழர்!
கதியெனவே நம்பி, தள பதியாய் ஆன
கண்ணியத்தின் இருப்பிடமாம் அண்ணா செய்த
அதிசயத்தை ஆர்வமுடன் ஆத ரித்தே,
ஆங்காங்குப் பொதுக்கூட்டம் நடத்தித் தந்தார்.
விதிதன்னை நிர்ணயிக்கும் வீர ரான
விறல்கருணா நிதிமட்டும் தனிப்பா தைதான்!

தமிழகத்து மாவட்டந் தோறும் இந்தத்
 தகைமைசால் மாணவர்கள் சுற்றிச் சுற்றி
அமிழ்தான தாய்மொழியில் பெரியார் கொள்கை
 அருமையான குரலெடுத்துப் பேசிப் பேசிச்
சமுதாயம் சீர்கெட்ட வகையும் கூறிச்
 சலியாது பிரசாரம் புரிய லானார்!
அமைவாக, ஆங்காங்கே உள்ள தோழர்
 ஆதரிக்கப் பயணங்கள் நடத்தி வந்தார்!

ஒருதிங்கள் கல்லூரி ஓய்வுக் காலம்
 உபயோகப் படுமாறு செலவ ழித்துப்
பெருமளவில் கொள்கையெல்லாம் பரப்பி வந்தார்!
 பெரியாரும் அண்ணாவும் மகிழ்வாய் இந்தக்
கருவிதனை இடைவிடாது பயன்ப டுத்தக்
 கருத்தினிலே இருத்தி, மற்ற மாண வர்க்கும்
வருகின்ற விடுமுறையில் பயிற்சி நல்க
 வகுத்திட்டார் திட்டங்கள் ஊர்கள் தோறும்!

# அண்ணா காவியம்

## III கழகக் காண்டம்

13. முகிழ்த்தது விடிவெள்ளி

14. கூத்தாடிய படலம்

15. கீறல் விழுந்த காதை

16. கண்ணீர்த் துளிகள்

17. முன்னேற்றப் படலம்

18. அறப்போர்க் காதை

# முகிழ்த்தது விடிவெள்ளி

சேலத்தில் நடைபெற்ற நீதிக் கட்சிச்
சிறப்பான மாநாட்டில் அண்ணா பெற்ற
சீலத்தால் புரட்சிமிகும் தீர்மா னங்கள்
சிலவற்றைக் கொணர்ந்து, பெரு மாற்றம் கண்டார்!
காலத்துக் கொவ்வாத பதவி, பட்டம்
காற்றோடு விடவேண்டும்; கட்சிப் பேரை
ஞாலத்தில் திராவிடர் கழகம் என்றே
நவிலவேண்டும் எனஇயற்றி, வென்றார் அண்ணா!

பட்டங்கள் பதவிகளைப் பெரிதாய் நம்பிப்
பகல்வேடந் தரித்திருந்த சிலரை இந்தத்
திட்டங்கள் தடுமாறச் செய்த தாலே,
சீற்றமுடன், ஏற்காமல், எதிர்த்தும் பார்த்தார்!
சட்டங்கள் ஆக்கவல்ல மக்கட் கூட்டம்
சரியாத பேரார்வம் காட்டி, அன்னார்
கொட்டத்தை அடக்கிடவே முனைந்து நிற்கக்,
குறைவின்றி முகிழ்த்ததுநம் மக்கட் கட்சி!

அரசியலில் மிகப்பெரிய மாற்றந் தந்த
அண்ணாவின் தீர்மானம் அந்த நாளில்
வரலாற்றுப் புகழ்பெற்றுத் திகழும் வண்ணம்
வடிவத்தைத் தீட்டியவர் நம்அண் ணன் தான்!
பெறலரிய பட்டங்கள் பதவி எல்லாம்
பிச்சையாக வெள்ளையராம் அயல்நாட் டார்கள்
தரலானார் நம்மவர்க்கே! அவற்றை நீக்கித்
தன்மானம் உடையரெனக் காட்ட வேண்டும்!

காலமெலாம் தம்ஆட்சி இந்தியாவில்
கவிந்திருக்க உதவிடும் இந் நீதிக் கட்சி!
கோலமிகும் கவர்ச்சிகளால் தம்மை நத்திக்
குலவுதற்குப் பரிசுசில தந்தால் என்ன?
ஞாலமெலாம் கட்டியாளும் ஆங்கி லேயர்
நம்மவரை மிகஎளிதாய் நினைத்து விட்டார்!
?லமிகும் அண்ணாவின் சிந்த னைக்கோ
சிறப்பளிக்க வில்லையவர் கபட நோக்கம்!

பாதிக்கப் பட்டவர்கள் சீறிப் பாய்ந்து
பார்த்தார்கள்; பலிக்கவில்லை! இனிமேல் தத்தம்
ஆதிக்கம் செல்லாதென் றுணர்ந்த தாலே
அகன்றார்கள்; சுயநலத்தைப் பெரிதாய் எண்ணி!
நீதிக்கு முதலிடத்தை தந்த அண்ணன்
நிமிர்ந்துநின்று பெரியாரின் கருத்திற் கேற்பச்
சாதிக்கத் தொடங்கிவிட்டார்! புரட்சி யான
சரித்திரமே தொடர்ந்ததின்னும் வேகமாக!

கட்சிக்குத் திராவிடர் கழகம் என்ற
கவினுறுநல் எழுச்சிமிகு பெயரும் தந்து
தட்சிணத்தில் புத்துயிரும் ஊட்டி விட்டார்!
தகைமிக்க மாணவரின் கொள்கை நாதம்
உட்சென்றே உணர்வெழுப்பி ஊர்கள் தோறும்
உத்வேகம் மூட்டிவிடப், பாமரர்கள்
பட்சிகளின் கூட்டமெனப் பறந்து வந்து
பலமிக்க கழகமாக ஆக்கி னார்கள்!

சேலத்துத் தீர்மானம் செய்த மாற்றம்
சிறப்பாக இளையோரை ஈர்த்த தாலே—
காலத்தின் தீவிரத்தைப் புரிந்து கொண்டோர்
கருத்துமிக்க கழகத்தில் தொண்டர் ஆனார்.
ஓலத்தால் தமிழ்ச்சிறப்பை அடக்கப் பார்த்த
ஒய்யார புரியினர்க்கும் உணர்த்தும் கொள்கைப்
பாலத்தைப்—பத்திரிகைப் பணியை— அன்றே
பக்குவமாய்த் துவக்கினார் நம் ஆரூர்த் தம்பி!

அடுத்தாண்டு திருச்சியிலே புத்தூ ரின்கண்
அருமையாகத் திராவிடர் கழகச் சார்பில்
எடுத்திட்ட சிறப்புமா நிலமா நாட்டில்—
ஏந்தல்நம் அண்ணா, நல் அழகர் சாமி
தொடுத்துரைத்த விளக்கத்தால் மேலும் மேலும்
தொகுப்பாகத் திராவிடநா டென்னும் வேட்கை
படுத்திட்ட தமிழர்க்கும் தெளிபுண் டாக்கப்
பாரெல்லாம் நம்பக்கம் பார்த்த தேகாண்!

"கன்னடமும் களிதெலுங்கும் கேர ளம்வாழ்
கவின்மலையா ளமும்மற்றுந் துளுவும் எங்கள்
தென்னகத்தில் தமிழினின்று பிறந்த வைதாம்;
திராவிடத்து மொழிக்குடும்பம் சேர்ந்த வைதாம்;
நன்னிலையில் இவையிணைந்த கூட்டு நாடே
நாம்விரும்பும் திராவிடமாம்! இந்நாட்டிற்குத்
தன்னிகரில் வரலாறும், நில நூற் சான்றும்,
தனிப்பண்பும், நாகரிகம் யாவும் உண்டாம்!

இந்தவிதத் தமிழினத்தார் எதனால் இந்நாள்
இந்தியாவின் பிறபகுதிக் கார ரோடு
சொந்தமுடன் வாழ்வது? நம் சோறு பண்பு,
சொல்லாட்சி எல்லாமே வேறே அன்றோ?
இந்திமொழி ஆதிக்கம் என்றும் நம்மை
இழிவுசெய்யும், அடிமையாக்கும், தமிழைக்கொல்லும்!
விந்தியத்தின் தெற்கிருப்போர் மனித ரென்றே
விந்தைமிகும் வடநாட்டார் நினைப்ப தில்லை!

வெள்ளையரின் மேலாட்சி இருக்கும் போதே
விடுதலைக்குப் போராடும் போர்வை யின்கீழ்க்
கொள்ளையிட வடநாட்டு வணிக வேந்தர்
கும்பலாகத் திட்டமிட்டுத் தென்னாட் டாரைக்
கள்ளமாகச் சுரண்டுகிறார்; வேட்டைக் காடாய்க்
கருதுகிறார் திராவிடத்தைத்; தொழில்வ ளத்தில்
எள்ளளவும் முன்னேற்றம் தெற்கே யில்லை;
எல்லாமே வடபுலத்தில் வளர்ந்து வாழும்!''

என்றுபல ஆதாரம் அடுக்க டுக்காய்
எடுத்துவைத்த அண்ணாவின் மேதை கண்டு—
'நன்றுநன்று! நம்நிலைமை இஃதோ?' என்றே
நாட்டுமக்கள் சிந்திக்கத் தலைப்பட் டார்கள்!
குன்றனைய இன்னலிலே நம்மைத் தள்ளிக்
குடிகெடுக்கச் சிலர்நினைத்தால், அதைத்த டுக்க
ஒன்றுபட்டுத் தென்னாட்டார் உணர்ந்தெ ழுந்தால்
உருப்படுவோம் என்பதெல்லாம் சொன்னார் அண்ணா!

மேடையிலே மூன்றுமணி நேரம் நின்று,
மெல்லமெல்லக் குதிகாலை உயர்த்திக், கையின்

சாடையிலே விழியோட்டிச் சுழன்று, சப்த
சங்கீதச் சாரீரச் சுருதி கூட்டித்,

தோடியிலே ராசரத்னம் நாய னம்போல்—
தொடர்ந்துவிழும் சொற்கோவை இசையாய்ப்
பொங்க—

ஆடையினால் வியர்வையினைத் துடைத்த வாறே—
அரைநொடிக்குள் பொடி உறிஞ்சிப் பேசும் போதில்—

கேட்டாரின் மனக்கதவைத் தட்டி, உள்ளே
கிளுகிளுக்குந் தென்றலெனக் கருத்து வீச,

வாட்டுகின்ற மூளையிலே உழுது, மெல்ல
மறுமலர்ச்சி வித்தூன்றச் செய்வார்! என்றும்

ஏட்டளவுக் கல்வியில்லா ஏழை மாந்தர்
எதற்காக? எப்படி? ஏன்? என்று கேள்வி

கேட்டறியத் தூண்டிவிட்ட தலைவர்! போலிக்
கிளர்ச்சிகளால் வளர்ச்சிபெற்ற தலைவ ரல்லர்!

திருப்தியாய் முடிந்த திருச்சிமா நாடு
திருப்பு முனையெனத் தீர்மா னம்பல
நிறைவேற் றியது! நீண்டநா ளாகக்
குறைவே இன்றிநம் கொள்கைப் படையினர்
தொண்டுகள் பற்பல தொடர்ந்தனர் எனினும்;
கண்டதும் உணரக் கவர்ச்சி மிக்கதாய்ச்
சீருடை அணிதல் சிறப்பெனக் கருதிக்
காருடை தரித்துக் கருமம் விளைத்திடக்
கருப்புச் சட்டைப் படையொன்று காண்போம்!
விருப்ப முடையோர் விரைந்து சேர்கெனத்
தந்தைஓர் அறிக்கை தந்தனர்! அண்ணனும்
சிந்தை மகிழ்வுறச் செப்பினர் சம்மதம்
கருணா னந்தமும் அருமை சம்பத்தும்
அமைப்பா ளர்களாய் ஆக்கினார் அய்யா!
இமைப்போ தேனும் இடைவெளி தராமல்
'குடிஅரசு' ஏட்டின் வெடியர சான
இடிக்குரல் கருணா நிதி முதல் உறுப்பினர்!

கருப்புச் சட்டை தரிப்பது கண்டு
தருப்பைப் படையினர் தளர்ந்தனர் நெஞ்சம்!
'அரசியல் சமூகம் பொருளியல் அனைத்திலும்
சரிசம நிலையினைப் பெறும்வரை யாவரும்
இழிநிலை காட்டிட ஏற்ற சின்னமாய்
அழிவிலா தென்றுமே அணிவோம் கருப்புடை!'
என்றொரு புதுநெறி இயம்பினார் பெரியார்!
நன்றா காதென நவின்றார் அண்ணா!
வெள்ளுடை தரிப்போன் குள்ள நரியென
உள்ளம் சினந்திட உரைத்தார் பெரியார்:
'கருப்புடை அணியான் எவனையுங் காண
ஒருப்படேன்' என்றார், விருப்பம் மிகுதியால்!
'எல்லா நேரமும் ஏனோ கருப்புடை?
தொல்லையோ டன்றி நல்லது மாகா!
தேவையோ டணிந்தால் சேவையை மதிப்பார்!'
எனுமொரு கருத்தை முனகினார் அண்ணா—
இந்த வகையில் தந்தை தனயன்
உறவில் கீறல் சிறிதாய் வீழ்ந்ததே!

# கூத்தாடிய படலம்

தலைவாழை இலைபோட்டு விருந்து வைத்த
தன்மைபோல் அறிவார்ந்த பசியைப் போக்கக்
கலைவாணர்—பாகவதர் இருவர் சேர்ந்து
கனித்தமிழின் புகழ்சமைத்து வந்த போது...
கலைவாழ்வில் தமிழரினம் தழைத்தல் கண்டு
காழ்ப்புணர்ச்சி கொண்டசில கயவர், தாமே
கொலைவாளை அவர்கையில் கொடுத்தாற் போலக்
குற்றவாளி ஆக்கிவிட்டார்! கொடுமை; அந்தோ!

பொங்கியெழுந் தார் அண்ணா! ஊர்கள் தோறும்
பொதுக்கூட்ட வாயிலாக நீதி கோரிச்
சங்கொலித்து முழக்கமிட்டார்! ஆங்கி லேயச்
சரித்திரத்தில் கறைபடிய வேண்டாம்! என்றார்.
இங்கிருவர் இல்லாத குறையை நீக்க
இளம்நடிகர் இராமசாமிக்கு ஊக்கம் தந்து
சங்கீத நாடகங்கள் நடிப்ப தற்குத்
தஞ்சையிலே சபையொன்று நிறுவச் செய்தார்.

மூத்ததமிழ், காலத்தால்! ஞாலம் ஆண்ட
மூவேந்தர் பாராட்டப் புலவர் கூடி
யாத்ததமிழ்! எழிலோடு மூன்று சங்கம்—
இயலென்றும், இசையென்றும், இரண்டும் சேர்ந்த
கூத்தென்றும் மூன்றுவகைத் தரம்பி ரித்தே
கொண்டாடச் சிறந்ததமிழ்! முற்றுங் கற்றே
'ஆத்தாடி! இவர்யார்?' என் றேவி யக்க
அண்ணாவும் கூத்தாடி ஆனார் அன்று!

படித்தவர்கள் நாடகத்தில் வேடம் போட்டால்
பண்பல்ல என்றுரைக்கும் பண்டை நாளில்—
இடித்துரைத்த இழிசொற்கள் எள்ளித் தள்ளி—
இளைஞருக்கு வழிகாட்டக், கலைகள் வாழ,
அடித்தளமிட் டார்அண்ணா! காஞ்சி மண்ணில்
அமைத்தனரே திராவிட நடிகர் சங்கம்!
வெடித்தெழுந்த நல்லுணர்வால், சமுதா யத்தின்
வினாக்குறிபோல் தீட்டினரே நாட கங்கள்!

''சந்திரோதயம்'' என்ற நாடகத்தில்
சமுதாயச் சிக்கலெல்லாம் விண்டுரைத்தார்!
எந்தவிதம் பணக்காரர், ஆதீனத்தார்
ஏழையரை வதைக்கின்றார் என்பதெல்லாம்
சிந்தனைக்கு விருந்தாக்கிப் படைத்துக் காட்டிச்
சிறப்பாக மூன்றுவித வேடந் தாங்கி
வந்தனரே, சூழற்காற்றாய்த் தமிழ்நாடெங்கும்!
வரவேற்றுச் சிரமீதில் வைத்தோம் அன்றே!

''சந்த்ரமோகன் அல்லது சிவாஜி கண்ட
இந்துராஜ்யம்'' சரித்திரத்தின் தக்க சான்று!
விந்தையுடன் அண்ணாவும் காகபட்டர்
வேடமேந்தி ஆரியத்தின் ஆணவத்தைத்—
தந்திரமாய் மன்னவரை, வீரர் தம்மைத்
தாள்பணியச் செய்தவொரு சாகசத்தைச்—
செந்தமிழர் மனமுருகச் சித்திரித்தார்;
சீரான தொழில்நடிகர் வியப்பிலாழ்ந்தார்!

இசைபாடி நடிக்கவல்ல இராம சாமி
ஏற்றமுறக், குழுவினர்கள் வாட்டம் நீங்க,
வசைபாடும் வைதிகரின் வாய டக்க
வரைந்திட்டார் "ஓர் இரவு", "வேலைக் காரி"
அசைபோடும் மாடுகள்போல் பழைமை தன்னை
அரைத்துவந்த நிலைமாற்றி விட்டார் அண்ணா!
விசையோடும் எழுச்சியுற்ற தமிழ கத்தில்
விரைவாகப் புத்துணர்ச்சி பரவக் கண்டோம்.

பேச்சாலும் எழுத்தாலும் நூறு நாட்கள்
பெரியதொரு கருத்தினையே புரிய வைத்தால்—
பூச்சாலே ஒப்பனையால் வேடம் மாற்றும்
புதிதான நாடகத்தால் இரண்டே நாளில்
மூச்சுவிடத் திணறுகின்ற முதியோர் கூட
முழுக்கருத்தும் புரியுமாறு செய்தல் கூடும்!
ஏச்சாலே நமையடக்கப் பார்த்தோர் கூட
இவ்வழியில் மிகமுயன்றார்; தோற்றார் அன்றே!

அண்ணாவின் நாடகத்தைக் 'கல்கி' போன்ற
அயலாரும் பாராட்டிப் புகழ்ந்து ரைத்தார்!
அண்ணாவைப் போல்கருணா நிதியும் அன்றே
அழகாகத் தந்தனரே "தூக்கு மேடை"
கண்ணான கலைவளர்க்கப் "போர்வாள்" ஒன்றும்
கண்டனரே சிற்றரசு, இராதா வோடு!
மண்ணாண்டு வந்தவர்கள் மருள லானார்,
மகத்தான புரட்சிமலர் பூக்கக் கண்டு.

மதுரையிலே வையையாற்று மணற்ப ரப்பில்
மாநிலத்தின் கருஞ்சட்டை மாநா டொன்றை
முதன்முறையாய்க் கூட்டினோம்; கார் மேகக் கூட்டம்
மொய்த்துநகர் மீதிறங்கி வந்தாற் போல
அதுவரையில் காணாத மக்கள் வெள்ளம்
அலைபாயப் பொறாதவர்கள்—இரவுப் போதில்
மெதுவாகப் பந்தருக்குத் தீயிட் டார்கள்!
வெருண்டோட விரட்டினரே, நம்மை யெல்லாம்!

அஞ்சாமல் தந்தையுடன் அண்ணா மற்றும்
அருந்தொண்டர் அனைவருமே சமாளித் தாலும்,
எஞ்சாமல் தாய்மார்கள் மருண்டே ஓட
இழிகுணத்தார் துரத்தினார்கள்! இன்றவர்கள்
நெஞ்சினிலே கைவைத்து நினைக்க வேண்டும்;
நிலைமையென்ன? இன்றந்த மதுரை முற்றும்
விஞ்சுபுகழ்க் கழகத்தார்! எதிர்த்தோர் எங்கே?
வினைவிதைத்தோர் வினையறுத்துப் போனார் அந்தோ!

# கீறல் விழுந்த காதை

''மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்
மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல்!''
ஏடுகளில் படித்ததுண்டா இதுபோல் முன்னர்?
இயம்பியவர் பாரதிதா சன்ந மக்குச்
சூடுவரச், சொரணைபெற, மானம், வெட்கம்,
சுயமரியா தையுணர்ச்சி தோன்ற—அந்நாள்
வீடுகளில் புரட்சிவிளக் கேற்றி வைத்து
வெளிச்சத்தைக் காட்டியவர் கவிஞர் தாமே?

அக்கவிஞர் நம்பக்கம் இருப்ப தென்றால்...
அறிவுலகம் செய்தபெரும் பேறே அன்றோ?
தக்கவண்ணம் பாராட்டிப் பெருமை செய்தால்
தமிழுலகு பயன்பெறுமென் றெண்ணிச் சில்லோர்
சிக்கனமாய்க் குழுவொன்றை அமைத்தார்! ஆங்குத்
திருவாரூர் இராமனுடன், சலகை கண்ணன்
'க்கலிட்டுப் பார்த்தார்கள்! முடியா மற்போய்
'முறையிட்டார் அண்ணனிடம்! வெற்றி பெற்றார்!

சென்னையிலே விழாவொன்றை எடுத்து, மக்கள்
திரண்டுவரச், சிறப்பாகக் கவிஞருக்குச்
சொன்னபடிப் பொற்கிழியொன் றளித்தார் அண்ணா!
சோம்பேறிப் பழக்கமென வைதார் அய்யா!
சின்னவர்கள் செயலென்று சொல்லி அண்ணா
சீர்திருத்தக் கவிஞரையே வியப்பில் ஆழ்த்தி,
மன்னவர்கள் முன்னாளில் வழங்கி னாற்போல்
மகத்தான பாராட்டை நல்கி விட்டார்!

கருவூரில் நெசவாளர் போராட் டத்தில்
கலவரமும் தீவைப்பும் நிகழ்ந்த போழ்து—
பெருமுள்ளம் படைத்தஅந்நாள் ஆட்சி யாளர்
பிடித்தடைத்தார் சிறைக்குள்ளே கழகத் தாரை!
மருவற்றார் என்பதெலாம் மெய்ப்ப டுத்த,
வழக்குமன்றம் செல்வதற்கு முனைந்தார் அண்ணா!
அருவிருப்பம் பெரியாருக் கில்லை யாக;
அண்ணாவே நிதிதிரட்டி, வழக்கில் வென்றார்!

ஆயிரத்தொள் ளாயிரத்து நாற்பத்தேழில்
ஆங்கிலேயன் இந்தியாவைக் கூறு போட்டுப்—
'பாயிரங்கள் புகழ்ந்தேத்தும் பாரதத்தைப்
பார்த்துக்கொள் வீர்' என்று திரும்பிப் போனான்.
தாயிருகை விலங்கொடிந்த திருநாள் என்றே
தாங்கவொணா உவகையிலே திளைத்தார் மக்கள்!
'சே! யிதுதான் துக்கநாளாம்' என்றார் அய்யா!
'சீரியநாள்' என்றண்ணா மகிழ்ச்சி பூண்டார்!

'அய்யாசொல் சரி'யெனவோர் அணிவகுப்பாம்;
அதிலேதான் கலைஞர்இடம் பெற்றுக் கொண்டார்!
'மெய்யாக அண்ணாசொல் மேலாம்' என்று
வேறுசிலர்; நாவலரோ அதிலே சேர்ந்தார்!
எய்யாத அம்புகளாம் ஏட்டின் மூலம்
இருகுழுவும் பேனாவால் தாக்கிக் கொண்டார்!
பொய்யான சுதந்திரத்திற் காக அன்று
போர்க்கோலம் நாமெதற்கோ பூண்டோம் வீணே?

களிப்படைய முடியாத சூழல் கண்டோர்
கழகத்தின் சார்புடைய இதழில் எல்லாம்
வெளிப்படையாய் ஈரணிகள் அமைந்த தீங்கை
விலக்கிடவோ வழியின்றித் திகைத்து நின்றார்!
துளிப்பகையும் மலையளவாய்த் தோன்று மாறு
தூத்துக்குடி மாநாட்டைத் தவிர்த்தார் அண்ணா!
இளிப்போர்க்கும் இடங்கொடுக்கா வண்ணம், அய்யா
இறங்கிவந்தே, அண்ணனுக்கும் அமைதி தந்தார்!

ஈரோட்டில் அண்ணாவின் தலைமை யின்கீழ்
ஏற்பாடு செய்தார்ஓர் தனிமா நாடே!
சீரோடு நடப்பதற்குத் தாமே நேரில்
செயல்புரிந்தார்! அண்ணாவை ஊர்வ லத்தில்
யாரோடும் அமர்த்தாமல் தனியாய் வைத்தே,
இளைஞர்போல் தொண்டரொடும் நடந்தார்அய்ய
தேரோடும் திருவிழாதான்! திருவி. க.வும்
'திராவிடத்தைப் பெறஉழைப்போம்' என்றார் ஆங்கே.

தங்கத்தாம் பாளத்தில் விழுந்த கீறல்;
தடவிவிட்டே சரிசெய்தாற் போலத் தந்தை
'இங்கினிமேல் எனக்குப்பின் அண்ணா வேதான்!
என்பெட்டிச் சாவிஇனி அவரின் கையில்!
பொங்கியெழுந் தார்ப்பரிப்போம்; ஓமந் தூரார்
புகுத்தஎண்ணும் இந்திதனைத் தூள்தூ ளாக்கிச்
செங்குருதி குடந்தையிலே ஓட விட்ட
சிறுமதியோர் ஆட்சியினைச் சாய்ப்போம்!'' என்றார்,

உலகம் போற்றும் உத்தமர் காந்தியைப்
பலகால் நீங்காப் பழியினைச் சுமந்திட
மதவெறிக் கோட்சே மாய்த்தனன் அன்றோ?
இதயந் தாங்கா இப்பே ரிழப்பினால்
தந்தை பெரியார் தனயன்அண் ணாவுடன்
சிந்தை கலங்கிட நொந்தனர்! அரசினர்
கருப்புச் சட்டைப் படைக்கும் ஒருதடை
விருப்புடன் கொணர்ந்து வீராப்புக் காட்டினர்!
தடையினை மீறித் தந்தையின் கட்டளை
முடித்திட அண்ணா முனைந்தே கருப்புச்
சட்டை அணிந்தனர், சட்டம் உடைபட!

அப்போ தெல்லாம் அய்யாவின் ஊடல்
எப்போ தும்போல் இருந்ததென் றாலும்
"பதுங்கிட வில்லை; ஒதுங்கினேன்!" என்றே
முழங்கினர் அண்ணா; முறைஅது தானே?

எல்லாம் இனிதே நிறைவே றிற்றென
நல்லஎண் ணத்தில் நாமிருந் தோமே!
அமைதிக் குப்பின் அடங்காப் புயலொன்று
எமைஎதிர் கொள்ளுமென் றெதிர்பார்க்க வில்லையே!

# கண்ணீர்த் துளிகள்

காலமெல்லாம் தன்மான முரசம் ஆர்த்துக்
கடுஞ்சூறா வளிப்பயணம் மேற்கொண் டெங்கும்
ஓலமிட்டுக் கொள்கைசொன்ன அஞ்சா நெஞ்சன்—
உருக்குலைந்த நோயாளி அழகர் சாமி—
சீலமுடன் ஈரோட்டில் இறுதிப் பேச்சாய்ச்
செயலழிந்து வீழ்ந்தபோதில், உதவி நல்க
ஏலவில்லை அய்யாவால்! அண்ணா தந்தார்!
இதைக்கண்ட தொண்டரெல்லாம் மனங்கு லைந்தார்!

'கனல்கக்கப் பேசியவன் இரத்தம் கக்கிக்
கதியற்றுச் சாவதென்றால், நம்மைப் போன்றோர்
புனல்கக்கும் இருகண்ணும் குளமாய் மாறப்
போக்கற்றுச் செல்வதற்கோ உழைத்தோம்?' என்று
சினம்காட்டி—அன்பழகன், கலைஞர், மற்றும்
சிற்றரசும் அய்யாவின் சீற்றம் பெற்றார்!
இனங்கண்டு கொண்டோமென் றண்ணா கூறி,
எல்லாரும் அமைதிபெறச் செய்து விட்டார்!

கோவையில் முத்தமிழ் மாநாடு கூட்டியே
நாவொலி சுவைக்கும் நம்நண்பர் முழங்கினர்.
அங்கே பேசிய அருமை அண்ணா
சங்கேத மொழியில் தந்தையை நோக்கித்
"திருப்புகழ் மணக்கும் திருவண் ணாமலை
விருப்புடன் சென்ற விந்தைதான் என்னே?
புகையும் எரிமலை போலநா ளெல்லாம்
பகையினைக் கக்கும் தகைஇரா சாசியாம்
இந்திய நாட்டின் இணையிலாத் தலைவரைச்
சந்தித்த தேனோ? சாற்றுக!" என்றார்.
"சொந்தப் பொறுப்பினில் சென்றேன். விவரம்
தந்திட மாட்டேன்" என்றனர் தந்தை!

ஈட்டி பாய்ந்ததோ இதயத் துள்ளே?
கேட்ட அண்ணன் கிறக்கம் எய்தினார்!
திடுக்குற் றார்கள் திராவிடத் தோழர்!
நடுக்குற் றனரே நற்றமிழ் நாட்டினர்!

"வாழ்க பெரியார், வாழ்கென முழங்கி—
வாழ்வைப் பணயமாய் வைத்துஅடி வயிறு
வலிக்கக் கத்தினால் சிலிர்க்குமே மேனி!
ஒலிக்க உரிமை உடையவர், உண்மை
அறிய உரிமை அற்றவர் ஆயினோம்!
சரி"யென அண்ணா சமாளித் திருக்கையில்......

எரிமலை வெடித்தது! இருநிலம் பிளந்தது!
திரைகடல் பொங்கிடப் பெரும்புயல் சுழன்றது!
பெரியார், தமக்குப் பின்னர் வாரிசாய்
அறிவித்த பெயரால் அதிர்ந்தது தமிழகம்!

கணமும் அகலாது கருத்துடன் பேணிப்
பணிவிடை புரிந்த மணியம்மை யாரே
அறக்கட் டளைகள் சிறக்கத் திரட்டிய
பொருளுக் கேற்ற பொறுப்பாள ராவார்!
அண்ணாவும் அல்லராம்! அண்ணனின் மைந்தரில்
மூத்த சம்பத்தும் ஏற்றவர் அல்லராம்!
வணங்கத் தக்க வயதினர் பெரியார்
மணம்புரி வாராம் மணியம்மை யாரை!

ஏடுக ளுக்கோர் இனித்திடும் செய்தியாய்
நாடு முற்றும் நன்குபரப் பினரே!

காஞ்சியில்போய்ப் படுத்துவிட்டார் அண்ணா; வேறு
கதியென்ன, தளபதியே மனமொ டிந்தால்?
தீஞ்சொல்லால் திராவிடத்தின் இளைஞர் கூட்டம்
திரட்டிவந்த தியாகமணி, மௌன மாகப்
பாஞ்சாலி துகிலுரிதல் பார்த்தி ருந்த
பாண்டவர்போல் கழகத்து மானம் போக—
நோஞ்சானாய் எண்சாணும் ஒருசா ணாகி
நொடிந்தவராய்க் குமைந்துருகி நைந்து நொந்தார்

சம்பத்துக் கேமாற்றம்! அண்ணன் பிள்ளை
தானேதான் சரியான வாரி சென்றார்!
நம்பழைய கோவிந்த சாமி, நல்லார்
நடராசன், குருசாமி கூடிப் பேசி
வெம்புமனம் விரோதத்தில் மூழ்கி நிற்க,
விரைந்தோடி அண்ணாவைக் கண்டு கேட்டு,
வம்புசெய்ய வருகவென்றார்: மறுத்தார் அண்ணா!
வரமாட்டேன் போங்களென்றார் வெந்து கொண்டே!

சொத்தெல்லாம் கைப்பற்றிக் கொள்வோம்'' என்று
சூடாக நம்புரட்சிக் கவிஞர் சொல்ல,
''மெத்தசரி'' என்றுசிலர் ஆமோ திக்க,
''விளையாட்டுக் காகவேனும் கூறா தீர்கள்!
சத்தான பெரியாரே நமைவெ றுத்துச்
சக்கையென ஒதுக்கியபின், அழியுஞ் செல்வம்
எத்தனைதான் வந்தாலும் நமக்கேன்? வேண்டாம்!''
எனஎழுந்து சென்னைக்கே வந்தார் அண்ணா!

ஏற்காடு மலைமீதில் இருந்த தந்தை
இயக்கத்து முதியவர்கள் வேண்டு கோளை
ஏற்காமல் திருப்பிவிட்டார்; முப்ப தாண்டாய்
எதிர்ப்புகளைத் துச்சமென ஒதுக்கித் தள்ளித்
தோற்காத தன்மானக் கொள்கை காக்கத்
தொல்லைகளை ஏராளம் அனுப வித்தோர்
நூற்காத பஞ்சுபோல நுடங்கி மீண்டார்—
நூதனமாய் வழிகாட்டும் அண்ணா வின்பால்!

*சென்னைமுதல் குமரிவரை இடையி லுள்ள*
*சீர்மிகுந்த மாவட்டம் வாழும் தொண்டன்*

*''என்னையுமா மறந்துவிட்டார் தந்தை? அந்தோ!*
*என்செய்வேன்? இத்தனைநாள் உழைப்பும் வீணா?*

*சின்னவனாய்த் திரிந்தபோதில் ஈர்க்கப் பட்டுத்*
*தெருவாரின், ஊராரின் திட்டுக் கேட்டு,*

*முன்னெவரும் முன்வராத காலந் தொட்டு*
*முயன்றுபெருங் கூட்டத்தைச் சேர்த்தேன்!'' என்றான்!*

''இவ்வியக் கத்தில் இருக்கிற பெண்டிரில்
அவ்வைபோல் நான்தான் அதிக வயதினள்!
பெரியா ருக்கொரு திருமணம் வேண்டுமேல்
சரியான மணப்பெண் இராமா மிர்தமே!"
என்னையேன் மறந்தார்? என மூ தாட்டியார்
சொன்னார்! சுடச்சுடச் செய்தித் தாள்களில்
அன்று அவர் அறிக்கை சென்றது; ''மிகமிக
நன்றே? இதுநாள் நம்பிய எங்களைத்
தந்தையே வெறுத்தல் தகுமோ? முறையோ?
இந்தக் கொள்கையா ஏற்புடைத் தாம்?''என
நொந்த மனத்தினின்று வந்த **கண்ணீர்த்**
துளிகள் ஆறெனத் தொடர்ந்து பெருகின.

"பெரியார் செய்கை சரியெனச் சொல்பவர்
சிறுபாலர் எனினும், பெருந்தன்மை யோடும்—
துண்டை உதறித் தோளிலே போட்டுத்
தொண்டே முதலாய்த் துணிவே துணையாய்க்
கண்ணீர்த் துளிகள் கண்ணியத் துடனே
எண்ணிய எய்திட ஏகுவோம் வெளியே!
என்னையே நம்பி என்பின் வருவோர்
அன்புடன் வருக; அழைத்துச் செல்வேன்!"
அண்ணன் மொழிந்தார்! அதுவரை அழுதவர்
கண்ணைத் துடைத்துக், கடமை தொடர்ந்திடத்
திண்ணிய நெஞ்சுடன் தென்புபெற் றவராய்ச்
சென்னையில் திரண்டனர் எண்ணிலாத் தோழர்!

நெடுஞ்செழி யன்,செழி யன்,அன் பழகன்,
கனிச்சொல் கருணா நிதி,சிற் றரசு,
ஆசைத் தம்பி,வா ணன்,மதி யழகன்,
பேசும் சம்பத், பாச நடராசன்,
சண்முகம், போளூரார், சாரதி, தேவராசன்,
சம்பங்கி, முல்லைச் சகோதரர், கிருட்ணசாமி,
பேளுக் குறிச்சியார், கிருட்டினன், கண்ணன்,
நீளுயர் இராசமா ணிக்கம், நா ராயணன்,
சித்தையன், திருப்பூர் சுப்பிர மணியம்,
பெத்தாம் பாளையம், ஆவுடை யப்பன்,

முத்து, வள்ளி முத்து, நாஞ் சில் சான்,
நீதிமா ணிக்கம், சாமி, சிவ சாமி,
இராமசுப் பய்யா, முருகு;பெரி யண்ணன்,
பராங்குசம், அன்பில், மணி, அழக முத்து,
இளமுருகு, இராபி, முத்துக் கிருட்டினன்,
இளங்கோ, மன்னை, அரங்கு, சீனி வாசன்,
சண்முக வடிவேல், சுப்பிர மணியம்,
தென்னன், கருணைசமால், விசய ராகவன்,
அடைக்கலம், சின்னத் தம்பி, பெத் தண்ணன்,
இடிக்குரல் அனீஃபா, ஆசாபீர், சோசப்,
சாம்ப சிவம்,முனு சாமி, தங்கவேல்,
செல்வ ராசு,இளம் வழுதி, வில் லாளன்,
கல்யாண சுந்தரம், மணி, மணி மொழியார்,
அண்ணா மலையுடன் இராச கோபால்,
பார்த்த சாரதி, அரசு, கண் ணபிரான்,
சத்திய வாணி,பொற் செல்வி, அலர்மேல்,
நடிக மணிநா ராயண சாமி,
நடிகர்ரா சேந்திரன், சிவாசி கணேசன்,
பொன்னம் பலனார், ஈழத் தடிகள்—
இன்னும் ஏராளம் (என்னைத் தவிர?) வே!

# முன்னேற்றப் படலம்

நீலமேகம் முன்னிலையில் பழந்தொண் டர்கள்
நெஞ்சொடிந்து சென்னையிலே கூடி னார்கள்!
"சீலமுடன் வேறுகட்சி துவங்கிப்-பேரைத்
திராவிட முன்னேற்றக் கழகம் என்போம்!
காலமெலாம் போற்றிவந்த கொடிதான் ஆனால்
கருமைநிறம் மேல்பாதி, சிவப்பு கீழே!
கோலமிகும் பெரியார்தான் தலைவர்; சொன்ன
கொள்கைகளே நமக்குநெறி என்றார் அண்ணா.

ஆயிரத்தொள் ளாயிரத்து நாற்பத் தொன்பான்
அருந்தந்தை பெரியாரின் பிறந்த நாளில்—
தாயினும்மே லாய்வளர்த்த கழகம் விட்டுத்
தனிக்கட்சி கண்டதொரு விந்தை யன்றோ?
சேயிவரை வாழ்த்துதல்போல் மழையும் பெய்யச்,
சிந்தைநொந்தோர் இராபின்சன் பூங்கா தன்னில்.
"நீயிருந்த நாற்காலி! காலி" யென்றே—
நிறுத்தாமல் கண்ணீரைச் சிந்திச் சொன்னார்!

அய்யாவும் தனிமையிலே தவிக்க வில்லை!
அகலாத வீரமணி, இராசா ராமன்,
மெய்யாய்வே தாசலனார், சனார்த்த னம், தாள்
"விடுதலை"யில் குருசாமி, தொண்டன் யாக்கூப்,
பொய்யாத நரசிம்மன் போன்றார் — தந்தை
புகழ்பரப்ப அந்நாளில் துணிந்து வந்தோர் —
வையாத நேரமில்லை; "மாவட் டத்தில்
வளர்ந்திடுமா, இச்சிறுவர் கூட்டம்?" என்றார்.

"தனியாகக் குடித்தனம்போ! சல்லிக் காசு
தரமாட்டேன்!" எனத்தந்தை சொல்லி விட்டால்......
இனியாது செய்வோம்? என் றிருக்க லாமா?
இளைஞருக்கு வருங்காலம் இருட்டாய்ப் போமா?
கனியாத காய்மனமும் பண்ப டுத்தும்
கருணைவள்ளல் அண்ணாவும் முடுக்கி விட்டார்?
மனிதாபி மானமிகுங் கொள்கை சொல்ல
'மாலைமணி' நாளேடும் துவங்கச் செய்தார்!

அண்ணாவின் அறவழியும் பெரிய நோக்கும்
அனைவரையும் கவர்ந்ததாலே, தமிழ மக்கள்
கண்ணாக இக்கழகம் போற்றும் வண்ணம்,
காசுதந்தும் ஆதரித்தும் வளர்க்க லானார்,
எண்ணாத அளவுக்குக் கிளைகள் தோன்ற,
ஏராள உறுப்பினரும் பெருகக் கண்டு,
புண்ணாகும் நெஞ்சத்தோ டாட்சி யாளர்
பொறாமையுடன் உற்றுநோக்கிக் கண்கா ணித்தார்!

எதிரிகளுக் கிடங்கொடாமல் சொன்னார் அண்ணா:—
"இரண்டுகுழல் துப்பாக்கி யாய்வி ளங்கிச்
சிதறடிப்போம், அய்யாவும் நானும்! எங்கள்
சிந்தனைகள் ஒன்றேதாம்; செயல்இ ரட்டை!
உதிரிகளும், தென்னாட்டார் இரத்த மெல்லாம்
உறிஞ்சிவரும் அட்டைகளும் ஓட வேண்டும்!
முதிராது பொதுவாழ்வில் இறங்க வில்லை!
முதுமையுறாச் சிறுவர்தாம் என்றெண் ணாதீர்!"

# அறப்போர்க்காதை

எழுத்தாலே புரட்சியூட்டி, வீழ்ச்சி யுற்ற
இனமொன்றை எழுச்சிபெறச் செய்து காட்டி,

அழுத்தாமல், மேன்மேலும் கொடுமைக் காரர்
அகலுமாறு பக்குவமாய்ப் பதப்ப டுத்திக்,

கழுத்தின்மேல் கத்திபோலக் காத்தி ருக்கும்
கயவரது முகத்திரையைக் கிழித்துப் போட்டுப்,

பழுத்துவரும் இனவுணர்வை, உரிமை வேட்கைப்
பண்பாட்டைக் காத்தவர்நம் அண்ணா அன்றோ?

இவரெழுத்தால் மருட்சியுற்ற ஆட்சி யாளர்
இவர்நடத்தும் 'திராவிடநாடு' இதழின் மீது

தவறெனவோர் குற்றத்தைச் சுமத்தி னார்கள்!
தக்கதொரு பொறுப்பீட்டுத் தொகையாம் என்றே

அவர்நினைத்த மூவாயி ரத்தைக் கட்ட
ஆணையிட்டார்! வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம்

உவகையுடன் செலுத்தியபின், வேண்டா மென்றே
உயர்நீதி மன்றத்தார் திரும்பத் தந்தார்.

பெற்றஅந்த நன்கொடையைத் தந்த வர்பால்
பெருந்தகையால் நன்றியுடன் அனுப்பி வைத்தார்!
கற்றவர்க்கும் கற்பிக்கும் மேதை அண்ணா
கல்லார்க்கும் களிப்பருளும் பண்பு கொண்டார்
அற்றைநாள் தீட்டியதோர் அரிய நூலாம்
''ஆரியமாயை'' மீதும் வழக்குப் போட்டுப்
பிற்றைநாள் வெளிவந்த தொகுப்பு நூலாம்
''பெரியாரின் பொன்மொழிகள்'' மீதும் போட்டார்!

இருவருக்கும் ஆறுதிங்கள் சிறையும் தந்தார்;
இருவரையும் திருச்சிக்கே அனுப்பி வைத்தார்!
இருவருக்கும் தண்டனையா? உறவு கொள்ள
ஏற்பாடா? அடுத்தடுத்த அறையில் இட்டார்!
இருவருமே மரநிழலில் பகலில் எல்லாம்!
இடையிலொரு பேச்சுமில்லை; பகைமை தன்னைக்
கருவறுக்கத் தின்பண்டம் பரிமாற் றங்கள்!
கண்ணியமோ? பத்துநாளில் வெளியே விட்டார்!

மக்களது கிளர்ச்சிக்கு மண்டி யிட்டு
    மமதை உள்ள ஆட்சியாளர் விடுவித் தாலும்—
சிக்கலொன்று நேர்ந்ததது சிரிப்பு மாகும்!
    சிறையினின்று வெளிவந்த அண்ணா செல்லத்
தக்கவாறு வண்டிதர மறந்தார் தோழர்!
    தந்தைக்கு வந்திருந்த ஊர்தி ஏறி,
மிக்கவொரு சங்கடத்தை வென்று மீண்டார்!
    வேறுகட்சித் தலைவரைப்போல் நடந்து கொண்டார்.

அடுத்துவந்த ஆண்டுகளில் போராட் டந்தான்!
    ஆணவத்தில் ஆடிவந்த ஆட்சி யாளர்
கெடுத்துவந்தார், எழுதுதற்குப்—பேச—எண்ணக்—
    கிட்டியநற் சுதந்திரத்தை! அதையெ திர்த்துத்
தொடுத்துவிட்டார் அறப்போரைத் தடையை மீறித்,
    துவளாமல் நாடெங்கும் தோழர் சென்று
விடுத்தனரே அறைகூவல்? நாட கத்தில்
    வேடமிட்டுக் கைதானார்! அண்ணா வென்றார்!

இங்கர்சால் அமரிக்க நாடு கண்ட
இணையற்ற பகுத்தறிவு வாதி! அன்னார்
எங்கேனும் சொற்பொழிவு நிகழ்த்தச் சென்றால்—
எத்தனையோ பொற்காசு கொடுத்தும் கேட்பர்!
இங்கதுபோல் கட்டணத்தைச் செலுத்தி, அண்ணா,
எண்ணில்லாத் தம்பியரின் பேச்சைக் கேட்கும்
மங்காத புதுமரபை வகுத்துத் தந்தார்;
வரையாது வழங்கிவந்தார் மக்கள், செல்வம்!

வெறுங்கையை வீசி வந்த கழகத் தார்க்கு
வீடொன்று; 'நம்நாடு' நாள்தாள் ஒன்றாம்!
நறுந்தொகையைத் திரட்டுதற்கோ முதல்மா நாடு!
நம்முதவி நாடிவரும் தேர்தல் நாளில்—
"உறும்புதிய வேட்பாளர் நமது கொள்கை
ஒவ்வுமெனக் கையெழுத்துச் செய்து தந்தால்...
எறும்பனைய சுறுசுறுப்பாய் எங்கள் தோழர்
இயங்கிடுவர்" என்றிட்டார்; வெற்றி கண்டார்!

"குடத்திலிட்ட விளக்கனைய குணவா னெல்லாம்
குன்றிலிட்ட விளக்காக உயர்ந்த பின்னர்
முடத்தென்னை போலானார்; மோசம் போனோம்!
முழுப்பயனை எதிரிகளுக் களித்து விட்டார்!
இடத்தைத்தந் தேமாந்தோம்! எதிர்கா லத்தில்
எச்சரிக்கை கொள்வதற்குப் பாடங் கற்றோம்!
புடத்திலிட்ட தங்கமென ஒளிர்வ தற்குப்
போராட்டத் தீக்குதிப்போம்" என்றார் அண்ணா!

"திருத்தணியில் எல்லைமீட்கும் போராட் டத்தில்
தீவிரமாய் இறங்கிநின்ற சிவஞா னத்தை
உரத்தகுரல் நேருபிரான் 'முட்டாள்' என்றார்;
உடன்தொடங்கு புகைவண்டி நிறுத்தப் போர்தான்!
கருத்தெரியக் குலக்கல்வித் திட்ட மொன்றைக்
கற்பித்த இராசாசி முதல்வ ராகார்!
பெருத்தமுதல் டால்மியாவின் பெயர ழித்துப்
பின்கல்லக் குடியாக மாற்றித் தீர்வோம்!

மும்முனையில் இப்போரைத் தொடங்கி விட்டேன்!
முரசறைந்தேன்; வீரரெல்லாம் அணிவ குப்பீர்!
எம்முறையில் ஆண்டிடுவோர் சந்தித் தாலும்,
ஏற்றிடுவோம் சூளுரையை; இனிப்பின் வாங்கோம்!
தம்பிகரு ணாநிதிதான் தலைவ ராவார்!
தளமமைப்பீர் திருச்சியிலே! ஓடும் வண்டி
அய்ம்பத்து மூன்றுசூலை பதினைந் தாம்நாள்
அசையாது! சம்பத்தும் மறியல் செய்வார்!

குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த
குல்லூகப் பட்டருக்குத் தொல்லை யென்றால்,
விலக்கிவிட்டுக் காமராசர் முதல்வ ராக
விளங்கட்டும்; சம்மதமே!'' என்றார் அண்ணா.
கலக்கமுற்றே அம்மாற்றங் கண்டா ரேனும்...
களஞ்சென்ற கலைஞருக்குச் சிறையைத் தந்தார்!
அலைக்கழித்தும், அய்ந்தாயி ரம்பேர் தொண்டர்
அன்றோர்நாள் போராடிச் சிறைபு குந்தார்!

நாவலர், சம்பத், நடராசன், மதி,
ஆவலால் அய்வராம் அண்ணா குழுவைச்
சென்னைச் சிறைக்குள் முன்னரே அடைத்தனர்!
இன்னும் வெளியில் யாரை விடுவரோ?
தலைமைக் கழகமோ தவழும் குழந்தை
நிலைமையில்; அதனை நிர்வகிப் பவர் யார்?
வன்னியர் குலத்திலே வந்தவர் நமக்கு
என்றுமே—
அன்னிய ராகா அருமை நண்பராம்
குணத்தின் குன்று கோவிந்த சாமியைக்
கணத்திலே நினைத்துக் காவலாய் வைத்தனர்!
கண்ண தாசனும் கல்லக் குடிகளம்
நண்ணியே சிறையில் நயந்து நுழைந்தார்.
முன்னரே வந்த சின்னவர் மனோகரன்
நாநயம் மிக்க நல்லபேச் சாளர்.
இதுவரை இருந்த இணையிலாச் சிவாசி
மெதுவாய் நகர்ந்தார்! புதிய வரவாய்ப்

புகுந்தனர் புரட்சி நடிகரும், கொள்கையில்
மிகுந்த விருப்புடன், உகந்தநே ரத்தில்!
அடக்கு முறைகளுக்கு அஞ்சி ஓடாமல்
வடக்கின் அமைச்சர் வரும்போ தெல்லாம்
கருப்புக் கொடிகளைக் காட்டி நமது
வெறுப்பினைப் பலகால் வெளிப்ப டுத்தினோம்!
சாலை யோரக் கல்லூரி போலவே
மாலை வகுப்புகள் நடத்தினார் அண்ணா!
“வெட்ட வெளிகளில் வீராப்புப் பேசுவோர்—
சட்ட மன்றம் நுழைந்திடத் தகுதியோ?”
என்றனர் முதல்வர் காம இராசரும்!
“நன்று, அந்த வழியும் நாடுவோம் விரைவில்!
மக்கள் ஆணையை மதிப்போம்” என்றே
தக்க தருணம் பார்த்தனர் அண்ணனே!

# அண்ணா காவியம்

## IV தேர்தல் காண்டம்

19. களம்புகு காதை

20. பிரிவினை விடுத்த படலம்

21. மீண்டும் இந்தித் தீ

# களம்புகு காதை

திருச்சியிலே நான்குநாள் மாநாட்டுக்குத்
தேர்ந்தெடுத்தார் பந்தயத்துத் திடலை அண்ணா!
மருட்சியுடன் மாற்றார்கள் உற்றுப் பார்த்தார்;
மாபெரிய இடந்தேடல் வீணாம் என்று!
பொருட்காட்சி; பந்தரிலே புதுமை எல்லாம்
புரிவதற்கும் இருதிங்கள் முகாமும் இட்டோம்;
இருட்சிறையின் எதிர்ப்புறத்தில்! அம்பி லாரின்
இணையற்ற துணைவர்கள் தொண்டு கண்டோம்!

அதுவரையில் சட்டமன்ற அருகில் கூட
அணுகாத அரசியலைப் பேணுங் கட்சி,
இதுவரையில் யாராலும் இயலா வண்ணம்
ஈடற்ற மாநாட்டை நடத்திக் காட்டிப்,
பொதுமக்கள் கருத்துக்கு மதிப்ப ளிக்கப்
புதுவழியைக் கையாண்ட கதையைக் கேட்பீர்!
பொதுமுறையில் வாக்களிக்கப் பெட்டி வைத்துப்,
போட்டிருந்த சீட்டுகளை எண்ணிப் பார்த்தோம்!

தேர்தலிலே அடுத்தாண்டு குதிப்ப தற்குத்
தீர்ப்புளித்தார் மாநாட்டில் பங்கு கொண்டோர்!
ஊர்தோறும் பொதுக்கூட்டம் நடத்தி, மேலும்
உருவான கருத்துகளை அறிந்தார் அண்ணா!
"யார்தயவும் வேண்டா! நம் மக்கள் என்றும்
ஏழைப்பங் காளரென நம்மை நம்பி,
ஓர்தருணம் தந்துள்ளார்; முயன்று பார்ப்போம்!
ஒப்பற்ற மக்களாட்சி மாண்பு வெல்லும்!"

"தம்பீவா! தலைமையேற்க வா!" யென் றண்ணா—
தான்வளர்த்த தம்பியருள் ஒருவ ரான
நம்பிக்கை மிகவுடைய நல்ல தொண்டர்
நாவலரை அழைத்ததொரு வரலா றன்றோ!
சம்பத்து மீதிலொரு வதந்தி தோன்ற—
சரியாமல் நிலைத்துளதாய் அவரே சொன்னார்!
அய்ம்பத்தா றாமாண்டிற் கூறி னாலும்
அறுபதிலே மீறிவிட்டார்; பிரிந்து போனார்!

பத்தாண்டாய் ஆண்டவராம் தேசியத்தார்
பதவிதனை வாய்ப்பாகப் பயன்படுத்திச்
சுத்தமாக எதிர்ப்பவரே இல்லா வண்ணம்
துடைத்தெறிந்தார் பொதுவுடைமைக் கூட்டத் தாரை!
அத்தனையும் இளைஞராக அண்ணா தம்பி,
அல்லலெலாம் கடந்துபதி னைந்து பேர்கள்
மொத்தசன நாயகத்தின் மொய்ம்பு காக்கும்
முழுப்பொறுப்பும் ஏற்றவராய் உள்ளே சென்றார்!

துள்ளுகின்ற மாடு, மூக்க ணாங்க யிற்றால்
துடுக்கடங்கும் பான்மைபோல், கழகத் தாரை
எள்ளிநகை யாடிநின்ற 'பெருந்த லைவர்' —
ஈடற்ற சட்டமன்ற உரைக ளாலும்
தெள்ளுசுவைத் தேனருந்தித், தமிழ கத்தார்
திராவிடத்து வருங்காலம் காப்போம் — என்ற
உள்ளத்தைப் பெறக்கண்டும் கலங்கிப் போக
உருப்படியாய் எதிர்க்கட்சி அமைத்தார் அண்ணா!

"வசவாளர் வாழ்க" வெனப் பெருந்தன் மைக்கோர்
வரையறுத்த இரக்ககுணச் சுரங்கம் அண்ணா,
நெசவாளர் துயர்துடைக்கத், தேங்கி நின்ற
நிகரற்ற கைத்தறியின் துணிகள் விற்றும்,
பிசகாமல் கீழ்க்கடலின் கரையைத் தாக்கும்
பெரும்புயலின் சேதத்துக் கீடு தந்தும்,
நசியாமல் தியாகியரின் குடும்பத் தார்க்கு
நல்வாழ்வு நல்கிவந்தும் மனங்க வர்ந்தார்.

பெரியாரின் பேரெதிர்ப்பைச் சமாளித் துத்தான்
பெருமையுடன் பதினய்வர் உள்ளே சென்றார்!
பெரியார்மேல் சுடுசொற்கள் வீசி விட்டுப்
பெரியவராம் நேருபிரான் சென்னை வந்தார்!
"பெரியாரைத் தானே?" என் றில்லை அண்ணா;
"பிடிகருப்புக் கொடி!" எனவே ஆணை யிட்டார்!
பெரிமன அரசினரோ அனைவ ரையும்
பிடித்தடைத்தார் சிறைக்குள்ளே! ஆயின் என்ன?

எஞ்சிநின்ற வீரரெல்லாம் மீனம் பாக்கம்
எழில்விமான நிலையமுதல் இருமருங்கும்
அஞ்சிடாது கருமைநிறக் கொடியைக் காட்டி
அண்ணனிட்ட ஆணைநிறை வேற்றினார்கள்!
வஞ்சியர்க்குத் தென்பளித்தார் வெற்றிச் செல்வி!
மரணஅடி பட்டுவீழ்ந்தார் அரசு! பின்னாள்
செஞ்சிமன்னர் போலிவர்தான் கழகம் தந்த
சென்னைநகர் முதல்தந்தை; விந்தை பாரீர்!

''சீமான்கள் கொலுவிருக்கும் மன்றமாகச்
சென்னைமா நகராட்சி இருந்த துண்டு!
சாமான்யர் நாடாளுங் காலத் தில்,நாம்
சரித்திரத்தை மாற்றலாமே?'' கேட்டார் அண்ணா!
''ஆமாமாம்; அனுமதித்தால் முயல்வேன்!'' என்றார்!
அண்ணனுக்குத் தளபதியாம் கலைஞர் அன்றோ!
''ஏமாந்து போகாதே!'' எனப்ப யந்தார்—
இல்லையன்றோ? வெற்றி தொடர் கதையாய்க்
கண்டோம்!

"வெட்டிவா!" என்றுரைத்தால் கட்டி வந்து;
"வேறென்ன?" எனக்கேட்டே அண்ணன் ஆணை
அட்டியின்றி நிறைவேற்றுந் தம்பி யாக
அருங்கலைஞர் சென்னைமா நகரின் ஆட்சி
கெட்டியாய்க்கை பற்றியதால் அண்ணா கையால்
கீர்த்திமிகுங் கணையாழி அணியப் பெற்றார்!
ஒட்டிஉற வானசம்பத், உள்ளத் துள்ளே
ஒழியாத அழுக்காற்றை நிரப்ப லானார்!

பரந்தமன அண்ணனுக்குத் தொல்லை யாகப்
பல்வேறு செயல்களிலே ஈடு பட்டார்.
நிரந்தரமாய்த் தன்பின்னே வருவா ரென்று
நினைத்தசில தோழரையும் இழுத்துப் போனார்;
உரந்தந்த தலைவனையே ஒதுக்கிச் சென்றார்;
உயர்வென்று தனிக்கட்சி ஒன்று கண்டார்.
மறந்தாற்போல் மாநாட்டு வருமா னத்தை
மறைத்துவிட்டுத் தன்வசமே வைத்துக் கொண்டார்,

முன்னேற்றக் கழகத்தைக் கண்ட பின்னும்
முறைகேடாய்ப் பெரியாரைப் பேச வில்லை...

தந்நேரில் கண்ணியத்தைப் பொதுக்கூட் டத்தில்
தமிழகத்தார் கடைப்பிடிக்க விதைத்த அண்ணா!

பொன்னேபோல் போற்றிவந்த இப்பண் பாட்டைப்
புழுதியிலே வீசிவிட்டார் இளவல் சம்பத்!

என்னேதான் பகைகொளினும் அண்ணன் பேரை
இவர்வாயால் உச்சரித்தார்; எழாமல் வீழ்ந்தார்!

இரண்டொருவர் எதைநினைத்தோ பின்னால் சென்றார்;
ஏதோவோர் புதுக்கட்சி; பெயரே மோசம்!

திரண்டுவரு வார்தொண்டர் என்று பார்த்தால்...
சேர்ந்தவரும் மீண்டும்போய் அண்ணா வின்பால்

மிரண்டுமிக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்!
விரைவாக சம்பத்தும் கலைத்து விட்டுப்

புரண்டுசென்று காமராசர் குழுவில் சேர்ந்தார்;
புழுக்கத்தால் எதிர்காலம் கெடுத்துக் கொண்டார்!

அறுபத்து நான்குதிரு விளையா டல்கள்
அணிசெய்த நான்மாடக் கூடல் தன்னில்,
அறுபத்தொன் றாமாண்டில், மூன்றாம் சுற்றில்,
அழகுடனே மாநிலமா நாடு கூட்டத்
தருகண்முத் துத்தமுக்கம் திடலைக் கேட்டார்.
தரமறுத்தார் நல்லவராம் ஆட்சி யாளர்!
"மறுபடிஓர் நாள்வரும்; நான் பார்த்துக் கொள்வேன்
மறவாதீர்!" என்னுமறை கூவல் விட்டார்!

தேர்தலுக்கு நிதிதிரட்டும் மாநா டாகத்
திருப்பரங்குன் றத்தில்நாம் சிறப்புப் பெற்றோம்.
"யார்தயவும் கோரவில்லை!" என்ற பாங்கை
இன்னொருகால் நிலைநிறுத்திக் கொண்டார் அண்ணா.
நீர்பெருகித் தஞ்சையெல்லாம் மூழ்கி நிற்க,
நேரடியாய்த் தலைமையுரை நிகழ்த்தி விட்டுப்
போர்முனைக்குச் செல்பவர்போல் படகில் சென்றார்!
பொல்லாங்கு களைவதற்கும் உதவி செய்தார்!

கோவையிலும் சிதம்பரனார் பூங்கா தன்னில்
குவிந்தனரே மக்களொரு வெள்ள மாக;
யாவையிலும் சிறப்புமிக்க அம்மா நாட்டில்
எதிர்வந்த தேர்தல்வேட் பாளர் சொன்னார்!
"தேவையுறும் எதிர்க்கட்சி திடமாய் வேண்டும்;
திட்டுதற்கே பிரிந்துசென்றோர் திருந்த வேண்டும்;
சேவையினால் நாம்சிறப்போம்!" என்றார் அண்ணா;
சீர்எண்ணி இராசாசி ஆத ரித்தார்!

அறுபத்தி ரண்டினிலே வந்த தேர்தல்
அளவற்ற மாறுதலைச் செய்த திங்கே!
உறுபதினய்ந் தில்மீண்டும் ஒருவர் கூட
உள்ளேசெல் லாவண்ணம் எதிர்ப்புத் தந்தார்.
செருமுனைவாழ் கலைஞரைத்தான் வெல்ல வில்லை:
சினத்துடனே மற்றவரைத் தோற்க டித்தும்
மருவிலாதார் அய்ம்பதுபேர் சட்ட மன்றில்
மாண்புடனே எதிர்க்கட்சி யாகிச் சென்றார்.

# பிரிவினை விருத்த படலம்

விந்தியத்தின் தென்புறத்தில் அண்ணா என்றால்
விரும்பாத மனிதரில்லை, ஆனால் இந்த
விந்தைமிகு தலைவரையோ வடபுறத்தில்
வெகுசிலரே அறிந்திருந்தார்! நமது தோழர்
சிந்தையணு எவற்றிலுமே நிறைந்திருந்த
திராவிடநாடென்கின்ற இலட்சியத்தை
எந்தவிதம் உலகினுக்கே எடுத்துரைப்போம்?
எழில்வாய்ப்பாய்க் காஞ்சியிலே அண்ணன்தோற்றார்!

நாடாளு மன்றத்திற் கெண்மர் சென்றார்;
நல்லவர்சேர் மாநிலங்கள் அவைக்குள் அண்ணா
ஆடாத தலைகளுமே அசையும் வண்ணம்
அடுக்கடுக்காய் ஆங்கிலத்தில் முரசொலித்தார்.
"வாடாமல் சாலைஓர நடைபாதைமேல்
வசிக்கின்ற ஏழையரின் தூதன் யானே!
"பாடாத குயில்களுக்கும் குரல்கொடுக்கும்
பாட்டாளி வர்க்கத்தின் தோழன்!" என்றார்,

இருபதாண்டாய்த் திராவிடநா டென்னும் கொள்கை
இழையோடும் கழகத்தை நடத்தி வந்தும்,
ஒருபதரும் இஃதென்ன என்று கேட்க—
உண்மையான தேவையாவை எனவி னாவத்—
தருபயன்தான் உளவோஎன் றறிந்து கொள்ளச்—
சற்றேனும் முயன்றதுண்டா? உணர்ந்த துண்டா?
செருபகைவர் அண்ணாவின் விளக்கம் கேட்டும்,
தீய்ப்பதற்கு வஞ்சகமாய்த் திட்ட மிட்டார்.

'அய்ம்பதுபேர் சென்றுவிட்டோம்!' என்ப தாலே
ஆணவமாய் வீற்றிருக்க வில்லை, உள்ளே!
வெம்பிநின்ற மக்களுக்கு விடிவு காண—
விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கக் கோரி—
நம்பிநிற்கும் தொண்டருக்கே ஆணை தந்தார்!
நாடெங்கும் அறப்போராம்; மறியல் ஓர்நாள்!
கம்பிகளுக் கப்புறத்தில் கலயம் ஏந்தும்
கைதிகளாய் இருபதாயி ரம்பேர் நின்றார்!

அண்ணாவே லூரில்; நா வலர்சென் னைக்குள்;
ஆயிரமாய்க் கலைஞருடன் திருச்சிக் குள்ளே!
கண்ணான பொற்செழியன்-மணியன் என்ற
காளையர்கள் இருவருமோ கல்ல றைக்குள்!
புண்ணான கழகத்தார் சிறைக்குள்! நையப்
புடைத்திட்ட கல்நெஞ்சர் கோட்டைக் குள்ளே!
மண்ணாளும் பேராசை படைத்த சீனன்
வஞ்சகமாய் இந்தியாவின் எல்லைக் குள்ளே!

பிரிவினையைப் பேசுவதே பெரிய குற்றம்;
பிடித்தடைப்போம் சிறைக்குள்ளே நீண்ட காலம்!
பிரிவினையைப் பேசுகின்ற கட்சி தன்னைப்
பெரியதொரு சட்டத்தால் தடையும் செய்வோம்!
பிரிவினையைப் பேசிடுவோர் தேர்த லுக்குள்
பிரவேசம் செய்வதையும் தடுப்போம்'' என்று—
சரிவினையே நாடிநின்ற தேசி யத்தார்
சட்டமொன்றும் நிறைவேற்றி மிரட்ட லானார்!

சிந்தனைத்தீ அணையாமல் எரியு மாறு
சிறைக்கோட்டம் எண்ணெயிட்டுக் காக்கு மன்றோ?
பந்தமுடன் தாயுணர்வால் கழகங் கண்ட
பண்புருவாம் அண்ணாவும், மாறி மாறி
எந்தவழி தேர்ந்தெடுப்ப தெனநி னைந்தார்:
''எதுவரினும் சரியென்ற பிடிவா தத்தால்—
முந்திவந்து போராடி மோதிப் பார்த்தால்—
முடிவென்ன? கழகந்தான் ஒழிந்து போகும்!

பாராளு மன்றசன் நாய கத்தைப்
பயின்றுநமக் குற்றதென ஏற்றுக் கொண்டோம்!
பாராட்டும் வண்ணமிந்த அய்ந்தா றாண்டில்
பணிபுரிந்தே அனைவர்க்கும் காட்டி யுள்ளோம்!
நேராகப் பிரிவினைக்கொள் கை, கை விட்டு
நேரத்திற் கியையுமாறு வெளிநாட் டார்கள்
போராட இடங்கொடுக்க மாட்டோம் என்றால்—
போற்றியேநாம் வளர்த்துவந்த கழகம் வாழும்!

தமிழகத்தார் வஞ்சிக்கப் படும்வி தத்தைத்
தயக்கமின்றிச் சட்டமன்றில் தொகுத்துக் கூறித்
தமிழகம்போல் மாநிலங்கள் யாவற் றுக்கும்
தனித்தனியே உள்ளகுறை உணரச் செய்து;
தமிழகத்தார் தொழில்துறையில், வாணி பத்தில்
தழைத்தோங்க அதிகாரம் நிறைய வாங்கத்
தமிழகத்தை வழிகாட்டி யாகக் கொண்டு
தன்னாட்சி உரிமைபெற உழைத்தால் என்ன?''

இவ்விதமாய்ச் சிந்தனைய்யை ஓட விட்டே—
ஈடற்ற முடிவெடுத்துக் கொண்டார் அண்ணா!
கவ்விவரும் போர்மேகக் காரி ருட்டில்
கண்ணியமாய் ஆதரவைத் தெரிவித் தாலும்—
எவ்விதந்தான் பெருந்தன்மை கொள்வார்; ஈரம்
ஏதுமற்ற ஆட்சியாளர்? தண்ட னைநாள்
செவ்விதாக முடிந்தபின்தான் விடுவித் தார்கள்;
சிறுமதியை உலகுக்குக் காட்டிக் கொண்டார்!

முப்படைந்த தலைவரெல்லாம் பதவி நீங்கி
முற்றாத இளைஞருக்கு வாய்ப்பு நல்க
நாப்பறையாய்க் 'காமராசர் திட்டம்' தந்து
நல்லிளைஞர் (?) பக்தவத்ச லத்துக் காக
மாப்புகழ்சேர் கட்சிக்கே தலைவ ராகி,
மாணிக்கம் நேருபிரான் மறைந்த பின்னர்,
வாய்ப்புடனே லால்பகதூர் தலைய மைச்சாய்
வழிவகுத்தார் பசுந்தமிழர் காம ராசர்!

"எல்லையிலே கால்வைத்தான் இழிந்த சீனன்!
எதிரிகளை முறியடித்தல், எங்கள் நோக்கம்!
தொல்லைமிகப் பட்டாலும், துணிவு கொண்டு
தூயகொள்கை பிரிவினையை விட்டு விட்டோம்!
நல்லவண்ணம் ஆதரவைத் திரட்டித் தந்து,
நாட்டினது மானத்தைக் காப்போம்!" என்று
சொல்லிவிட்டார் பேரறிஞர் வேலூ ரின்கண்!
சொரணையுள்ளோர் சூட்சுமத்தைப்
புரிந்து கொண்டார்.

பாரதத்துப் போர்க்களத்தில் கர்ண னோடு
பார்த்தனவன் ஆர்த்தெழுந்து மோதும் போது,
சாரதியாய் வீற்றிருந்த கண்ணன், தம்பால்
சரம்பாய்ந்து வருவதனைத் தவிர்ப்ப தற்கு,
மாரதத்தைக் கீழழுத்தித் திறமை யாக
மைத்துனனைக் காத்தபழங் கதையைப் போல
வீரதத்து வந்தெரிந்து வினைசெய் அண்ணா
விடுதலையைக் கைவிட்டுக், கழகம் காத்தார்!

# மீண்டும் இந்தித் தீ!

கட்டாய இந்தியினை எதிர்த்துத் தானே
கடுவேக அரசியலில் நுழைந்தார் அண்ணா?
வெட்டாத கத்தியினை வீசி, நம்மை
வீழ்த்துதற்கு மய்யஆட்சி பலகால் ஏங்கிப்
பட்டாளங் கூட்டிவந்து, வாலை நீட்டிப்
பண்டிதரின் உறுதிமொழி பறக்கும் வண்ணம்
எட்டாத கொம்புத்தேன் எடுக்க எண்ண...
எழுந்ததுபார் தமிழகந்தான் சிலிர்த்துப் பொங்கி!

ஓய்வின்றி அறுபத்து மூன்றாம் ஆண்டில்
உணர்ச்சியினை எழுப்பியதும் இந்திப் போர்தான்!
''மாய்கின்றேன் போர்க்களத்தில்! தலைவன் கண்ணீர்
வாழ்த்தும் என் கல்லறையில்!'' எனமு ழங்கும்
சாய்வில்லா மறத்தமிழன் கலைஞ ரைத்தான்
தளபதியாய் நியமித்தார் அண்ணா மீண்டும்!
''பாய்கின்ற அரசியல்சட் டத்தொ குப்பின்
பதினேழாம் பிரிவினுக்குத் தீயை வைப்போம்!

பட்டியல்கள் இதோ!'' என்றார்; நாடு முற்றும்
பாய்புலிபோல் வீரரது பெயரைக் காட்டி.
முட்டவரும் மொழிப்பகையை ஒழிப்ப தற்கு
முனைந்திருக்கும் போர்க்குணத்தை விளக்கிச்
சொன்ன
''அட்டியின்றிப் புறப்படுவோம்! முதலில் நானே
அணிநகராம் சென்னையிலே கடலோ ரத்தில்
பட்டப்ப கல்நேரம் தீயை வைப்பேன்!
பலநகரில் பணிதொடரும்!'' என்றார் அண்ணா!

அடுத்துவந்த ஆண்டுக்குள் மாவட் டங்கள்
அணிஅணியாய் ஆளனுப்பித், தீயை வைத்து,
விடுத்திட்ட அம்புகள்போல் தொடர்ந்து சென்று,
வெஞ்சிறையின் அறைகளெல்லாம் நிறைத்துவிட்டா
எடுத்தெறிந்து பேசுவோராம் மதுரை முத்தும்—
இளையவராம் தென்னரசும் நீண்ட வாசம்
தொடுத்தனரே! கலைஞர், நட ராசன், மன்னை
தூண்டிவிட்ட தாகப்பொய் வழக்கும் போட்டார்!

செந்தணலின் வெம்மையிலே சேர்த்துச் சுட்டால்
செம்பொன்னும் கரித்துண்டாய் மாறிப் போமோ?
வெந்துயரம் தந்திடுமோர் சிறைவாழ் வாலே
வீரமிகு நெஞ்சந்தான் சோரம் போமோ?
எந்தவித ஆதிக்கம் சீறிப் பாய்ந்தும்,
எத்தனையோ கொடுமைகளை அடுக்கி னாலும்,
இந்திமட்டும் ஆட்சிமொழி என்ற கொள்கை
எந்நாளும் தென்னாட்டார் ஏற்றல் ஆமோ?

'குடியரசுத் திருநாளில் இந்தி தேவி
கொலுவிருப்பாள் அரியணையில்' என்று கூறி—
முடியரசுக் காலத்தும் காணா வண்ணம்
முடுக்கிவிட்டார் அடக்குமுறை, அறுபத் தய்ந்தில்!
இடியரசா? தடியரசா? இரத்தச் சேற்றில்
இந்நாட்டு வரலாற்றை நனைத்துத் தோய்க்கும்
வெடியரசா? காட்டரசா? என்று மக்கள்
வெதும்பிமனம் உடைந்தார்கள்! விழிப்பும் பெற்றார்

"இத்திருநாள் எமக்கில்லை; துக்க நாளே!
எனினுமதன் முதல்நாளே நமது வீட்டில்
இத்தருணம் நம்எதிர்ப்பைக் காட்டு தற்கே
இருள்கருப்புக் கொடியொன்றை வைப்போம்!''
என்றால்...

மெத்தனமாய், ஆணவமாய், முதல மைச்சர்
"வேடிக்கை பார்ப்பாரோ மக்கள்?'' என்றார்.
சத்தியத்தின் வாரிசுகள் பலாத்கா ரத்தால்
தடியெடுத்துக் கொடியறுத்துக் கலகம் செய்தார்!

தன்னைத்தான் வருத்துகின்ற தியாகத் தைத்தான்
சாந்தகுண அண்ணாவும் கையாண் டாலும்
சென்னையிலும், திருச்சியிலும் தீக்கு ளித்தும்
தியாகமென நஞ்சுண்டும் எண்மர் செத்தார்.
முன்னுமில்லை பின்னுமில்லை உலகில் எங்கும்
மொழிகாக்க இப்பெரிய இழப்புக் கண்டோர்!
இன்னுமிதில் நமக்குடன்பா டில்லை! ஆனால்,
இவர்நோக்கம் தூயதன்றோ? மதித்தோம் நன்கு.

தீக்குளித்துச் சின்னசாமி வழியைக் காட்டச்
சிவலிங்கம் அரங்கநாதன் தொடர்ந்து செல்லப்

பாக்கியமாய்க் கருதினர்வீ ரப்பன், முத்து
படிக்கின்ற மாணவன்சா ரங்கபாணி!

போக்கினரே தம்முயிரை நஞ்ச ருந்திப்
புகழ்தமிழைக் காக்கச்சண் முகமும், முத்தும்!

தூக்கியதுப் பாக்கிரவை துளைக்கச் செத்தான்
துடிப்புள்ள இராசேந்த்ரன் சிதம்ப ரத்தில்!

"அமிழ்தினுமே இனியமொழி; ஆவி போக்கி
அழிந்தாலும் ஆட்சிமொழி இந்தி என்று

தமிழ்நாட்டார் ஏற்கமாட்டோம் என்றும்! எங்கள்
சாம்பலிலும் தமிழ்மணந்து சாக வேண்டும்!

உமிழ்நீரால் குளிப்பாட்டி, ஒதுக்கித் தள்ளி,
உதாசீனம் செய்வோரை ஒருகை பார்ப்போம்!

இமிழ்கடலின் அலைபோல் ஆர்த்து வாரீர்!"
என்றெழுந்தார் மாணவர்கள் கோடி; கோடி!

ஆலடிஅரு ணா,சீனி வாசன், ஆற்றல்
அடலேறு காளிமுத்து, காம ராசன்,
நாலடியார் போல்கணேசன், கோபால் சாமி,
நாவளவன், துரைமுருகன், இரகு மான்கான்,
சீலமுடன் சனார்த்தனமும், இராம சாமி,
சீவாக லைமணி,ரா சாமு கம்மத்,
பாலமுதாஞ் சின்னா,ச தாசி வம்போல்
பற்பலரும் எழுச்சியுடன் இணைய லானார்!

கழகமிந்தப் போராட்டம் துவக்க வில்லை;
கலந்துகொண்டோர் மாணவரே! வியக்கும் வண்ணம்
அழகழகாய் அணிவகுத்து மறியல் செய்தார்!
ஆதிக்க இந்தியினை எதிர்ப்போம் என்று,
பழகுதமிழ்ச் சொல்பயின்றோர் எடுத்துச் சொல்லிப்,
பண்பாக ஊர்வலம்போய் முழக்க மிட்டார்!
முழநீள அரிவாளைக் கொண்டு வெட்டி,
முரடர்கள் கலவரத்தைத் தூண்டி விட்டார்!

இப்பாரே இதற்குமுன்னர் பார்த்தி ராத
இனஎழுச்சிப் போராட்டம்! நாடு முற்றும்
துப்பாக்கிப் பேரிரைச்சல்; துடித்துச் செத்தோர்;
தூள்தூளாய் அங்கங்கள் அறுத்துத் தந்தோர்;
அப்பாவிப் பொதுமக்கள் ஆவி நீத்தோர்;
அங்கிங்கெ னாதபடி எங்கும் ரத்தம்!
எப்போதும் இல்லாமல் மூன்று நாட்கள்
இருப்புவழி வண்டிகளே ஓட வில்லை!

திருப்பூரில், கோவையிலே, திருச்செங் கோட்டில்,
திருக்குமார பாளையத்தில், பொள்ளாச் சிக்குள்
துருப்புகளும் சுடுகின்றார்; சாவில் வீழ்ந்தோர்
தொகையொன்றும் தெரியவில்லை; அமளி எங்கும்!
நெருப்பிட்டார் புகைவண்டி, உந்து வண்டி!
நெற்றியிலே ஒழிகஇந்தி என்ற சொற்கள்
விருப்பமாக எழுதாமல் வண்டி ஓடா!
வெறிச்செயல்கள் கேட்டஅண்ணா எரிச்சல்
கொண்டார்!

காலையிலே பல்துலக்கக் கூட நேரம்
 காணவில்லை; செய்திவந்து சேரச் சேர—
வேலையேதும் செய்யாமல், மயக்க முற்று,
 வீழ்ந்துவிட்டார் படுக்கையிலே அண்ணா! பின்னர்
காலைமுதல் அங்கிருந்த கலைஞர் "அண்ணா!
 கழகத்தார் என்ன செய்வோம்? ஆட்சி யாளர்
வேலையன்றோ கொடுமையெல்லாம்? மாண வர்க்கு
 வேண்டுகோள் விடுத்திடலாம்!" என்றார்; செய்தார்,

மதுவருந்தும் மந்திக்குத் தேளுங் கொட்டி
 வலியெடுத்தால் வாளாஇ ருக்கா தன்றோ!
இதுதெரிந்தும் பக்தவத்ச லத்தைப் போய்நாம்
 ஏனிந்த அடக்குமுறை என்றா கேட்போம்?
பொது, விரிந்த மனப்போக்கால் தமிழ்கற்பித்த
 புதுமையாளர் இலக்குவனார் பிடிக்கப் பட்டார்.
எதுபுரிந்தும் நிறைவுறாமல் இந்தி நோயின்
 இரையாகக் கலைஞரையும் பிடித்துச் சென்றார்!

பிற்காலம் முதலமைச்சராய் வருவ தற்குப்
　　பேறுபெற்றார் என்பதெல்லாம் அறிந்து தானோ
கற்கால மனிதரைப்போல் நடந்து கொண்ட
　　'கனவா'னும் கலைஞரையே கைது செய்து
நிற்காமல் காவலரின் அடைப்பு ஊர்திக்குள்
　　நெஞ்சுவலி மிகுந்திடவே ஏற்றிச் சென்று
முற்காலம் ஊமைதுரை, பிள்ளை, தாசை
　　முடியபா ளயங்கோட்டைச் சிறையில் இட்டார்.

நெல்லையிலே நடந்தபெரும் பொதுக்கூட் டத்தில்
　　நெகிழ்ந்துருகும் நெஞ்சினராய்அண்ணா சொன்னார்:
**''எல்லையிலே என்தம்பி அடைக்கப் பட்ட**
　　**இடமேநான் யாத்திரைசெல் புனித பூமி!''**
சொல்லினிலே சுவையென்ன; உணர்ச்சி யென்ன!
　　சூடுபெற்றுத் தமிழ்மக்கள் புரிந்து கொண்டார்!
தொல்லைதர இந்திவரும் சூது தன்னைத்
　　தொலைத்திடவே முடிவெடுத்தார் அனைத்துக் கட்சி!

பக்தவத்ச லம்புரிந்த கொடுமை கட்குப்
பழிவாங்கித் தோற்கடிக்கத், தேர் தல் வெல்லப்
பத்துலட்சம் நிதிதிரட்ட, வழக்கம் போலப்
பயன்படும்நம் பொருளாளர் கலைஞ ரைத்தான்
சுத்தமாக இறக்கிவிட்டார் அண்ணா! தாமும்
சுற்றுலாவால் சிங்கப்பூர், மலாயா, சப்பான்,
மொத்தமுள்ள தமிழரெல்லாம் மகிழு மாறு
முரசொலித்தார்; உலகமகாத் தலைவ ரானார்!

விருகம்பாக் கத்தில்மா நிலமா நாடு;
வெற்றிமுகம் அங்கேயே தோன்றக் கண்டோம்!
பெருகிவரும் ஆதரவில் காய்தே மில்லத்—
பெரியவராம் இராசாசி—சிலம்புச் செல்வர்
அருகிவிட்ட காமராசர் கட்சி நோக்கி
அறைகூவல் விடுத்திட்டார்! அண்ணா பேச்சால்
உருகிவிட்டார் தமிழகத்தார்! பந்த லுக்குள்
ஊசிகுத்த இடமில்லை; உலகம் அங்கே!

# அண்ணா காவியம்

## V ஆட்சிக் காண்டம்

22. அரியணை ஏறிய காதை

23. முதல்வர்

24. நோய் வீழ் படலம்

25. அவலம் சூழ் காதை

26. விடைபெறு காதை

27. புனிதனைத் தேடி...

# அரியணை ஏறிய காதை

தென்சென்னைத் தொகுதியிலே நாடாள் மன்றத்
தேர்தலிலே ஏன்அண்ணன் ஈடு பட்டார்?
தன்செயல்கள் நாடுமுற்றும் பரவ லாகத்
தம்பியர்க்குக் கிடைப்பதற்கே வாய்ப்பாம் என்றே!
என்செயலால் 'படுத்துக்கொண் டேசெ யிப்பேன்'
என்றுளறிக் காமராசர் தோற்றுப் போனார்!
வன்செயலால் கலைஞரையும் கொல்லப் பார்த்தார்,
வாக்கிழந்தார் அமைச்சராக வீற்றி ருந்தார்!

செல்வாக்கு வளர்ந்துளதா என்ப தெல்லாம்
தெரிவிக்கும் வாக்கெண்ணும் திருநாள் தன்னில்
நல்வாக்குத் தொடர்ந்துவர அண்ணன் முன்னால்
நாங்களெல்லாம் அமர்ந்து, களிப் போடி ருந்தோம்!
பொல்லாத வானொலியோ தொடர்ச்சி யாகப்
பூரிக்கும் வெற்றிகளாய்க் கூறக் கூறச்
சொல்லவொணாத் துயர்சூழத் துடித்தார் அண்ணா
'தோற்றிருக்கக் கூடாதாம் காம ராசர்!'

பெருந்தன்மை யாற்சொன்ன பேருரைதான்
பிறர்யார்க்கும் வாராத தனிமைப் பண்பாம்!
பெருந்தலைவர் முதலாகத் தொண்டர் ஈறாய்ப்
பேசியதும் ஆடியதும் மறந்தா போகும்?
வருந்துவதாற் பயனென்ன? தலைவர் அண்ணா
வந்துற்ற பெரும்பொறுப்பை ஏற்க வேண்டும்!
பெருந்திரளாய் வாழ்த்தவந்த இதழா ளர்க்குப்
பேட்டியிலே கழகத்தின் திட்டம் சொன்னார்.

"பெருமிதமாய்க் கடந்தகாலம் திரும்பிப் பார்ப்போம்
பெரியாரின் கோபசாபம் வளர்க்கக் கண்டோம்;
கருமுகத்தால் குட்டிகளை முட்டி மோதும்
களிறுபோலத் தந்தைநமைப் பழக்கி விட்டார்!
ஒருமித்த கருத்துடனே சுதந்தி ராவும்,
உடைமைபொது வென்போரும், முசுலீம் தாமும்
செருமுகத்து முற்போக்குக் கட்சி யாரும்—
சேர்ந்துநமைப் பெரும்பான்மை யாக்கித் தந்தார்!

"பொறுப்போடு நடந்திடுவோம்; மக்க ளுக்குப்
பொல்லாங்கு நேராமல் காப்போம்" என்றார்.
வெறுப்போடு, தீப்பெட்டி கையி லேந்தி,
வெறிகொண்ட முதலமைச்சர் கோட்டை சென்று
குறிப்பாகக் கோப்புகளில் சிலவற் றைத்தாம்
கொளுத்தினராம்; என்ன பெருந்தன்மை? ஆகா!
மறுப்பாரோ? மாநிலத்தில் இதுபோல் யாரும்
மக்களது தீர்ப்பினையே மறைப்பார் உண்டோ?

"தமிழாய்ந்த தமிழ்மகன்தான் தமிழ கத்தின்
தலையமைச்சாய் வரவேண்டும்" என்று பாடும்
தமிழ்க்கவிஞன் கூற்றுதனை மெய்ப்பிக் கத்தான்—
தமிழறிந்தார் உள்ளமெல்லாம் உவகை பூக்கத்—
"தமிழகத்தின் முதலமைச்சுப் பொறுப்புக் கேற்ற
தலைவனும்நீ!" என்றுரைத்துக் கழகத் தோழர்
தமிழகமே ஆனந்தக் கண்ணீர் சிந்தத்
தக்கவாறு தேர்ந்தெடுத்துப் பெருமை சேர்த்தார்!

# முதல்வர்

அண்ணாவும் பதவியேற்றார், மார்ச்சுத் திங்கள்
ஆறாம்நாள், இராசாசி மண்ட பத்தில்!
கண்ணாரக் காணவந்த தோழ ரெல்லாம்
காவலரால் தடுத்துவைக்கப் பட்டி ருந்தார்.
'மண்ணாளும் மகராசன் வாழ்க!' என்றே
மனமார முழக்கமிட்டார், வெளியே நின்று!
அண்ணாவோ வண்டியேறிப் போய்வி டாமல்—
அனைவரையும் கைகுலுக்கி வணக்கம் செய்தார்!

அன்றுமாலை இராசாசி, காம ராசர்,
ஆண்டபக்த வத்சலனார் அனைவர் பாலும்
சென்று மாலை சூட்டிவந்தார்! பெரியார் மட்டும்
திருச்சியிலே இருந்ததனால், மறுநாள் போனார்.
ஒன்றுமே ஓடவில்லை; எதிர்த்த தன்னை
ஒதுக்காத மகன்வரவால் வெட்கங் கொண்டு
'நன்றுநன்று' என்றுரைத்தார் தந்தை! மீண்டும்
நல்லவுண்ணம், நீடித்த பிணைப்புக் கண்டோம்!

உழைப்புக் கொடையை உவந்து நல்கிட
பிழைப்புத் தொழிலுக் கப்பால் பெரியதோர்
சீரணிப் படையைப் பேரறி வாளர்
சீருடன் துவக்கினார் ! செம்படை யென்றே
அஞ்சியோர் அய்யம் பஞ்சாய்ப் பறந்திட
விஞ்சிடும் தொண்டினால் மேவியது அப்படை!
குடிசை வாழ்வோர் அடிக்கடி தீயினால்
மடிவதும் குடிசை எரிவதும் தடுத்திடத்
தீப்பிடிக் காத சிக்கன வீடுகள்
ஏற்பாடு செய்துஅவர் இடம்பெயர்த் தமர்த்தினார்!
பயமறி யாமல் சுயமரி யாதைத்
திருமணம் புரிந்து நறுமண வாழ்வில்
திளைத்திட உரிமை அளித்திடும் சட்டம்
இயற்றினார்; தந்தைநம் முயற்சிபா ராட்டினார்!
இமிழ்கடல் வேலித் தமிழகம் இதனை
முதிரா அறிவினர் மதரா சென்றனர்!

தளர்ந்த நோயிலும் கிளர்ந்தெழுந் தண்ணா
அமிழ்திலும் ஆற்ற இனியநற் பெயரால்
தமிழ்நா டென்றார்; தமிழர் வாழ்த்தினர்!
தாய்க்கே பெயரைத் தகைமையாய்ச் சூட்டுமிச்
சேய்க்கிணை யானவர் செகத்தினில் ஏது?
முதலைகள் போன்ற முதலா ளிகளால்
பேருந்து வருவாய் பிறர்க்குதவ வில்லை;
நாட்டுடைமை யாக்கும் நல்லதிட் டத்தைப்
போட்டுக் காட்டினார் புதுமை தொடர்ந்ததே!
சென்னையை ஆண்ட முன்னவர் செய்த
தீமையின் உருவாய்த் திகழ்ந்தது கூவம்!
மூச்சு விடாமல் மூக்கைப் பிடித்துச்
சேச்சே என்றோர் சிரித்திடும் வண்ணம்
மணக்கும் கூவமாய் மாற்றிட வழிமுறை
கணிக்க உதவினார் கனிவுடன் அண்ணன்
அன்னை காவிரி சென்னை வரவும்,
பொன்னி நதியின் புகழ்நன் னீரை
அனைவரும் அருந்தி மனமகிழ் வுறவும்
இனியாதார் திட்டம் இயற்றித் துவக்கினார்!

மதுரைஅண் ணாமலைப் பல்கலைக் கழகங்கள்
அதுவரை அறியாப் பட்ட. மளிப்புரை
வழங்கிப் புதிய வரலாறு படைத்தார்!
அன்னையாம் தமிழை அரியணை ஏற்றிட
முன்னரோ பின்னரோ கண்ணுறா வண்ணமாய்
இரண்டாம் உலகத் தமிழ்மா நாட்டினில்
திரண்ட மக்களும் தேறா மக்களும்
புரிந்து கொள்ளவே புரிந்தனர் செயலே!
ஆர்வம் பெருகிய ஊர்வல நேர்த்தியும்
சீர்தமிழ்ச் சான்றோர்க்குச் சிலைகள் எடுத்ததும்
விந்தையாய் நோக்கிய இந்தியத் தலைவர்
சாகீர் உசேனும் 'ஓகோ' என்றனர்!
இந்தித் திணிப்பினை என்றும் ஏற்றிடோம்!
செந்தமிழ் ஆங்கிலம் சீரிய இரண்டுமே
ஆட்சி மொழியாய் அமைந்திடும் இங்கென
மாட்சியாய்ச் சட்ட மன்றில் மொழிந்த
காட்சிக் குவமை காட்ட இய லாதே!

# நோயின் படலம்

அமரிக்க அரசுதந்த அழைப்பின் பேரில்
அரியயேல் பல்கலைக் கழகத் துள்ளே
தமழறிவு மணம்வீசும் குறள்ப ரப்பிக்
கருதரிய கல்வியினால் சிறப்புப் பெற்றார்!
சமயமிது நழுவிடாமல் ஐரோப் பாவின்
சால்புமிகு நாடுகட்கும் சென்று மீண்டார்!
இமயமுதல் குமரிவரை அண்ணா என்றால்
யாவருமே புகழ்ந்தேத்த உயர்ந்து நின்றார்!

ஊழியராய் அரசுதனில் பணிபு ரிந்தால்
ஓய்வுபெறும் வயதினிலே ஆட்சி ஏறிக்—
கோழியும்தன் குஞ்சுகளைப் பேணுதல் போல்
குறைவின்றித் தம்பியரைப் பாது காத்து,
வாழியென வாழ்த்துவோரும், ஒழிக என்று
வைவோரும் உடன்பிறப்பே எனம தித்துப்—
பாழுடலின் நோய்பற்றிக் கவலை யின்றிப்
பாரத்தைச் சுமந்ததனால் நைந்தார் அண்ணன்!

மருத்துவர்கள் ஆராய்ந்து பார்க்கா வண்ணம்
மறைப்பதனால் நோய்வலிமை குறைந்தா போகும்?
பொறுத்தருளும் ஏசுபிரான் சிலுவை போலப்
பொல்லாங்கைத் தமக்குள்ளே சுமந்த தால்தான்
திருத்தமுற மேல்நாட்டில் சோதிக் காமல்
தீங்குடனே திரும்பிவந்தார் அண்ணன்! இங்கே
பொருத்தமுடன் பட்டமளித் துயர்த்தும் போதும்
போய்ப்பெறவும் இயலவில்லை நலிந்து விட்டார்!

தளிர், இலையாய்ப், பழுப்பாகிச், சருகாய் மாறல்
தவிர்க்கவொண்ணா இயற்கைவிதி எனினும்,
அண்ணா,
குளிர்பதன அறைவெறுத்துச் சொந்த வீட்டில்
குடியிருக்கும் கொள்கைவழி நிற்ப தற்கே
அளித்தவிலை மிகப்பெரிதாம்; அரிதாம்; அந்தோ!
அவர்உயிரைப் பணயமிடல் என்ன நீதி?
எளிமைமிகத் தேவைதான்! எளிதில் கிட்டா
எம்தலைவன் வாழவேண்டும், யாங்கள் வாழ!

மறுபடியும் அமரிக்கா சென்ற போழ்தில்
மருத்துவராம் மில்லரிடம் சிகிச்சை பெற்றார்.

அறுபதாம் பிறந்தநாளில் திருச்சி—தஞ்சை
அண்ணனுக்குச் சிலையெடுத்த அதேநேரத்தில்...

அறுவையெல்லாம் நன்முறையில் முடிந்த தாக
அறிவித்தார் நம்கலைஞர்! களிப்பில் மூழ்கிப்

பொறுமையுடன் காத்திருந்தோம் வருகைக் காகப்—
பொல்லாங்கு தொடருமென அறிந்தோ மில்லை!

எண்பதாண்டு கடந்தவர்போல் அண்ணன் மீண்டார்!
ஏனென்று புரியவில்லை; வந்தால் போதும்—

கண்குளிரக் காண்பதொன்றே நிறைவளிக்கும்!
காலமெல்லாம் அவர்நிழலில் குளிர்ச்சி கண்டோம்.

மண்பெருமை நிலைப்பதற்கும், மாதா வுக்கு
மகனாற்றும் கடமையினை முடிப்ப தற்கும்.

ஒண்புகழ்சேர் தமிழ்நாடென் றுரக்கக் கூவி
உடல்நிலையைக் கருதாமல் நிறைவு செய்தார்!

பொங்கலெனில் தமிழர்க்குத் திருநாள் என்று
புதுமெருகு தந்தஅண்ணன் அந்த ஆண்டுப்
பொங்கலினைக் காஞ்சியிலே சுவைக்க எண்ணிப்
போம்வழியில், "கலைவாணர் சிலைவைத் துள்ளோம்,
தங்களது திருக்கரத்தால் திறக்க வேண்டும்;
தமிழ்த்தாயின் கலைமகனைத் தலைம கன்நீ
சிங்காரம் செய்க" என்றார்; இறுதி யாகச்
சிலசொற்கள் பேசிவிட்டுச் சென்றார்; மீண்டார்!

உண்ணவுமே இயலவில்லை; ஒருப ருக்கை
உட்செல்ல வழியில்லை; உடல்மெ லிந்து,
கண்மலரும் ஒளியிழந்து, நடைத ளர்ந்து,
காற்றுக்கு மொட்டைமாடி மீத மர்ந்து,
எண்ணமெலாம் நாடு, மொழி, கழகம், மக்கள்,
என்றிருக்க; அறியார்போல் நடித்து வந்த
அண்ணனுக்கு நிகர்யாரே? அவர்பார்க் காமல்
அமரிக்க மில்லருக்குக் கொடுத்த தந்தி—

எப்படியோ தெரிந்துவிடத்—தமது நோயின்
இயல்புமிக முற்றியதும் புரிந்து கொண்டு,
தப்பிக்க முயன்றிட்ட தம்பி யர்க்குத்
தாமாகத் தென்புதந்தார்; வேலூர் செல்ல
ஒப்பவில்லை! உடனேதான் அடையாற் றில்போய்
ஒழுங்குசெய்தார் ஒரேநாளில் கலைஞர்! அங்கே
எப்படித்தான் விறுவிறுப்பாய் வழக்கம் போல
ஏறுநடை நடந்துசென்றார்; கடைசி யாக!

சித்திரங்கள் தீட்டிடுவார்; சிரித்து, பேசி,
செல்பவர்கள் திகைப்படையத் துயர்ம றைப்பார்!
சத்திரச் சிகிச்சையினை வெற்றி யோடு (?)
சடுதியிலே முடித்து, மில்லர் திரும்பிச் செல்லப்—
பத்திரமாய் அண்ணனுடல் பாது காக்கப்
படைவரிசை போற்பலராய் மருத்து வர்கள்
தமங்கே நின்றதெல்லாம் கனவா? சென்னை
நிறைந்திடவே பறந்துவந்த தமிழ மக்கள்

உறக்கமின்றி, ஊணின்றி, அடையா றெங்கும்
உட்கார்ந்து கிடந்ததெல்லாம் வீணா னாலும்—
மறக்கவொணாக் காட்சியன்றோ? மாநி லத்தில்
மனிதஇனத் தலைவரிலே வேறு யார்க்கும்
சிறக்குமிந்தப் புகழுண்டோ? செல்வாக் குண்டோ?
சீக்கியராம் உச்சல்சிங் காட்டி நின்ற
அறக்குணத்தைப் பாராட்டார் உண்டோ? "என்றன்
ஆருயிரைத் தருகின்றேன்; அண்ணன் வாழ்க!

இரத்தத்தைச் சிறு நீர கத்தைத் தந்தால்
இழப்பினையே ஈடுசெய்யப் பொருந்து கின்றீர்!
உரத்தையெமக் களித்திட்ட தலைவன் வாழ
உயிர்த்தானம் நான்தருவேன், பெற்றுக், காப்பீர்!
மரத்துப்போய் மண்டையிலே மூளை யற்ற
மாக்களையும் மக்களாக்கி வாழ்வு தந்து,
தரத்தையெலாம் உயர்த்தியவன் தலையைத் தூக்கத்
தக்கதென்ன மருத்துவர்காள்? யாவும் செய்வீர்!"

இப்படியெல் லாம்புலம்பும் எளிய தொண்டர்
இருவிழிகள் வறண்டதுதான் மிச்சம்! நாட்டில்
ஒப்பாரும் மிக்காரும் இல்லா வண்ணம்
உயர்ந்துவிட்ட எம்தலைவன் ஓய்ந்தே போனான்!
பிப்ரவரி இரண்டாம்நாள் நடுயா மத்தில்
பேரறிஞன் பாரதிரப் புறப்பட் டானே !!!
ஒப்பாரி வைத்திடவும், நாம், பெண் அன்றே!
உரத்தகுரல் அழுவதற்கும், குழவி அன்றே!

அங்கிங்கெ னாதபடி எங்கும் சுற்றி
அருமைமிகு தமிழினத்தின் பெருமை பாடும்
சங்கீத நாதவொலி நிலைத்து நிற்கத்,
தங்குதடை யில்லாத பாசம் ஊட்டிக்
கங்குகரை காணாத அன்பு மேகம்
கருணைமழை பொழிவதையே நிறுத்திக் கொண்டு
நுங்கம்பாக் கத்திலுள்ள சிறிய வீட்டில்
நுடங்கிவிட்ட கொடுமையென்ன சொல்வோம்;
அந்தோ!

# அவலச் சூழ் காதை

அடித்துப் புரண்டு துடித்துத் துவண்டு
வெடித்த குண்டால் வெருண்ட பான்மையில்
பதறிச் சிதறிப் பாய்ந்து தோய்ந்து
கதறி முட்டி மோதிக் கண்ணீர்
அருவிப் பாய்ச்சலாய்ப் பெருகி ஓடிட
உருவங் குலைந்தே உடைகள் கழலத்
தலையில் முகத்தில் தம்கையால் அறைந்து
நிலையை மறந்து நெட்டுயிர்ப் பெய்தி
மூச்சு விடுதலை முற்றிலும் துறந்து
பேச்சும் புலம்பலும் பிழைபட எழுப்பிக்
குய்யோ முறையோ அய்யோ சாமியென்று
அலறி வீழ்வதால் உலரும் நாவுடன்

புலரும் பொழுதைப் போஎனச் சபித்துத்
தளிரும் இலையும் சருகும் பழுப்புமாய்க்
குளிரில் நடுங்கும் குழவியர் கிழவியர்
மங்கையர் மடந்தையர் அரிவையர் தெரிவையர்
தங்கையர் தாய்மார் சிங்க ஏறுகள்
யாவரும் கூடினர் மேவிடும் ஆவலால்
ஆவியே அனைய அண்ணனைக் காணவே!
விழுவதும் அழுவதும் தொழுவதும் வீழ்ந்தவர்
எழுவதன் முன்னே ஏறி மிதிப்பதும்
என்னுயிர் போயினும் அண்ணனைக் கண்டு
பின்அது போனால் போகட் டும்என
முன்புசெல் வோரைப் பின்புற மிருந்து
வன்புடன் தள்ளினும் அன்புதான் அன்றோ?

எள்ளினைப் போட்டால் எண்ணெய் ஆம்;கண்
கொள்ளாக் கூட்டம்; குவலயம் ஒன்றாய்ச்
சென்னையில் திரண்டதோ? அண்ணனின் உடலை

கண்ணனைக் காத்த முன்னணி அமைச்சரும்
அஞ்சினர் கெஞ்சினர்; அனைவரும் கண்டிட
இராசாசி மண்டபம் ஏறும் படிகளின்
வரிசையில் வைத்தும் பார்த்தனர் மன்னனை!

பரிமளம் இளங்கோ கவுதமன் பாபு
உரிமை பெற்றஉயர் அண்ணியும் மச்சியும்
அழுதனர் அலறினர் என்றே கூறிடின்
முழுவதும் சொன்னதாய் முடியுமோ? இரவெலாம்
கிடைத்த வண்டியைப் பிடித்துக் கொண்டு
வெளியூர் மக்கள் விரைந்தனர் சென்னை!
கூண்டினில் ஏறி மாண்டு மடிந்தோர்
வேண்டா வழியென வெறுக்கவு மில்லை!
நாட்டுநன் மக்களில் ஒன்றரைக் கோடிபேர்
வீட்டுத் தலைவனின் வீதி உலாவினைப்
பார்த்தழக் கூடியே பட்டினி கிடந்தவர்
சீர்த்தியை இங்ஙனம் செப்பியே அண்ணனின்
கீர்த்தியைப் பாடுமே கின்னசுப் புத்தகம்;
ஆர்த்தெழுங் கடலலை அமைதியாய் அழுததே!

# விடைபெறு காதை

சென்னைக்குக் கல்லூரிப் படிப்பிற் காகச்
சேரவந்த அண்ணாவும் நாற்ப தாண்டாய்ச்

சென்னையையே மிகவிரும்பித் தங்கி விட்டார்!
தேர்தலிலே நின்றுள்ளார்; தொழிற்சங் கத்தில்

முன்னவராய்ப் பணிபுரிந்தார்; இந்திப் போரில்
முதன்முறையாய் இங்கேதான் மறியல் செய்தார்!

சென்னையிலே தெரியாத இடமும் இல்லை;
சேரிகளில் அறியாத மக்க ளில்லை!

ஆங்கிலத்தில் முழுவதையுங் கற்றும், அந்நாள்
ஆங்கிலப்பேச் சாளருக்கே மதிப்பிருந்தும்,

ஆங்கிலத்தில் என்றேனும் பேசி னாலும்,
அஃதுமொரு வரலாறாய் அமைந்தி ருக்கும்!

பாங்குமிகும் மொழிப்பற்றால் தமிழில் மட்டும்,
படித்தவரும் பாமரரும் மெச்சு மாறு

வீங்குபுகழ்ப் பேச்சாளர் எனவி ளங்கி
வெற்றிபெற்றார்! அவர்உரையைக் கேளார்
உண்டோ?

வெளிநாட்டிற் கெப்போதோ செல்ல நேர்ந்தால்,
விரைவாக மீள்கின்ற நாட்டுப் பற்றாம்!
எளிமையாகச் சொந்தவீடே இல்லா வண்ணம்
எழில்நகராம் சென்னையிலே நீண்ட காலம்
ஒளியுமிழாச் சிற்றறையில் நண்பர் சூழ
உறங்குவதும், தங்குவதும், விடுதி சென்றே
துளியுணவை அருந்துவதும், திரைப்ப டங்கள்
சோர்வின்றிக் காணுவதும் வழக்க மாகும்!

தாய்நாட்டுக் குரியபெயர் மாற்றஞ் செய்தும்,
தலைநகரில் உரிமையுடன் சிலைகள் வைத்தும்,
ஓய்வேயில் லாதுநம துயர்விற் காக
உழைப்பெல்லாம் நல்கிவந்தும், ஏழை வாழ
ஆய்வுரைகள் அளித்ததுடன், திட்டம் தீட்டி,
அருமையான தமிழ்மக்கள் இதயம் வீற்றும்,
''போய்வருவேன்!'' என்றுரைத்தால் அண்ண னுக்குப்
போகவிடை தருவாரா சென்னை மக்கள்?

உண்ணுவதும், உறங்குவதும், உணர்வெ ழுந்தால்
உல்லாசம் தேடுவதும் விலங்குப் பண்பாம்,
எண்ணுவதும், எண்ணியதைத் திண்மை யோடே
எடுத்தவுடன் செயலாற்றத் துடித்த லுந்தான்
கண்ணியமாய் வாழ்கின்ற மனிதப் பண்பாம்,
கருத்திலிதை மறவாமல் இருத்திக் கொண்டால்,
அண்ணனவர் சொன்னபடி நடந்தோ ராவோம்!
அருந்தாய கத்துக்கே கடமை யாற்ற

மனிதரெனப் பிறக்கின்றோம்! அதைம றந்து,
மனைவி மக்கள் புடைசூழ வாழ்கின் றோமே!
இனிதான பல்சுவைகள் துய்க்கின் றோம் நாம்;
எள்ளளவும் பிறர்க்கிவற்றால் பயன்க ளுண்டா?
புனிதமான எதற்கேனும் விரல சைத்துப்
புகழொளியைச் சிறிதேனும் பாய்ச்சி னோமா?
தனியொருவன் சூரியன்போல் தமிழ்வா னத்தில்
தகத்தகா யம்செய்தான் அறுப தாண்டில்!

வங்கத்துக் கடற்கரையில் கிழக்குத் திக்கில்
வளரஎழும் இளங்கதிரைச் சின்ன மாக்கிச்—

சிங்கத்தின் கம்பீரம், கர்ச்சிக் கின்ற
சிறப்பெல்லாம் தலைவனுக்குப் பண்பாய் ஆக்கித்—

தங்கத்தைப் புடம்போடத் தணலில் வைக்கும்
தன்மையினை நன்மையாக்கும் எங்கள் அண்ணன்

அங்கத்தைச் சந்தனத்துப் பேழை தன்னில்
அழகுகுன்றா தெழிலுடனே அடக்கம் செய்தார்!

இவ்வரிய சிந்தனையைக் கலைஞர் தந்தார்!
எடுத்தாள முன்வந்த அன்னா ருக்குச்

செவ்விதான முன்னறிவு நுணுக்கந் தானே?
சீருடனே அண்ணாவின் சதுக்கம் இன்று

எவ்வெவரும் சென்னைவரின் காண வேண்டும்
இடங்களிலே தலையாய தாய்வி ளங்கும்!

ஒவ்வாத நாத்திகரும் அமைதி நாடும்
ஒப்பற்ற திருவிடமாய் அமைந்தார் அண்ணா!

# புனிதனைத் தேடி

"கடமை, கண்ணியம், கட்டுப் பாடு" இவை
உடைமையாய்த் தந்த ஒப்பிலா முச்சொல்!
அடக்கமாய்ப் பணிகள் தொடக்குதல்; "என்ன
கிடைக்கும்?" எனப்பயன் கேட்பது தவறு!
கட்சியால் எனக்குக் கடுகும் வேண்டா;
கட்சிக் கென்னால் கனிவதும் யாதெனக்
கடமையே கருத்தாய் இடைவிடா துழைத்தபின்
திடமிக உரிமையைத் தேடுதல் நன்று!

மடமையும் வறுமையும் மாய்த்துச் சமூகத்தின்
இடத்தினில் நீதி ஏற்படச் செய்தல்!
எத்தனை இழப்பும் இன்னலும் ஏற்றிடச்
சித்தமா யிருத்தல்! சித்திர வதைசிறைக்
கொடுமைக ளாலும் கொள்கை நழுவா
விடா முயற்சியால் மேற்செல விரைந்திடல்!

தீட்டா விடினும் வைரம் வைரமே;
மீட்டாப் போதினும் வீணை வீணையே!
எண்ணம் பேச்சுடன் இயைந்து செய்கை
கண்ணியம் குன்றிடா வண்ணமா யிருந்திட
வாய்மை உண்மை வற்றா நேர்மை
தூய்மை பொறுமை துணிவு கனிவு
தன்னைப்போலஅன் னியரை மதித்தல்
மென்மையும் வன்மையும் மேன்மையும் நன்மையும்
பெருக்கத்துப் பணிவும் சுருக்கத் துயர்வும்
தருக்கித் திரியாச் சால்பும் வேண்டும்!

வீட்டுச் செய்திகள் வெளியில் விடாத
பூட்டுத் தேவை பொறுப்பினை உணர்த்திட!
ஈட்டியே பாயினும் வாட்டிடும் வன்முறை
தீட்டிய வாளாய்த் திடுமென வீழினும்
குலையா உறுதியும் உலையா மனமும்

அலையாப் பண்பும் அடிப்படைத் தேவை!
பட்டா ளத்தினர் கட்டிக் காத்திடும்
கெட்டிக் குணமே கட்டுப் பாடாம்!
இந்தப் படையினில் என்னை இணைத்திடும்
சிந்தனை மட்டும்என் சொந்த விருப்பம்;
செருமுனை சேர்ந்தபின் அருமைத் தலைவன்
தருமோர் ஆணையைத் தட்டாது கேட்டலே
முறையாம்; முயன்றும் முடியா விடிலோ
விரைவாய் உயிரை விடுதலே நெறியாம்!
இருப்பதோ ஓர்உயிர்; ஏகப் போவதும்
ஒருமுறை தான்; அஃது உயர்வாய்ப் போகலாம்!

"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்!"
போற்றார் யார்இப் புனிதநன் மொழியை?
"எங்கிருந் தாலும் வாழ்கநீ" என்பதும்
மங்காது "வாழ்க வசவாளர்" என்பதும்
எப்பொருள் யார், யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவென

மொழிந்த வள்ளுவன் மூதுரைக்கு மேலும்
கழிபெரும் பொழிப்புரை கழறினன் அண்ணன்!
கொல்லும் பகைவனும் கூட நல்லுரை
சொல்லுதல் இயலும், சுவையுடன் இருப்பின்
கொள்ளுதல் தீமையோ? கூடிக் கெடுத்திடும்
உள்ளுறும் பகையினும் வெள்ளிடை மலையாய்
மாற்று முகாமில் வதியும்சான் றோரை
ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் நன்மையே!
"மறப்போம் மன்னிப் போம்" என மாண்புடைச்
சிறப்பினால் உயர்ந்த செம்மல் உரைத்தனர்!
பெரிய மனிதர் சிறிய தவறுகள்
பெரிய மனிதருக் குரிய முறையிலே
புரிகிறார்; நமக்குப் புரிகிற தெனினும்,
தெரிகிற உண்மையைத் தீப்போல் அணைத்துக்
குளிரச் செய்வதே குணமெனுங் குன்றுமேல்
ஒளியாய் நிற்போர் அளியாம்! வள்ளுவர்

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்று நன்றுள்ளக் கெடுமென உரைத்தனர்!
மறதியால் வருவது மகத்தான இன்பம்,
மறதியில் லாவிடில் மனிதன் விலங்கினம்!
மன்னிப் பருளும் மனம்பெறும் அமைதி
என்னபே ரின்பம்? ஈடிணை யற்றதாம்!
"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போ
தாகூர் வரைந்த தகைநிறை கவிதையும்
"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
திருமூலர் சொன்ன திருமந் திரமும்
நமதண் ணன்அரும் சமதர்ம நெறியாய்
எளிதாய் வழங்கிய கழிபெருங் கொடையே!

இஃதே எமதரும் இலட்சிய மென்று
பல்லாற் றானும் பணியாற் றுதற்கே
நின்வழி நின்று நன்மை பெருக்கஇவ்
அரசினை அமைத்தோம்; விரைவாய்த் திட்டம்
நிறைவேற் றிடவும் நெறிமுறை வகுத்தோம்!

அன்னைத்துல கெங்கும் நினைத்தும் பார்த்திடா
இனித்திடும் செயல்கள் எண்ணில் அடங்கா!
ஒன்றரைச் சாணுள ஓலைக் குடிசை
சென்றது; மாடிச் செங்கற் கட்டடம்
வந்தது! உழுதிட நிலமும், சொந்தமாய்க்
குந்திட மனையும் கொடுத்தது நம் அரசே!
மோழையும் கற்று முன்னணி செல்கிறான்!
ஏழை சிரிக்கிறான்; எவனோ எரிகிறான்!
"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்"
ஞானிபோல் அண்ணா ஏனிதைச் சொன்னாய்?
தேனினும் இனியவுன் தீஞ்சொல் கேட்டு
மிகுதியும் இன்பப் பகுதியில் வாழ்ந்தோம்!
தகுதியுள் ளோரை மிகமிக மேலே
ஏற்றி விட்டநல் ஏணியே! உன்னைப்
போற்றிப் புகழவோ போதாது நேரம்!

ஒளிதனை உமிழும் உன் விழிமலர் கண்டும்,
களிப்பினைச் சிந்தும் உன் கனியிதழ் பேசிடும்
அமுதத் தமிழ்மொழி ஆர்வமாய்க் கேட்டும்,
குமிழ்மூக் குப்பொடி கொள்வதை ரசித்தும்,
கவிதை எழுதெனக் கட்டளை நீயிடத்
தவித்திடும் என்னைத் தட்டித் கொடுக்கும்நின்
கைம்மலர் வருடியும், 'கழுத்தினில் நோயிதைச்
செம்மையாய்த் தே'யெனத் தைலந் தடவியும்,
விருந்தில்என் அருகே அமர்ந்துவே டிக்கை
புரிந்தெனை அருந்திடச் செய்யுமுன் போக்கும்,
என்திரு மணத்தில் இடர்எழத், தவிர்த்து,
முன்னி ருந்துநீ முடித்ததோர் மொய்ம்பும்,
நின்னெதிர் வருங்கால் புன்னகை புரிந்தே
என்முகம் பாராது முன்வரும் தொந்தியைப்
பார்த்துச் சிரிக்குமுன் நேர்த்தியும் நினைத்தே
ஆல்போல் தழைத்தநின் அடியினில் விழுதாய்ப்

பற்கள் துலக்கிடும் அற்ப உதவிபோல்
சிற்சில ஆணைகள் சிரமேற் கொண்டு
செய்தவன், அன்பினை எய்தியோன் உன்னை
மருத்துவ மனைதனில் இருத்திப் பார்த்திட
வருத்தமா கொண்டேன்? மனமே நொறுங்கினேன்!
துன்பங் கண்டு துவளா திருத்தலும்
இன்பங் கண்டு கண்புதைத் திருத்தலும்
கூடா தென்றே கூறினை செம்மொழி
"ஏடா, தம்பி! எடடா பேனா!"
என்றனை; நானும் எடுத்தேன்! இதற்கோ?
சென்றனை! தனியே நின்று நான் தேம்பிப்
புலம்புதற் கென்றே சிலம்புபோல் வாயும்
அழுவதற் கென்றே விழிகளும் படைத்தேன்.
வறண்டு போம்வரை திரண்டநீர் சிந்திப்
புரண்டழு கின்றேன், புனிதனைத் தேடியே!

# பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வில் நிகழ்ச்சிகளின் கால நிரல்

1. அண்ணா பிறந்தநாள் — 1909 செப்டம்பர் 15
2. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்தல் — 1928
3. இராணியம்மாளை மணம் புரிந்தது — 1930 செப்டம்பர் 10
4. எம்.ஏ. பட்டம் பெற்றது—
தந்தை பெரியாருடன் அறிமுகம் — 1935
5. முதல் இந்திப்போர் தளபதி
4 மாத சிறை தண்டனை — 1938
6. தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் எனும் தீர்மானம் — 1938 டிசம்பர் 29
7. காஞ்சியில் திராவிட நாடு பிரிவினை மாநாடு — 1940 ஜூலை 2
8. திருவாரூர் மாநாடு-அண்ணா பொதுச்செயலாளர்-
திராவிடநாடு தனிநாடாக வேண்டும் எனுந் தீர்மானம் — 1940 ஆகஸ்டு 24,25.
9. ''திராவிட நாடு'' இதழ் துவக்கம்-நீதிக் கட்சி மாநாட்டுத் தலைமை ஏற்றல் — 1942
10. முதல் நாடகமான 'சந்திரோதயம்' அரங்கேற்றம்—
நாவலர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியோருடன் சொற்போர் (தீ பரவட்டும்) — 1943
11. சேலம் மாநாடு-திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றவும், பட்டம் பதவிகளை விடவும் 'அண்ணாதுரை தீர்மானம்' — 1944 ஆகஸ்டு 20
12. திருச்சி மாகாணமாநாடு-திராவிடநாடு தனி நாடாக வலியுறுத்தல்-கருப்புச் சட்டைப் படை துவக்கம் — 1945 செப்டம்பர் 29
13. மதுரை கருப்புச்சட்டைப் படை மாநாடு — 1946 மே 11, 12
14. திராவிடநாடு பிரிவினை நாள் கொண்டாடுதல் — 1947 ஜூலை 1

15. "திராவிட நாடு" பத்திரிகை ஜாமீன் வழக்கில் ரூ 3000 அபராதம். 1948 ஜூன் 28
இரண்டாம் இந்தி எதிர்ப்பு மறியலில் சிறைப்படுதல் 1948
16. ஈரோடு தனி மாநாட்டுத் தலைமை 1948 அக்டோபர் 23, 24
17. கோவை முத்தமிழ் மாநாடு 1949 மே 28
18. திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கம் 1949 செப்டம்பர் 17
19. "ஆரிய மாயை" வழக்கில் தண்டனை-திருச்சியில் பெரியாருடன் 10 நாள் சிறைவாசம்-விடுதலையானது 1950 செப்டம்பர் 28
20. முதலாவது தி. மு. க. மாநில மாநாடு, சென்னை (அறிவகம் வாங்கப் பெற்றது) 1951 டிசம்பர் 13, 14, 15, 16
21. கைத்தறித் துணி விற்பனை—மும்முனைப் போராட்டங்களில் 3 மாதம் சிறைசெல்லுதல் 1953 ஜூலை
22. திருச்சி இரண்டாவது தி.மு.க. மாநில மாநாடு (தேர்தலில் நிற்க முடிவு) 1956 மே 17, 18, 19, 20
23. காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரானது 1957 பிப்ரவரி
24. பிரதமர் நேருவுக்குக் கருப்புக் கொடி—சிறைப்படுதல் 1958 ஜனவரி 6
25. சென்னை மாநகராட்சியை தி. மு. க. கைப்பற்றல் 1959 ஏப்ரல்
26. தி.மு.க. பொதுச்செயலாளராக இரண்டாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டது 1960 செப்டம்பர் 17
27. தி.மு.க. மூன்றாவது மாநில மாநாடு, திருப்பரங்குன்றம் (தஞ்சை வெள்ளம்—நேரில் பார்வையிட்டது) 1961 ஜூலை 13, 14, 15, 16
28. மாநிலங்கள் அவையில் கன்னிப் பேச்சு 1962 மே 1

29. விலைவாசி மறியல் போராட்டம்—
வேலூர் சிறை—விடுதலை 1962 அக்டோபர் 24
30. பிரிவினைத் தடை மசோதா மீது உரை—
பரிமளம், இளங்கோ திருமணம்
நடத்தியது 1963 செப்டம்பர் 1
31. அரசியல் சட்ட மொழிப்பிரிவு
எரிப்புப் போராட்டம்-6 மாத சிறை
தண்டனை-சென்னை மத்திய சிறையில் 1964
32. இந்தி ஆட்சி மொழிச் சட்ட
எதிர்ப்பு நாள் 1965 ஜனவரி 25
33. மலேசியா, சிங்கப்பூர், பாங்காக்,
ஜப்பான் பயணம் 1965 ஜுலை
34. முதலமைச்சர் பொறுப்பேற்றல் 1967 மார்ச் 6
35. தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம்
நிறைவேற்றல் 1967 ஜுலை
36. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு
சென்னை 1968 ஜனவரி 3
37. யேல் பல்கலைக்கழகத்தில் சிறப்பு 1968 ஏப்ரல் 15
38. அண்ணாமலைப் பல்கலைக்
கழகத்தில் டாக்டர் பட்டம் 1968 செப்டம்பர் 8
39. சிகிச்சை பெற்று அமெரிக்காவினின்று
திரும்புதல் 1968 நவம்பர் 6
40. 'தமிழ்நாடு' பெயர் சூட்டுவிழா—
பொதுக் கூட்டம் 1968 டிசம்பர் 1
41. கலைவாணர் சிலை திறப்புவிழா 1969 ஜனவரி 14
42. அடையாறு மருத்துவமனை சேர்தல் 1969 ஜனவரி 20
43. நிறைதல் 1969 பிப்ரவரி 3
44 The largest funeral attended by
15 million people-according to Guinness
book of records-1984 Edition 1969 பிப்ரவரி 4

# The Son who named his mother

Anna was born to educate the illiterate,
To enlighten also the idle literate;
He toiled and toiled all day and night
And shed unto their minds the supreme light;
The depressed masses relied on Anna
And the toiling millions worshipped him;
No leader had ever so great an influence
Despite possession of tempting affluence;
Anna was born not with a spoon of silver
Yet with a mightier means-the tongue of silver;
Millions of audience were taken captive
By his power of oration so attractive;
Anna penetrated all the spheres to an extreme
Like drama, story, screen and all the arts so supreme;
He was the son of the Tamil Land
And the father of her modern fame all grand;
The youths he held so spell-bound,
And the students flocked to him all around;
To the teeming millions he was a brother elder
And their guiding friend, philosopher and leader;
Death may take Anna's body away,
But not his spirit that wields its sway;
Anna was a worthy 'son' of Thanthai Periyar,
And actualised his ideals all superior
Anna Christened this land as Tamil Nadu,
And made the Legislature unanimously applaud;
So great a son was our Elder Brother,
Who, in history, ever named his 'Mother.'

**S. Nallarasu**, M.A,.B.T.,

(By Courtesy "Tamil Arasu" September 1982)





**கவிஞர் கருணானந்தம்**  *15-10-1925*

**பூக்காடு, கனியமுது, சுமைதாங்கி** (*கவிதைகள்*)
**தந்தை பெரியார்** (*வாழ்க்கை வரலாறு—உரைநடையில்*)
**அண்ணா—சில நினைவுகள்**
—*உரையாடல் இடையிட்ட உரைநடை ஓவியம்*
**டாக்டர் கோவூரின் பகுத்தறிவுப் பாடங்கள்**
—*மொழிமாற்றம், உரைநடையில்*

மூவேந்தர் அச்சகம், சென்னை-14.